விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித நாணயங்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(K-7546)
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 27 வெள்ளிக்கிழமை (13.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 268

தமிழினம் ஒன்றுபட்டுள்ளது என உலகிற்கு எடுத்துரைக்க

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அனைவரும் ஒன்றிணையுங்கள்

## யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் அழைப்பு



(யாழ்ப்பாணம்)
தமிழினம் ஒன்றுபட்டுள்ளது என உலகிற்கு எடுத்துரைக்க "எழுக தமிழ்" எழுச்சிப் பேரணியில் அனைவரையும் ஒன்றிணையுமாறு யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை ப.யோ.ஜெபரட்ணம் அழைப்பு விடுத்துள்ளார்.

குரு முதல்வரினால் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பிலேயே மேற்படிவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு.

எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படும் "எழுக தமிழ்" நிகழ்வு சிறப்புறவும் இதன் மூலம் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷையாகிய மாண்புடன் கூடிய சுதந்திர வாழ்வுக்கு இந் நிகழ்வு வழிசமைக்கவும் இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகின்றேன்.

கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களாகிய நாம் எமது விடிவுக்காக பல்வேறு

23

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில்

# ஒரு இலட்சம் மக்கள் பங்கேற்பர்

## நோக்கர்கள் கருத்து



(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் குறைந்தது ஒரு இலட்சம் மக்கள் அணிதிரள்கின்ற சூழமைவு ஏற்பட்டுள்ளதாக நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எதிர்வரும் 16ஆம் திகதி தமிழர் தாயகம் தழுவியதாக யாழ்ப்பாண மண்ணில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

நல்லூர் முருகன் ஆலய முன்றலில் இருந்தும் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இருந்தும் காலை 9.00 மணி என்ற சம நேரத்தில் ஆரம்பமாகும் இரண்டு பேரணிகளும் யாழ்ப்பாணம் கந்தர்மடம் சந்தியில் சங்கமித்து பேரெழுச்சியுடன் யாழ்ப்பாணம் முற்றவெளி

23

2 ரூபாயால்
## பாணின் விலை குறைகிறது

(கொழும்பு)
பாணின் விலை நேற்று இரவு முதல் 2 ரூபாயால் குறைக்கப்படும் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

23

காணாமல் போன உறவுகளுக்கு
## நினைவுச்சின்னம் அமைக்குக
### ஐ.நா. குழு கோரிக்கை

(கொழும்பு)
இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை நினைவுகூருவதற்கான நினைவுச் சின்னங்களை அமைக்கும் நடவடிக்கையை இலங்கை அரசாங்கம்

23

இளவாலையில்
## குடுவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
இளவாலையில் குடுவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இளவாலை பொலிஸ் பிரிவின் பணிப்புலம் பகுதியில் வீடு ஒன்

23

## நல்லிணக்கத்தை கையாள்வதில் இலங்கையின் நகர்வு தவறு
### அரசைச் சாடினார் சுமந்திரன் எம்.பி



(கொழும்பு)
பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கை அரசாங்கத்தின் தாமதங்களையும் நல்லிணக்கத்தை கையாள்வதில் அரசாங்கம் தவறவிட்டுவரும் நகர்வுகளையும் தமிழர் தரப்பு கடுமையாக கண்டிப்

23

## மனித உரிமைகளை உறுதிப்படுத்துங்கள்
### இலங்கையிடம் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

(கொழும்பு)
மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி என்பவற்றை உறுதிப்படுத்துவது குறித்த இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் நிகழ்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இலங்கையிடம் வலியுறுத்தியிருக்கும் ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையின் உறுதியான பொருளாதார மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்வதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகவும் உறுதி

23

## படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பம்
### ஆளுநர் சுரேன் ராகவன்



23

## தமிழர்கள் அனைவரும் அணி திரண்டு எழுக தமிழ் பேரணிக்கு வலுச்சேர்ப்போம்
### தமிழர் மரபுரிமைப் பேரவை வேண்டுகோள்

(முல்லைத்தீவு)
தமிழர்கள் அனைவரும் அணி திரண்டு எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு வலுசேர்க்குமாறு தமிழர் மரபுரிமைப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழர் மரபுரிமைப் பேரவையால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக்குறிப்பிலே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு.

தமிழ் மக்கள் பேரவையால் எதிர்வரும் 16.09.2019 திங்கள் காலை 9.00 மணிக்கு

23

**MATHS GROUP CLASSES**
(English Medium and tamil Medium)
Grade **6 - 11**
Mrs. **Tharshan (J.P)**
(Teacher of National School)
**077 454 0529** (177)

ஆட்சேர்ப்பு விவகாரம்

# வலி.கிழக்கு பிரதேச சபை கூட்டத்தில் நேற்று அமளி

வலி.கிழக்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் நேற்று மாலை இடம்பெற்ற போது உறுப்பினர்களிடையே அமளி ஏற்பட்டது.

அதாவது கடந்த மாதம் சுகாதாரத் தொழிலாளி மற்றும் நூலக உதவியாளர்களுக்கான ஆட்சேர்ப்பதற்கான நேர்முகத்தேர்வு இடம்பெற்றது. இதன் போது வலி.கிழக்கு பிரதேச சபையில் நிரந்தர வதிவிடம் இல்லாத ஒருவர் ஆட் சேர்ப்பில் உள்வாங்கப்பட்டமையின் காரணமாகவே இந்த வாதப்பிரதிவாதங்கள் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பான குற்றச்சாட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றதால் விசாரணை முடியும் வரை குறித்த நபரின் ஆட்சேர்ப்பு தவிர்ந்த ஏனைய 10 பேரின் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதாக கூட்டத்தில் ஏக மனதாக நிறை வேற்றப்பட்டது.

(ஞா-10.134)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

எளியமுறை உடற்பயிற்சிகள் எளியமுறை தியானப் பயிற்சிகள்
காயகல்பப் பயிற்சி அகத்தாய்வுப் பயிற்சிகள்

மேற்குறித்த பயிற்சியில் உடல் உளம் உயிர் மனம்சார் பயிற்சியை மேம்படுத்துவதற்கு தங்களின் வருகை அவசியமானதாகும். எனவே தங்களின் வருகையை உறுதிப்படுத்துவதற்கு யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் தொடர்பு கொள்ளவும். மேற்குறித்த பயிற்சியை இந்தியா தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் முதுநிலைப் பேராசிரியர் **S.இந்திரா** அவர்கள் வழங்கவுள்ளார் என்பதை அறியத் தருகின்றோம்.

| | |
|---|---|
| காலம்: | : 14.09.2019 சனிக்கிழமை தொடக்கம் 20.09.2019 வெள்ளிக்கிழமை வரை |
| நேரம்: | : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை |
| பயிற்சிகளை வழங்குபவர்கள் | : மனவளக்கலை பேராசிரியர் S. இந்திரா<br>துணைப் பேராசிரியர் த.நந்தகுமாரன் |


அகத்தாய்வு 1ம் நிலை 14.09.2019 சனிக்கிழமை மற்றும் 15.09.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:0212222772 (C-7588)

# மரண அறிவித்தல்

## செல்லையா தாமோதரம்பிள்ளை

பிறப்பு: 1922.12.25
இறப்பு: 2019.09.10



பளை வீமன்காமத்தை (மாவிட்டபுரம்) பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு தம்பையப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தாமோதரம்பிள்ளை அவர்கள் 10.09.2019 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - காமாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அரியமலரின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா, சிதம்பரப்பிள்ளை, வேலாயுதம், சுப்பிரமணியம், விசயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குணரட்ணம், புனிதவதி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நகுலேஸ்வரி (கனடா) அமரர் நகுலேஸ்வரன், ஞானேஸ்வரி (கமலா), விக்கினேஸ்வரி (குஞ்சு-ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (யோகு), மகேஸ்வரன் (நாதன், ஜேர்மனி) முத்தையா (குஞ்சா, ஜேர்மனி), செல்வராசா (செல்லா, சுவிஸ்), சிவக்கொழுந்து (சிவா), கிருபானந்தன் (ஆனந்தி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்

சிறிஸ்கந்தராஜா (கனடா), இராஜ்குமார், சிறிதரன் (ஜேர்மனி), வனஜா, ஞானேஸ்வரி (ஜேர்மனி), தர்சினி (ஜேர்மனி), வதனி (சுவிஸ்), கோகுலசிங்கம், கார்த்திகா (கவிதா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜனி (கனடா), சிறிதர் (சுவிஸ்), காலஞ்சென்ற மயூரி கிரிதரன் (இந்தியா) ரவிச்சந்திரன் (பவான், ஜேர்மனி), மயூரன் (குட்டி, சிங்கப்பூர்), ஷஜி (சிந்து), திலீப், தினோ (ஜேர்மனி) விஜிதா, விதுஷா, மேனுஜா, தேனுகன், தினேஷ், துவியன் (ஜேர்மனி), லக்சன், அட்சயன், அனன்யா (ஜேர்மனி), அபிராமி, அஸ்வினி, அஸ்விதா (சுவிஸ்), தனுஷாந், கஜிரன், யாதவன், ரசிதா, பகீரதி, ரஜீவினி, அகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் கருணிகா, யாருசன் (கனடா), துசியன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2019) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வைரவர் அடைப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
0770607108 (கிரி). 0777101146 (ஆனந்தி). 0771385445 (தினோ)
(174) அளவெட்டி வடக்கு, தம்பையப்புலம்.

உ
அம்மன் துணை





# மாபெரும் இசை நாடக விழா

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலய மேற்கு வீதியில் அமைக்கப்பட்ட அலங்கார மேடையில் எதிர்வரும் (13.09.2019) வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணியளவில் ஆலய பிரதம குருவும் ஆதீனஹர்த்தாவுமாகிய சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள், மகன் சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தனஞ்சயன் குருக்களின் நேர்த்தியினை முன்னிட்டு

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தின் தயாரிப்பில் தவத்திரு தா.தூ.சங்கரதாஸ் சுவாமிகளின்

'இயம தர்பார்' எனும் **காலனை வென்ற காரிகை** (சாவித்திரி)

எனும் இசை நாடகமும் அதனைத் தொடர்ந்து

**பவளக்கொடி** எனும் இசை நாடகமும் இடம்பெறும்.

குறிப்பு: கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறும்.

**காலம்: 13.09.2019 (வெள்ளிக்கிழமை)**

நாடக நடிக கலைமாமணிகள்
01. அல்லி :- திரு.கு.விஜயகுலசிங்கம்
ஆசிரியர் - நெல்/மகாஜனாக் கல்லூரி
02. அர்ச்சுனன் :- திரு.நா.விமலநாதன்
உப அதிபர் - யாழ்.மத்திய கல்லூரி
03. கிருஷ்ணன் :- திரு.வை.விஜயபாஸ்கர்
விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்
04. தருமர் :- திரு.க.சந்திரன்
ஆசிரியர் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
05. வீமன் :- திரு.அ.குகதாசன் ஆசிரியர் - மெரிஞ்சிமுனை அ.த.க பாடசாலை
06. சகாதேவன்,வனவேடன் :- திரு.வெ.பிரதீபன் (அருங்கலைஞர்)
07. அன்னவேடன் :- வைத்தியர் திரு.ச.கிருபானந்தன்
நாடக கலைஞர் (வலிகாமம் கல்வி வலயம்)
08. பவளக்கொடி :- திரு.ரஜீவ் - (சிறந்த நாடகக்கலைஞர்)
09. சுபத்திரை :- திரு.ந.பவதர்ஸன்- (முகாமைத்துவ உதவியாளர் நெடுந்தீவு பிரதேச செயலகம்)
10. பவளசேனா :- திரு.சு.சபேசன்
ஆசிரியர் - பன்னாகம் மெய்கண்டான் வித்தியாலயம்
11. புலேந்திரன் அர்ச்சுனன் மகன் :- செல்வி சாகினியா
மாணவி - ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
12. தோழி :- திரு.சு.சுகுமார் - அபி வி/தி உத்தியோகத்தர் வேலணை பிரதேசசெயலகம்

**கௌரவம் பெறுவோரை கௌரவிப்பவர்கள்**
ஸ்ரீமான் செல்லையா ஜெயமோகன் (அதிபர் - யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை)
ஸ்ரீமான் பொன்னையா அரவிந்தன் (அதிபர் - யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

**வாழ்த்துரை**
வாழ்நாட் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்
கலாநிதி தம்பிபயையா கலாமணி (சிரேஷ்ட விரிவுரையாளர்)

**இயமதர்பார், காலனை வென்ற காரிகை**
நாடக நடிக கலைமாமணிகள்
இயமதர்மராஜா :- திரு.ச.கிருபானந்தன் - உதவிக்கல்விப் பணிப்பாளர்.(வலிகாமம் கல்வி வலயம்)
சித்திரகுப்தன் :- திரு.அ.குகதாசன் - ஆசிரியர் (மெரிஞ்சிமுனை அ.த.க. பாடசாலை)
சத்தியவான் :- திரு.வெ.பிரதீபன் - அருங்கலைஞர்
சாவித்திரி :- திரு.வெ.ரஜீவ் - (சிறப்பு நாடகக்கலைஞர்)
நாரதர் தோற்றம் :- தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் - மேற்படி ஆலயபிரதமகுரு
நாரதர் எமன் வாதம் :- திரு.விஜயபாஸ்கர் - ஆங்கில விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்

ஆர்மோனியம்: விரலிசைவித்தகர் கே.தவநேசன்
மிருதங்கம்: மரபுக்கலைச்சுடர் திரு.க.முருகையா
சீன்ஸ்மேடை,ஒலி ஒளி அமைப்பு: முத்துராஜா புரொடக்ஷன்ஸ் (தும்பளை,பருத்தித்துறை)
நாடக ஒழுங்கமைப்பு நிர்வாகம்: திரு.யோ.துஸ்யந்தன் ஆசிரியர்(நெல்)யூனியன் கல்லூரி

### எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில்

# அலை அலையாக அணிதிரள்வது தமிழ் மக்களின் கட்டாயக் கடமை

## சமூக விஞ்ஞான ஆய்வு மையம், வடமராட்சி கிழக்குப் பிரஜைகள் குழு கூட்டாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியானது பேரம் பேசலுக்கு அப்பாற்பட்டது! எனவே இதில் அலை அலையாக அணிதிரள்வது தமிழ் மக்களின் கட்டாயக் கடமையாகும் என சமூக விஞ்ஞான ஆய்வு மையம் மற்றும் வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு ஆகியன இணைந்து கூட்டாக அழைப்பு விடுத்தன. எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு ஆதரவு கோரி அந்த அமைப்பினர் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழ்த்தேசியம் இன்று நெருக்கடியான கட்டத்தில் இருக்கின்றது. நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதனையும் தரவில்லை. தமிழர்களின் ஆதரவுடன் செயற்படுகின்ற அரசாங்கத்திலும் கட்டமைப்புசார் இனப்படுகொலை தொடர்கின்றது.

இன அழிப்பு என்பது உயிர்களை அழிப்பது மட்டுமல்ல! ஒரு இனத்தின் இருப்பை அழிப்பதும் இன அழிப்பே! தமிழ்த் தேசத்தை தாங்குகின்ற தூண்களாக இருக்கின்ற நிலத்தைப்பறித்தல், மொழியை அழித்தல், பொருளாதாரத்தை அழித்தல், கலாசாரத்தை அழித்தல் என்பனவும் இன அழிப்பே! இந்த இன அழிப்பு இலங்கை அரசின் தீர்மானம்.

இதனால் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் இன அழிப்பு தொடரும். இந்த இன அழிப்பின் முக்கிய நோக்கம் தங்களைத் தாங்களே ஆளும் தகுதியுடைய ஒரு தேசமாக தமிழ் மக்கள் இருப்பதை அழிப்பதே! இந்த அழிப்பிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும். தேசம் இறைமை சுயநிர்ணயம் அடிப்படையிலான அரசியல் தீர்வை நோக்கி முன்னேற வேண்டும். ஆக்கிரமிப்புக்கள் கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி நகர்கின்றன. பல்வேறு வளங்களைக் கொண்டதும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் தமிழ்த்தாயகத்தின் இன்னோர் மையமுமான முல்லைத்தீவு மாவட்டம் இலக்காக்கப்பட்டுள்ளது. மகாவலி "ட" வலயம் முல்லைத்தீவு நகரம் வரை விரிந்துள்ளது. J வலயமும் K வலயமும் அமுலுக்கு வருமானால் முழு வன்னிப் பிரதேசமும் பறிபோகும் அபாயம் உள்ளது.

வவுனியா வடக்குப் பிரதேசம் ஏற்கனவே பறிபோய்விட்டது. போர்க்குற்றவாளிகளைத்தண்டிப்பது தொடர்பில் எந்த நடவடிக்கையும்இல்லை. காணாமல்போனோர் விவகாரம் தீர்வின்றித் தொடர்கின்றது. நல்லிணக்கத்திற்கான எந்தச் சமிக்ஞையையும் சிங்கள தேசம் காட்டவில்லை.

இலங்கைத் தீவு சர்வதேச நிகழ்ச்சி நிரலுடன் வலுவாகப் பிணைக்கப்பட்டுள்ளது. அண்மைய குண்டுவெடிப்பின் பின்னர் இந்தப் பிணைப்பு மேலும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ் மக்கள் சர்வதேச அரசியலைக் கையாள வேண்டும். உதிரிகளாகவிருந்து சர்வதேச அரசியலைக் கையாள முடியாது.

தமிழ்த் தேசம் எண்ணிக்கையில் சிறிய தேசம்! இதன் காரணமாக அக ஆற்றலை மட்டும் நம்பியிருக்க முடியாது. புற ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அடிப்படைச் சக்திகள் தாயகத்தில் வாழ்கின்ற மக்களும் அதன் நீட்சியாக புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற மக்களுமாவர். சேமிப்புச் சக்திகள் மலையகத் தமிழர், தமிழகத் தமிழர் உட்பட உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவளித் தமிழர்கள். நட்புச்சக்திகள் சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகள். இந்த மூன்று சக்திகளையும் உடனடியாக அணிதிரட்ட வேண்டும். இதற்கு நிலம் - புலம் - தமிழகம் இடையே ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.


தமிழ் மக்களுக்கு இன்று தேவையானது தேர்தல்களின் போது கூத்தடிக்கின்ற அரசியல் கட்சிகளல்ல. மாறாக தமிழ் மக்களுக்கு அனைத்து விவகாரங்களையும் உலகம் தழுவிய வகையில் கையாளக் கூடிய ஒரு தேசிய அரசியல் இயக்கமே தேவையானது. இத்தேசிய அரசியல் இயக்கம் மக்கள் அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் இணைத்தாக இருக்க வேண்டும். ஆனால் மக்கள் அமைப்புக்களின் மேலாதிக்கம் இருக்க வேண்டும். இதற்கு தமிழ் மக்கள் பேரவையை ஒரு தேசிய அரசியல் இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும். எனவே -தேசம், இறைமை, சுயநிர்ணயம் அடிப்படையில் அரசியல் தீர்வை அடைந்து கொள்ள, நாள்தோறும் இடம்பெறுகின்ற பச்சை ஆக்கிரமிப்புக்களை தடுத்த நிறுத்த, அரசியல் கைதிகளை விடுதலை செய்ய, காணாமல் போனோர் விவகாரத்திற்கு தீர்வு காண, இனப்படுகொலை தொடர்பாக நீதி கேட்க, உலகத்தமிழர்களையும் உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்ட, சர்வதேச அரசியலை கையாள, சாதி, மத, பிரதேச, பால் வேறுபாடுகளைக் கடந்த தமிழ்த் தேசத்தை உருவாக்க, தமிழ் மக்கள் பேரவையை ஒரு தேசிய அரசியல் இயக்கமாக கட்டியெழுப்ப, தமிழ் மக்கள் ஒரு தேசமாக அணிதிரள்வது அவசியமாகும் "எழுக தமிழ்" தமிழ் மக்கள் தேசமாக அணிதிரள்வதை வெளிப்படுத்தும்.

எனவே எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.நகரில் இடம்பெறும் "எழுக தமிழில்" அலை அலையாக அணிதிரள்வது தமிழ் மக்களின் கட்டாயக் கடமை. தமிழ்த் தேசியம் பேரம் பேசலுக்கு அப்பாற்பட்டது. பொங்கு தமிழும் பேரம் பேசலுக்கு அப்பாற்பட்டது. எழுக தமிழும் பேரம் பேசலுக்கு அப்பாற்பட்டது!

அதேநேரம் இதே தினத்தில் ஜெனிவாவிலும், அமெரிக்காவிலும், கனடாவிலும், நியூசிலாந்திலும் சென்னையிலும் இடம்பெறும் எழுக தமிழிலும் அவ்வவ் நாடுகளில் வாழும் தமிழ் மக்களையும் முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் அணிதிரளுமாறு வேண்டுகோள் விடுத்தனர். (இ-9)

# எங்களின் அவல நிலையை முழு உலகிற்கும் எடுத்தியம்ப எழுக தமிழில் ஒன்றிணைவோம்

## இந்துமத குரு பீடாதிபதி அழைப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அரசியல் இன, மத, மொழி பேதம் கடந்து தமிழ் மக்கள் அனைவரும் அலைகடல் போல அணிதிரண்டு எங்களின் அவல நிலையை முழு உலகுக்கு எடுத்தியம்ப வேண்டும். இந்த வகையில் எமது அகில உலக சைவக் குருமார் சம்மேளனத்தின் பூரண ஆதரவும் அனுசரணையும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப் பேரணி சிறப்புடன் நடைபெற எனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றேன் என இந்து மதகுரு பீடாதிபதி சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தெரிவித்தார். (இ

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு பல பொது அமைப்புக்கள் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு வலி. கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசம், வளலாய் கடற்றொழிலாளர் சங்கம், வயாவிளான் மீள் குடியேற்றம் மற்றும் சமூக அமைப்பு என்பன தமது பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை யாழில் இடம்பெறவுள்ள எழுக தமிழ் பேரணிக்கு தமிழின உணர்வுள்ள அனைவரும் ஓரணியில் திரள்வது காலத்தின் தேவையாகும். தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்றுவரும் அநீதிகளை நிறுத்த சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ள குறித்த எழுச்சிப் பேரணியில் அனைத்துத் தமிழ் உறவுகளும் கைகோர்த்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமென அந்த அமைப்புக்கள் மேலும் தெரிவித்தன. (இ-10)

# எழுக தமிழினம்




எழுக தமிழினம் எழுக
அடிமை இனம் இல்லை
தமிழினம் என்று எழுக!
உரிமையோடும் பெருமையோடும்
பிறந்தவர் தமிழர் என்று எழுக!
ஆதிக்குடி தமிழ்குடி வாழ்ந்த
இந்நாடு என்று எழுக!
பத்துத்தலை இராவணன் சிவபக்தன்
ஆண்ட இந்நாடு என்று எழுக!
மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்
என்று தியாகி திலீபன் அன்று
சொன்ன வாக்கு மெய்ப்பட எழுக!
உறவுளை இழந்து உடைமைகளை இழந்து
நடுவீதியில் நின்று காலந்தோறும் கத்திக் கதறி
ரத்தக் கண்ணீர் வடித்து போராடும்
உறவுகளின் விடிவுக்காக ஒட்டுமொத்த
தமிழர்களும் ராட்சத புயல்போல எழுக!

ச.பிரநீதன், மட்டுவில்.

## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம் வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான

## கேள்வி விலை கோரல் - 2019/2020

2016.09.04 ஆம் திகதி மேற்படி கேள்வி கோரலின் 2ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயம் பின்வருமாறு திருத்தப்படுகிறது. "விண்ணப்பங்களை 2019.09.05 முதல் 2019.09.19 வரை மு.ப. 9.00- பி.ப 3.00 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலைச் செயலாளர் அறையில் பெற்றுக் கொள்ளலாம்."

தலைவர்.
பிராந்திய பெறுகைக் குழு.
போதனா வைத்தியசாலை.
யாழ்ப்பாணம்.

(C-7587)

## தேசிய சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்



2019 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் தேசிய நிலையில் வெற்றியீட்டிய மாணவிகளான

பி.தமிழ்விழி - இலக்கிய விமர்சனம் (பிரிவு - 05) இரண்டாம் இடம்

சூ.தர்சிகா - வாசிப்பு (பிரிவு-03) இரண்டாம் இடம்

மற்றும் இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்

திருமதி யூடி சண்முகநாதன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

கல்லூரிச் சமூகம் கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவியின் சாதனையை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி

**மேனுஷா சிவகுமார்**



எமது பாடசாலை மாணவி செல்வி மேனுஷா சிவகுமார் அவர்கள் தேசியமட்ட கணித ஒலிம்பியாட் பரீட்சைக்கு தோற்றி 3ஆம் இடத்தைப் பெற்று சர்வதேசப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆறு மாணவர்களில் ஒரேயொரு தமிழ் மாணவியாவார். மாணவியைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேன் மேலும் வெற்றிகள் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
யாழ்ப்பாணம்.

(C-7589)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.

**கனகசபாபதி கனகேஸ்வரன்**

**(யாழ். மேலதிக அரசாங்க அதிபர்)**



மருதங்கேணி பிரதேச செயலாளராக பணியாற்றிய காலத்தில் எமது பாடசாலையின் தேவையை உணர்ந்து வளர்ச்சிக்கு பேருதவி புரிந்து யாழ். மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்ற எமது பிரதேச செயலர் **உயர்திரு கனகசபாபதி கனகேஸ்வரன்** ஐயா அவர்களை மேன்மேலும் பணிகள் சிறக்க வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:- அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை.


## தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்





AMBIKAI JEWELLERY
Kodikamam Road, Nelliyady
Articies ALL Guaranteed and Genuine For Quality Jewels
T.P. 021 226 3285 0776569559

Mayoora
Food Corner
மயூரா பூட்கோனர்
No:21 Bus Stand Nelliyady
0775564810



ஜனனி நகை மாடம் JANANY NAHAI MAADAM
மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி
22கரட் தங்க நகைகள் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.
JANANY NAHAI MAADAM M.M. Street Nalliyady. T.P.0773643289

அருண் ரெக்ஸ் அன்ட் பான்சி பலஸ்
ARUN TEX & FANCY PLACE
Main Street Nelliady T.P. 0212262857 பிரதான வீதி, நெல்லியடி.



29 வருட சேவையில் புதுப்பொலிவுடன்
சிவசக்தி சலூன்
முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
❖ ஆண்,பெண் இருபாலாருக்குமான நவீன சிகை அலங்காரம்
❖ ஆண்களுக்கான பேசியல்
❖ சிகை அலங்காரப் பொருட்கள் விற்பனை
மத்திய மகா வி. வீதி, சிகனல் அருகாமை நெல்லியடி. T.P.0764134988

WESTERN UNION MONEY TRANSFER
NEW AMBIGA STORES
நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்
உள்நாட்டு, வெளிநாட்டு துரித பொதிகள் சேவை.
இல.33, பிரதான வீதி
நெல்லியடி.
newambiga@gmail.com
Mob- 0776679340
Tet. 021 226 3571
Fax- 021 226 4197





# கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தானத்தின் அமுதவிழாக் காணும் இரதோற்சவம்-13.09.2019



## தஞ்சமென வந்தோம் மஞ்சவனப்பதி முருகா!

உலககெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய முருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களை நீக்கும் பொருட்டு மஞ்ச வனப் பகுதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கின்றான். அந்த அருள்மிகு மஞ்சவனப் பதியானுக்கு இன்று தேர்த் திருவிழா. "தஞ்சமென வந்தோம் மஞ்சவனப் பதி முருகா" என்று வழிபட்டு நிற்கும் அடியார்களுக்கு அருளை அள்ளி வழங்கும் முருகன் இன்று தம்முடைய அருட்சக்திகளான வள்ளி தெய்வானை சமேதராக அழகிய சித்திரத் தேரிலே அற்புதமாக ஆரோகணித்து வருகின்ற அழகிய கோலாகலக் காட்சி கொக்குவில் வாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கின்ற முருகப் பெருமான் கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்திலே இன்று எண்பதாவது தடவையாக தேரிலே ஆரோகணித்து வரு கின்றான் என்பது குறிப்பிடத்தக்கது. அழகன் முருகன் இன்று தேரிலே அருட்காட்சி தருகின்ற ஆனந்தக் கோலாகல விழா சிறக்க மஞ்ச வனப்பதியானின் பொற்கமல பாதம் பணிந்து அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம். மேலும் கொக்குவில் வாழ் மக்கள் சீரோடும் சிறப்போடும் பேரோடும் புகழோடும் வாழ வகை செய்ய வேண்டு மென்று முருகப்பெருமானை வாழ்த்தி வணங்குகின்றோம். தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். அந்த வகையில் அடியார்படும் துன்பங்களை அழித் தொழித்து அருள்புரிய வேண்டுமென்று ஆசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,ஆதீன குரு முதல்வர் நல்லை ஆதீனம்.**



## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகப்பெருமானின் திருத் தேர் அமுதவிழா குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்த மடைகிறேன். யாழ். குடாநாட்டிலுள்ள சித்திரத் தேர்களில் மிகவும் பழைமை வாய்ந்த மஞ்சவனப்பதி முருகனின் தேர் மகிமை அறியாதவர்களில்லை. இத்திருக்கோவில் தேர்த்திரு விழா சிறப்பாக நடைபெற முருகப் பெருமானை வேண்டு கிறேன். முருகப் பெருமானின் அடியார்கள் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கிறேன். யான் சிறுவனாக இருந்த காலத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் தொடர் சொற்பொழிவைக் கேட்பதற்கு பெருங் கூட்டமாகப் பக்தர்கள் இவ்வாலயத்தில் கூடுவதனைக் கண்டேன். சீரும் சிறப்பும் மிக்க இத்தலத்தில் சமயச் சொற்பொழிவு ஒரு காலத்தில் முதன்மை பெற்றிருந்தது. இரு தடவை இவ்வாலயத்தில் கந்தபுராணத் தொடர் சொற் பொழிவை யான் ஆற்றும் பேறு கிட்டியது. கொக்குவில் மஞ்சவனப்பதி முருகனின் அற்புதத்தேர் சூரிய, சந்திரர் உள்ள வரை நிலைப்பெற்றுச் சிறக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,**

**தலைவர் , ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.**



## அமுதவிழாக்காணும் சண்முகரின் சித்திரத்தேர்

ஈழவள திருநாட்டின் யாழ்ப்பாணத்தில் கொக்குவில் பகுதியில் அருள் பாலித்து கொண்டிருக்கும் மஞ்சவனப் பதியானின் இரதோற்சவம் இன்றாகும். இன்றைய நன்னாளில் சண்முகப்பெருமானுக்கு அமைக்கப்பட்ட சித்திரத்தேர் எண்பது (80) ஆண்டுகளை தொட்டு நிற்கிறது. இவ் அற்புதமான சண்முகப்பெருமான் தேரேறி வரும் அருங்காட்சியைக் கண்டு வடம்பிடித்து சண்முகப் பெருமானின் அருள்கடாட்சங்களைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்வதோடு மஞ்சவனப்பதியானை நம்பி வருகின்ற அடியார்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்க எல்லாம் வல்ல முருக பெருமானின் பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

**கா.சுதாகரன் தலைவர்,**

**தர்மகர்த்தா சபை.**

## உலகப் பிரசித்திபெற்ற சிற்பத் தேரில் 80 வருடங்களாக வலம் வரும் மஞ்சவனப்பதியான்

ஈழமணித் திருநாட்டின் மகுடம் போல் விளங்கும் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில் முருக வழிபாட்டின் மேன்மையைப் புலப்படுத்தும் ஆலயங்கள் பல இருப்பினும் கொக்குவில் கிராமத்தில் மஞ்ச வனப்பதி எனும் திவ்வியநாமத்துடன் விளங்கும் முருகன் ஆலயமானது முருகப்பெருமானின் அனுக்கிரகத்தினால் யாழ்ப்பாணத்திலுள்ள மிகச் சிறந்த முருகன் ஆலயங்களில் ஒன்றாக மிளிர்கின்றது.

இவ்வாலயம் 1817 ஆம் ஆண்டு ஆகமவிதிப்படி கற்கோயிலாக கட்டப் பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று 1915 ஆம் ஆண்டு ஆலயத்தில் கொடிஸ் தம்பம் அமைக்கப்பெற்று துவாரோஹணமாகிய மஹோற்சவம் சிறப்புடன் நிகழ்த்தப்பட்டது. இருப்பினும் 1938 ஆம் ஆண்டுவரை சண்முகப் பெருமானுக்கு கட்டுத்தேர் இருந்ததே தவிர சித்திரத் தேர் அமையப்பெறவில்லை. இக்குறையை நீக்க வேண்டி தமது குடும்பத்தின் குலதெய்வமாகிய முருகப் பெருமானுக்கு 1938 ஆம் ஆண்டு உயர்திரு. ச. வே. சண்முகம்பிள்ளை அவர்கள் தேர்த் திருப்பணி வேலைகளைத் தமது சொந்தச் செலவில் செய்யத் தொடங்கினார். சித்திரத்தேரை உருவாக்க முருகனின் திருவருளும் கைகூடியது.

இந்திய சிற்பாச்சாரிய குழுவினர் திருவிடைமருதூர் விஸ்வ ஸ்ரீசுப்பிர மணிய ஆச்சாரியார், உடுப்பிட்டி செ. கணபதிப்பிள்ளை ஸ்தபதி ஆகியோர் இணைந்து இத்தேர் வேலைகளை ஆரம்பித்தனர். 1938 ஆம் ஆண்டு ஆவணி மாத திருவோண நட்சத்திரத்தில் கால்கோள் விழாவாக தேர் அச்சு வைக்கப்பட்டது. திருவருளின் திருநோக்கம் அதேமாதம் ச. வே. சண்முகம்பிள்ளைக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கப் பெற்றது. 1939 ஆம் ஆண்டு தேர் வெள்ளோட்ட நன்னாளில் தனது குழந்தைக்கு வள்ளி அம்மை என்னும் நாமம் சூட்டினார்.

சிற்ப வேலைகளில் பற்பல வடிவங்கள் கொண்ட தேர்கள் உண்டு. மஞ்ச வனப்பதி முருகன் ஆலயத் தேரில் உள்ள சிற்பங்களின் வர்க்கமானது கல்கார வேலைப்பாடுகளைக் கொண்ட அமைப்பாகும். (கல்காரம் - தாமரை இதழ்), ஆதி கூர்மம் (ஆமை), ஆதி நாராயணன், ஆதிசேடன் ஆகியன அடியில் ஆதாரமானவையாக உள்ளன. தேரின் முற்புற அடித்தளமாக ஆதி கூர்மம், அதன் முதுகின் மேல் ஆதிநாராயணனும், அவரின் முதுகின் மேல் ஆதிசேடனும் ஆதிசேடனின் முதுகின் மேல் தேரின் வடிவம் ஆரம்பமா வதையும் காணலாம். முன்புறமாக மூன்று பேரின் (கூர்மம், நாராயணன், ஆதிசேடன்) தலைகளையும் பின்புறமாக இவர்களின் பாதங்களையும் காணலாம். இவ்வாறான இரதங்களை ஈழவளத் திருநாட்டிலே மிக அரிதாகவே காணலாம்.

சிற்பக்கலை வேலையாக இருபது கோணங்களும், ஐங்கோணங்க ளில் ஐந்து ஐந்து யாழிகளாக வகுக்கப்பட்டு, இருபது யாழிகளை நிறுத்தியுள்ளமையும், நாற்பது தூண்களால் சூழப்பெற்ற பத்மாசன அமைப்புக்களும் அமைக்கப்பட்டு மிக மிக அற்புதமான விமானத் தூபி பண்டிகைகளும் கொண்டமைந்துள்ளது. இத்தேரின் சிற்ப அமைப்புக்கள் சிலவற்றை நோக் கின் மேல்வாரியாக பெரிய புராணத்தின் காட்சிகள் முழுவதையும் காணலாம். தேரின் முன்புறமாக மயில்மேல் வீற்றிருக்கும் ஆறுமுக வள்ளிதேவசேனா மூர்த்தியும், வலப்புறமாக விநாயகரும், இடதுபுறமாக பைரவரும், குதிரையின் வால் பகுதிக்குள், தேரின் மேல் தட்டில் தேரைச் செலுத்தும் பிரம்மாவும், பிரம்மாவின் இடது புறமாகவும், வலது புறமாகவும் சூரசங்காரக் காட்சிகளையும் காணலாம். மேலும் வாயு மூலையிலே கையனார் சிற்பமும், ஈசான மூலையிலே கண்ணன் குழந்தையாக பூதகியில் பால் குடிப்பதும், பூதகியை வதம் செய்வதுமான சிற்ப வேலைப்பாடுகளையும், கந்த புரா ணத்தின் பல அரியகதைக் காட்சிகளையும் இவ் ரதத்திலே கண்டு கொள்ள லாம். ரதத்திலே செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் யாவும் மிக நேர்த்தியாகவும், பல நுட்ப வேலைப்பாடுகளையும் கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

உயர்திரு. ச. வே. சண்முகம்பிள்ளை அவர்கள் தேரினை தனது சொந்த நிதியினைப் பயன்படுத்தி உருவாக்கி தேர் வலம்வருவதற்கான வீதியையும் அமைத்துக்கொடுத்ததோடு தேர்த்தரிப்பிடத்தையும் அமைத்தார். தேர்த் திருவிழாவின் போது அன்னதானம் வழங்குவதற்காக தனது காணியில் அருணகிரிநாதர் மடத்தையும் அமைத்து, வருடந்தோறும் தேர் உற்சவ நாட்களில் அன்னதான நிகழ்வையும் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.

அவருக்குப் பின் சண்முகம்பிள்ளையின் ஒரே ஒரு மகளான வள்ளியம்மை அருள் பிரகாசமும், அவரது பிள்ளைகளும் ஆலயத் தேர்த் திருவிழாவினை சிறப்பாக செய்து வருகிறார்கள்.

இது போல் இவ்வாலய எழுந்தருளி விநாயகருக்கான சிற்பத்தேர் திருப் பணியை உயர்திரு த. நீதிராசா அவர்களும், சண்டேஸ்வரருக்கான தேர்த் திருப்பணியை திருவாளர் சண்முகரத்தினம் அவர்களும் செய்துள்ளார்கள். ச. வே. சண்முகம்பிள்ளை அவர்கள் ஆலயத்திற்கு செய்த திருப்பணிகள் எல்லாம் இன்றும் மூன்று தலைமுறையாக நிலைத்திருப்பதும் அக் குடும்பத்தினரால் செய்யப்பட்ட கைங்கரியங்கள் எல்லாம் பேணிப் பாதுகாத்து வரப்படுவதும் முருகப் பெருமானின் திருவருள் என்றே கூறலாம்.

**தேர்த்திருவிழா 13.09.2019 வெள்ளிக்கிழமை**
**அபிஷேகம் காலை 5 மணி**
**வசந்தமண்டப பூசை காலை 7மணி**
**சுவாமி தேரில் எழுந்தருளல் காலை 9மணி**



## மஞ்சவனப் பதியின் அழகாம் சித்திரத் தேரின் பவனி...

கொக்குவில் பதியை சிறப்பிக்கும் ஆலயமாக விளங்குவது மஞ்சவனப்பதி. இவ்வாலயம் வரலாற்றில் இடம்பிடித்த திருமுருக கிருபானந்தவாரியார், குமாரசாமிப்புலவர் போன்ற சமய மகான்களின் பாதம் பதித்த பெரும் தலம். இவ்வாலயத்தின் மஹோற்சவ நாளின் இன்று தேர்த்திருவிழா. இலங்கையில் பெரிய தேர் என்று சொல்லக் கூடிய பெருமைக்குரிய சித்திரத்தேர்.

தேரின் அடிப்பாகம் கந்தபுராண வரலாற்றை சிற்பமாகச் செதுக்கப்பட்ட சித்திரத்தேர். அந்தத் தேரின் வரலாற்றில் 80 ஆவது ஆண்டை பூர்த்தி செய்கின்றது. சைவ சமயத்தின் பெருமைக்குரியது. யாழ்ப்பாணம் கந்தபுராண கலாசாரத்தை மையமாகக் கொண்டது.

எனவே கந்தபுராணம் தேரிலே பதித்து வரும் இந்த சித்திரத்தேரின் சிறப்பினை யாவரும் மறக்க முடியாது. அதனை உருவாக்கிய குடும்பத்தினரும் ஆலய குழுவினரும் கொக்குவில் மண்ணும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**அ.உமாமகேஸ்வரன் பணிப்பாளர்,**

**இந்து சமய,**

**கலாசார அலுவல்கள் திணைக்களம்,**



## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி

சீரும் திருவும் பொலியும் புண்ணிய பூமியாம் இலங்கை மணித்திருநாட்டில் மகுடம் எனத் திகழும் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் பகுதியின் மஞ்சவனப்பதி எனும் திவ்விய நாமத்துடன் விளங்கும் முருகப் பெருமானின் வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் இன்று ஆகும்.

மகாப்பிணியில் அகப்பட்டு வருந்தும் அடியவர்களின் வருத்தம் எல்லாம் நீறாகப் போக நின்னருள் புரியும் மஞ்ச வனப் பதி முருகனுக்கு உருகி உருகி உழைக்கும் உண்மை அடியார்களின் துன்பம் எல்லாம் உருகிப் போக கருணைக் கந்தன் இன்று அழகிய சித்திரத் தேரிலே வலம் வருகின்றான்.

அழகிய பழைமைவாய்ந்த சிற்ப வேலைகளுடன் கூடும் சித்திரத் தேர் இன்று அமுதவிழாக் காண்கிறது. முன்பு கட்டுத் தேரில் வலம்வந்த சண்முகப் பெருமான் 1939 ஆம் ஆண்டு முதல் அமரர் ச.வே.சண்முகம்பிள்ளை அவர்களால் இந்தியாவில் இருந்து அழைத்து வந்த ஸ்தபதிகள் மூலம் கலையம்சம் பொருந்திய அழகிய சித்திரத்தேரை உருவாக்கி சண்முகப்பெருமான் வலம்வந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

இவ்வழகிய சித்திரத் தேரில் ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேசநலக் காக்க மஞ்சவனப்பதியான் இன்று தேரேறி வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக காண மனித வாழ்வில் புண்ணியமே செய்யத்தக்கது. பாவம் விலக்கத்தக்கது. அந்த வகையில் இன்று தேர்த்திருவிழா நன்னாளில் அடியார்கள் எல்லோரையும் முருகப் பெருமான் சிறப்போடு வாழ வைக்க வேண்டுமென்று மஞ்சவனப்பதி முருகப் பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து ஆசி கூறி அமைகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

**ஈசான சிவாச்சாரியார் சிவாகம ஞான சாகரம்**
**சிவஸ்ரீ பிரம்மஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வர குருக்கள்**
**மஹோற்சவ குருவும் ஆலய பிரதம குருவும்**

(C-7579)

**மகாலட்சுமி தேநீரகம்**
இல.100 கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

**North Link Engineering**
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீகுகன் பான்சி ஹவுஸ்**
இல.59, நவீன சந்தை
உட்புறம், யாழ்ப்பாணம்.

**கோபுரம் சவுண்ட்**
மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**லக்சுமி வர்த்தக நிலையம்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**நாதன் இரும்பு விற்பனையகம்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**வளர்மதி ரெக்ஸ்ரைல்**
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**செல்வி நகையகம்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பராசக்தி அரைக்கும் ஆலை**
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்மேற்கு, கொக்குவில்.

**சந்தியா சூ பலஸ்**
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

# யாழ்.பல்கலை.ஊழியர் ஆட்சேர்ப்பு விடயத்தில்

# தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அசமந்தம்!

## நீதியரசர் விக்னேஸ்வரனிடம் போராட்டக்காரர்கள் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வருகின்ற முறைகேடான கல்வி சாரா ஊழியர்கள் ஆட்சேர்ப்பு தொடர்பில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்திவரும் ஊழியர்கள் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் எடுத்துரைத்தனர்.**



யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் சுழற்சி முறையில் போராட்டம் நடத்தி வரும் கல்வி சாரா ஊழியர்களை நீதியரசர் விக்னேஸ்வரன் நேரில் சென்று சந்தித்தபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களில் பல்கலைக்கழகத்தில் மூன்று வருடகாலமாக நிரந்தர நியமனம் இன்றி சுமார் 100 பேர் வரை வேலை செய்து வருவதாகவும் அவர்கள் நேர்முகத் தேர்வுக்கான விண்ணப்பங்களை உயர் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கையளித்த போதும் குறித்த நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை.

அதுமட்டுமல்லாது யாழ்.மாவட்டத்தில் இருந்து குறித்த ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பித்த சுமார் 400 பேர் வரையானவர்களுக்கு தற்போது நடைபெற்று வரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை. தற்போது இடம்பெற்றுவரும் கல்விசாரா ஊழியர் ஆட்சேர்ப்பில் யாழ்.மாவட்டத்தைச் சாராத வெளி மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் அதிகம் உள்வாங்கப்பட்ட நிலையில் எமது தமிழ்ச்சமூகத்தின் நிலை தொடர்பில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்கறையற்று உள்ளனர் என்றும் நீதியரசர் விக்னேஸ்வரனிடம் போராட்டக்காரர்கள் எடுத்துரைத்தனர். (இ-10)

## முழு நிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் நிலையத் தலைவர் ம.ரகுநாதர் தலைமையில் இடம்பெறும்.

இக் கருத்தரங்கில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலும் தமிழ் மக்களும் எனும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். (இ-10)

## திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிறுவர் பாராளுமன்றம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிறுவர் பாராளுமன்றம், "சிறுவர்கள் சமூக ஒருமைப்பாட்டின் முகவர்களாகிறார்கள்" என்னும் தலைப்பில், நாளை 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற் பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் இல.286 பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம் பெறும்.

இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்ட், வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தி.குயின்ரஸ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (இ-5)


## வெற்றி-புகழ்-செல்வம் தரும் அதிர்ஷ்ட ஜோதிட சாஸ்திரம்

உங்களின் பிறந்த திகதியும் வாழ்க்கையும்



### 3,12,21,30 ஆம் திகதியில் பிறந்தவர்கள்:

குரு ஆதிக்கம், ஆட்சி பெற்றவர்கள் பெரும்பாலும் இவர்கள் ஆசிரியராக, உபவாசம், சொற்பொழிவு ஆற்றுபவர்களாக உள்ளனர். சாதாரண ஆளாக இருந்தால் தத்துவம் போல் எதையாவது பேசிக் கொண்டிருப்பர். பொதுத் தொண்டில் ஈடுபட்டால் நல்ல தலைவர் என்றும் ஆன்மீகத்தில் ஈடுபட்டால் மகான்களாகவும் புகழ் பெறுவர். இவர்களுக்கு பொதுவாகவே அடக்கம், பொறுமை, பெரியோருக்கு கீழ்ப்படிதல் முதலிய குணங்கள் இருக்கும். எதிர்கால கவலையை விடுத்து, நம்பிக்கையோடு முயன்றால், உழைத்தால் இவர்கள் வெற்றி பெறுவர், கூர்மையான அறிவும், உழைப்பும் இயற்கையாகவே இவர்களிடம் அமைந்திருக்கும். சிறு வயதிலேயே புத்திசாலி என்று பெயரெடுப்பர். 3 ஆம் திகதி பிறந்தவர் புத்திசாலித்தனத்தோடு கூடிய வெற்றி பெறுவர். படிப்படியான முன்னேற்றம் பெறுவர். 12 ஆம் திகதி பிறந்தவர்களுள் கேட்பவர் பிரமிக்கும்படியான பேச்சு உள்ளவர். பிறருக்காக பல கஷ்டங்களையும் சந்தோசத்துடன் ஏற்பர். 21 ஆம் திகதி பிறந்தவர் வாழ்க்கையில் முன்பகுதி சோதனை நிறைந்ததாகவும் பின்பகுதி வெற்றி நிறைந்த வாழ்க்கையாகவும் இருக்கும்.


## இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சந் | இராசி பலன் கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் | | சூரி, செவ் |
| சனி, கேது | குரு | | சுக், புத |

13.09.2019

ஆவணி 27, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.27 மணிக்கு

சதுர்த்தசி முற்பகல் 8.13 மணிவரை

சதயம் முன்னிரவு 9.16 மணிவரை

சுபநேரம் 6.03-7.33 மணிவரை

இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

பூரணை விரதம்

வளவன்

**மீனம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்த சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் சற்றுக்கூடும்.

**மேடம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பார்கள்.

**கும்பம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது. வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம்.

**மகரம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** தெய்வ அனுகூலத்தால் சிறப்புகள் வந்து சேரலாம், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் இடம்பெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**துலாம்:** வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

# தனித்துப் போட்டியிட்டாலும் சுதந்திரக்கட்சி வெற்றிபெறும்

## குமார வெல்கம நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேறெந்தக் கட்சியுடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிட வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, தனித்துப் போட்டியிட்டாலும் சுதந்திரக் கட்சியால் வெற்றி பெற முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

கூட்டணி அமைக்காமல் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியால் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது. நாட்டைப் பற்றியும், கட்சியைப் பற்றியும் சிந்தித்தால் நாம் தனித்தே போட்டியிட வேண்டும்.

சுதந்திரக் கட்சி - பொதுஜன பெரமுன கூட்டணி அமைப்பதில் சின்னம் குறித்து இருதரப்பிலும் கருத்து முரண்பாடுகள் காணப்படுவதை அறிய முடிகிறது. ஆனால் தற்போது கட்சியோ சின்னமோ முக்கியத்துவமல்ல. நாட்டைப் பற்றியே சிந்திக்க வேண்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சின்ன மான வெற்றிலைச் சின்னத்தில் பொதுஜன பெரமுன போட்டியிடத் தீர்மானித்தாலும் எனக்கு அதில் திருப்தியில்லை. காரணம் யாருடனும் கூட்டணி அமைப்பதை நான் விரும்பவில்லை.

ஏனைய சிறு கட்சிகளுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என் பதே எனது நிலைப்பாடாகும்.

அவ்வாறு தனித்து போட்டியிட்டாலும் நிச்சயமாக வெற்றி பெற முடியும் என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)


## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

- சிட்டை போடுபவர் பெண் வயது 18-28.

தொடர்புக்கு:- 077 748 8093

(அ-7582)



### கமநல சேவைகள் நிலையம் - உடையார்கட்டு

## பகிரங்க ஏலவிற்பனை

கால்நடை பிடியாளர்களினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத N.K குறியுள்ள 4409 0992 0033, 4409 0992 0034 காது தோடுடைய வெள்ளை நிறமாடுகள், S.S குறியுள்ள சிவப்பு நிறமாடு, K.M குறியுள்ள சிவப்பு நிறமாடு, K.N குறியுள்ள வெள்ளை நிறமாடு, K.N குறியுள்ள மாடு ஆகியன 2019.09.18 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இம் மாட்டினை ஏலத்தில் வாங்குபவர் அன்றையதினமே அதற்குரிய பணத்தினை முழுமையாக காசாக கமநல சேவை குழுவிற்கு செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுச் செல்லுதல் வேண்டும்.

தொடர்புகளுக்கு: 021 206 1907

நிறைவேற்று செயலாளர்


கமநலசேவை குழு, உடையார்கட்டு.

(அ-7581)


## அஞ்சேலென அபயமளிக்கும் மஞ்சவனப்பதியானே சரணம்

தஞ்சமென அடி பணிந்து முருகன் என்று
வணங்கி
மஞ்சவனப்பதியானே நீதான் சரணமென்று
மிக நினைத்து
அஞ்சேலென அபயமளிக்கும் ஆறுமுகப்
பெருமானே! குகனே
வெஞ்சமரில் வெற்றி கொண்டவனே
தேரேறி வந்து நல்விடிவைத் தா!

கலைமாமணி இராசையா ஸ்ரீதரன்



நாட்டில் சமாதானம், நிரந்தர அமைதி, நல்லிணக்கம் மேம்பட இறையருள் வேண்டி நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் நோக்கிய பாத யாத்திரை நேற்றுக் காலை ஆரம்பமானது. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து காலை 9 மணியளவில் சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் இந்தப் பாதயாத்திரை ஆரம்பமானது. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு சென்று கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நிறைவடையும். இந்தப் பாத யாத்திரை செல்லும் வழியிலுள்ள பழைமையான ஆலயங்களில் விசேட வழிபாடுகளும் நடத்தப்படும். (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)


## கேள்வி அறிவித்தல்.

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932/ 021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 13.09.2019ஆம் திகதி முதல் 26.09.2019 ஆம் திகதி வரை மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 16.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 250/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 27.09.2019 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

| No | Bid ID | Description of Work | Grade | Estimated Cost (Rs.) In Million | Contract Period | Fund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/K/RDHS/B/ PSSP/2019/10 | Construction of waste segregation store at DH Akkarayankulam | C 09 or above | 0.595 | 1 month | PSSP | 6000.00 | 2019/12/13 |
| 02 | NP/K/RDHS/B/ PSSP/2019/11 | DH Tharmapuram Con struction & Improve ment work (Improveme nt of Patient screen and Racks , Construction of waste segregation store & Construction of kitchen) | C 09 or above | 3.652 | 3 months | PSSP | 36000.00 | 2019/12/13 |
| 03 | NP/K/RDHS/B/ PSSP/2019/12 | BME Unit Stage II RDHS Office Kilinochchi | C 09 or above | 1.623 | 2 months | PSSP | 16000.00 | 2019/12/13 |

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

(அ-7580)

# உலக சைவத் தமிழர்களின் புனித தாயகம் திருவண்ணாமலை

## இருக்கும் இடம் தேடி அன்னதானம் வழங்கும் நிகழ்வு தினமான 08.09.2019 இல் நடைபெற்றது. கிரிவலம் 13.09.2019 அதிகாலை 4மணி

### நினைத்தாலே பேரின்ப பெருவாழ்வு



அருணாசல அகஷரமணமாலை

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் அருணாசலேசன் மீது இயற்றிய 108 துதிப்பாடல்கள் அருணாசல அக்ஷர மணமாலை என்று குறிப்பிடப்படுகின்றது. இதுமட்டுமன்றி அருணாசல பஞ்சகம்- அருணாசல அட்டகம், அருணாசல பதிகம் முதலிய பல துதிகள் மகரிஷிகளால் இயற்றப்பட்டிருக் கின்றன.

இவற்றுள் அருணாசல அக்ஷர மணமாலைக்குத் தனிப்பெருமைகள் உண்டு.

1914 ஆம் ஆண்டு மகரிஷிகளால் இயற்றப்பட்ட அருணாசல அக்ஷர மணமாலையின் நூற்றாண் டாகிய 2014 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் பிரதிகளை இலவச வெளியீடாக்கி அருணாசலரமணர் திருவடிகளில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இப்படியான வெளியீட்டுக்கு முன்னும் பின்னும் இத்துதி நூல் வெளியீடுகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதிலிருந்தே இதன் பெருமையையும் பயன்பாட் டையும் அன்பர்கள் ஊகித்து அறியமுடியும்.

பகவான் அகரவரிசையில் அக்ஷரங்கள் ஒவ்வொன்றால் ஒவ்வொரு பாடலை ஆரம்பித்து எழுதியதாலும் அவை அருள் மணம் வீசும் பாடற்பூக் களால் புனைந்த மாலை என்பதாலும் அதற்கு அக்ஷர மணமாலை என்ற பெயர் சூட்டப்பட்டது. மேலும் அக்ஷரங்களால் தொடுத்த திருமணமாலை என்றும் கொள்ளலாம். இவைதவிர அக்ஷ-ரமண- மாலை என்று பதம் பிரித்து நோக்கின் அழியாத ரமண பகவானின் ஆத்ம மாலை என்று நாம் கூறிப் பெருமை கொள்ளலாம்.

அருணாசலக் கடவுளின் மேல் அன்பன் ரமணன் நாயகன்- நாயகி மற்றும் பல பாவங்களில் புனைந்த இப்பாடல்களின் எண்ணிக்கை 108 என் பதால் இவை அர்ச்சனைக்கு - வழிபாட்டுக்கு உகந்த தோத்திரப் பாடல்களாகப் பலர்கொண்டு பயனடைந்துள்ளனர்.

அன்பர்கள் இப்பாடல்களின் பொருளை ரமண பகவானிடமே கேட்டறிய விரும்பியபோது "பகவான் நீர் தான் அவற்றின் பொருளைச் சொல்லுமே!" ஏதாவது நினைத்து எழுதியிருந்தால் அதற்கான பொருளைக் கூறலாம். எப்படியோ எழுந்தவை அவை என்று கூறிவிட்டார்.

பிறிதொரு சமயம் பகவான் அதற்கு அர்த்தம் "அதைப் பாராயணம் செய்வதுதான்"என்று உபதேசித்திருக்கிறார்!

இதனால் பல பக்தர்கள் அருணாசல அக்ஷர மணமாலையை வேதமாக மதித்து தினம் ஓதி நீங்காத செல்வமும் நிறைவான மன நிம்மதியும் அடைந்து வருகின்றனர்.

நவரச பாவத்தில் பகவான் அருளிய அருணாசல அக்ஷர மணமாலை எளிய- ஆழ்ந்த பொருட்செறிவு- இறையுணர்வு- அருள்வேண்டல்- நாயக, நாயுகி பாவம்- ஆண்டான் அடிமை- நட்புணர்வுடன் கூடிய நிந்தாஸ்துதி எனப் பற்பல உணர்வுகளுடன் மிகச்சிறந்த தமிழ்க்காவியமாக விளங்கு கின்றது.

(C-7583)

**செயலாளர் சைவப்பிரகாசப் பேரவை, யாழ்ப்பாணம்.**

**077 378 3316**

# சுட்டும் முகநூல் 21

Like Love Haha Yay Wow Sad Angry

**Shanmugalingam Senthuran**
8 September at 07:36

மரம் அழிப்பது என்பது மனிதன் தற்கொலை செய்வதற்கு ஒப்பானது



**ஆதித்தன் ஆதி**
10 September at 22:55

எழுக தமிழ்!!
மக்கள் ஒன்றுதிரட்டுவதைவிட மக்கள் பிரதிநிதிகள் ஒரேமேடையில் ஒரே தினத்தில் ஒன்றுபடுவார்களா!!
ஏற்பாட்டாளர்கள் அதற்கான நடவடிக்கை எடுப்பார்களா?
வெறுமனே கூட்டம் கூடி கலைந்து செல்வது அல்ல. போராட்டம் என்பது கலைத்து செல்லும் சமூகத்தை ஒன்று திரட்டி ஒற்றுமை கொள்வதே




**Kandasamy Jeyesangar**
2 hrs

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் ஒருகேள்வி
2016 எழுக தமிழ், 2019 எழுக தமிழ் என்ன வித்தியாசம்?

# சமாதானக் கல்வி



மாணவர்கள் சமூகத்தில் மற்றவர்களால் மதிக்கப்படுகிறவர்களாகவும் நற்குடிமக்களாகவும் வாழ்வதற்கான சமுதாயப்படுத்தலை வழங்கும் ஊடகங்களில் கல்வியும் ஒன்றாகும். சமாதானம் என்னும் பெரு விருட்சத்தின் வளர்ச்சிக்கு வேராக கல்வியே அமைகிறது. தற்காலத்தில் சமூகத்தில் நிகழும் பல கொடுமையான சம்பவங்களுடன் பிள்ளைகள் அதிகமாக பிணைக்கப்படுகின்றனர். சிறுவர்களின் நடத்தைகள் சமாதானமற்றவையாக மாறுகின்றன.

இதனால் பிள்ளைகள் மற்றவர்களை இம்சைப்படுத்துகின்றனர். ஏனையவரின் உடைமைகள் மற்றும் சொத்துக்களை நாசம் செய்கின்றனர். குழு ரீதியான மோதல்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான துர்நடத்தைகளை மாணவர்களிடம் இருந்து அகற்றி அவர்கள் மற்றவர்களை நேசிக்கின்ற பிரஜைகளாக மாற்றப்படுவதற்கு சமாதானக் கல்வி வழங்கப்படுவது மிக அவசியம். பாடசாலைகளில் கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளின் போது பல்வேறு பாடங்கள் மூலம் இதனை செயற்படுத்த முடியும்.

• சமூகத்தில் வன் செயல் நிகழவில்லை என்றால் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டால் பக்கச்சார்பின்மை நிலவவில்லையென்றால், அமைதியான தோற்றப்பாடு காணப்பட்டால் அவையெல்லாம் சமாதானம் என நாம் கருதிவிட முடியாது.

• மனதின் அமைதி நிலை, சமூகத்துடன் ஒத்திசைவாக வாழும் நிலை. ஏனைய இன, மத, மொழி, குழுமம் சார்ந்தவர்களை அவர்களது கலாசார மரபுகள் பண்பாடுகளை மதித்து ஏற்றுக் கொள்ளுதலே சமாதானம் எனலாம்.

• சமூகத்தில் சமாதானம் சீர்குலைவதற்கான காரணிகளை பார்க்கும் போது,

பிரச்சினைகளை சரியான கண்ணோட்டத்தில் நோக்காமை, பிரச்சினைகளை சரியாகப் பகுத்து ஆராயாமை, முடிவுகள் தீர்க்கமான முறையில் எடுக்க முடியாமை, தீர்வுகள் சரியாக, பொருத்தமான முறையில் அமுல்படுத்தப்படாமை, தனி நபர்களுக்கு இடையிலான பரஸ்பர தொடர்பாடல் உறுதியான வகையில் நிகழாமை, ஏனையோரின் தேவைகளைப் புரிந்து கொள்ளாமை, மனித உரிமைகளை அறியாமையும் அதுபற்றி கருத்திற் கொள்ளாமையும், நற்பண்புகளை மதிக்காமை.

பிரஜைகளாகிய மாணவர்களுக்கு சமாதானமாவது பின்வரும் விதங்களில் உதவுகிறது.

மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு, அந்நியோன்னிய வாழ்விற்கு, தன் நம்பிக்கையை வளர்ப்பதற்கு, ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கு, கல்வி, பொருளாதார, ஆன்மீகப் பண்பாட்டு விருத்திக்கு உதவுகின்றது.

கல்வியின் மூலம் மாணவர்களிடத்தே வளர்க்கப்பட வேண்டிய சமாதானப் பண்புகளாக,

அன்பு, கருணை, ஜீவகாருண்யம், உண்மை, நேர்மை, நீதி, பொறுமை, புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல், பிறரை மதித்தல், மனிதாபிமானம், சமூக சமய விழுமியங்களை மதித்தல், பிறரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் போன்ற பண்புகள் காணப்படுகின்றன.

பாடசாலைகளில் பாட உள்ளடக்கத்திற்கு ஊடாக சமாதானக் கல்வியை போதிக்க முடியும். குறிப்பாக மொழித்திறன் செயற் பாடுகள், கணிதச் செயற்பாடுகள், சுற்றாடல்சார் செயற்பாடுகள், சமயம் சார் செயற்பாடுகள், மொழித் திறன் சார்ந்த செயற்பாடுகள்- கவிதைகள், கதைகள் பாடல்கள், சிறுவர் நாடகங்கள், அபிநயப் பாடல்கள், நடனங்கள் மூலம் போதிக்க முடியும்.

கணிதச் செயற்பாடுகள் என்ற வகையில் பிரச்சினைகளை தீர்க்கும் சிந்தனைத் தூண்டல், ஒற்றுமை, கூட்டுணர்வு நற்குணங்களை விருத்தி செய்யும் குழுச் செயற்பாடுகள்.

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்-இயற்கையைப் பாதுகாத்தல், சூழல் மாசடைவதனைத் தடுத்தல் போன்ற சமாதானப் பண்புகளை விருத்தி செய்தல்.

சமயம் சார்ந்த செயற்பாடுகள்-எல்லா மதங்களும் சமாதானம் சார்ந்த நற்பண்புகளை வலியுறுத்துகின்றன. சிறந்த கொள்கைகள், போதனைகள் மூலம் மாத்திரம் மாணவர்கள் நல்லவர்களாகவும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன் உள்ள பிள்ளைகளாகவும் வாழ வழி சமைக்காது பாடசாலையின் உள்ளும் புறமும் மாணவர்கள் தாம் கற்றுக் கொண்டவற்றை கடைப்பிடிக்கத்தக்க வகையில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தப்பட வேண்டும்.

அவை, பிறசமய விழாக்களில் பங்கு பற்றுதல், ஜீவகாருண்ணியம் நிறைந்த கதைகளை பாத்திரம் ஏற்று பிள்ளைகள் நடித்தல், பெற்றோரையும் வயோதிபர்களையும் கனம் பண்ணல், பிறர் உரிமைகளை, கருத்துக்களை மதித்தல் போன்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், நற்காரியங்களுக்கு உதவும் முகமாக சில தியாகங்களைச் செய்யத் தூண்டல்.

பல இன, மொழி, மதம் சார்ந்த கலாசார சமூகம் நிலவும் நாடுகளில் சமாதானம் என்பது வலுமிக்க வகையில் கட்டியமைக்கப்படும் போதே ஜனநாயகம் உறுதித் தன்மை வாய்ந்ததாக விளங்கும்.

இன்று இலங்கையில் 30 ஆண்டு காலப் பேரின் பின்னரான நல்லிணக்க் முயற்சிகள் பற்றி பேசப்படுகின்றது. அரசாங்கம் தேசிய ஒருமைப்பாட்டு கருமமொழிகள் அமைச்சின் ஊடாக நாடளாவிய ரீதியில் சமாதானம் நோக்கிய பல்வேறு கருமங்களை நிகழ்ச்சித் திட்டங்களாக வகுத்து நடைமுறைப்படுத்த எத்தனிப்பதனை அவதானிக்கலாம். எது எவ்வாறு இருப்பினும் நல்லிணக்கத்தோடு இணைந்த சமாதானத்தினை உருவாக்குவதில் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சமாதானம் சார்ந்த கல்வி ஏற்பாடுகள் வலுமிக்க வகையிலே வடிவமைக்கப்பட்டு மேற்கொள்ளப்படுவதன் மூலம் வன்முறைகள், மோதல்கள் பாகுபாடுகள், சித்திரவதைகள் அற்ற எதிர்கால சமூகத்தினை கட்டியமைக்க முடியும்.

**தங்கவடிவேலு விஜயகுமார்**
**உதவி அதிபர்,**
**யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.**

## யோகாசனப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் யோகாசனப் பயிற்சி இன்றும் நாளையும் (வெள்ளி, சனி) காலை 7.30 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (இ-5)

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டத்திற்குப் பூரண ஆதரவு

## த.தே.ம.முன்னணி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழத்திற் கு கல்விசாரா ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் நடைமுறையை பக்கச்சார்பற்றதாகவும்,அரசியல் தலையீடு அற்ற வகையிலும்மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி யாழ் பல்கலைக்கழக ஊழியர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பூரண ஆதரவு தெரிவித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில் பக்கச் சார்புகளும் முறைகேடுகளும் நிலவுவதாகவும்,அரசியல் தலையீடு காணப்படுவதாகவும்ஊழியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

உயர்கல்வியமைச்சிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ள ஆட்சேர்ப்புப் பட்டியலில் வடக்கு மாகாணத்திலிருந்து விண்ணப்பித்திருந்த 400 இற்கும் அதிகமான கல்விசாரா ஊழியர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்.பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் ஒப்பந்த நிறுவனமொன்றின் கீழ் பணியாற்றுகின்ற 53 பேர்களின் பெயர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற 30 இற்கும் மேற்பட்ட ஊழியர்களின் பெயர்கள்,வவுனியா வளாகத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் பெயர்கள் தவிர்க்கப்பட்டு வடக்கு மாகாணத்திற்கு வெளியேயிருந்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது ஆதரவாளர்களின் பெயர்களை இணைத்து ஆட்சேர்ப்புப் பட்டியலை அனுப்பியுள்ளதாகவும் ஊழியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. அமைச்சரின் இச் செயற்பாட்டினை மிகவும் வன்மையாகக் கண்டிகின்றோம்.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிலவுகின்ற ஆட்சேர்ப்பு நடை முறையிலுள்ள பிரச்சினைகள் மற்றும் நிர்வாக முறைகேடுகள் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தருமாறுகோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக நுழைவாயிலை இடைமறித்துக் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் அவர்களது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன் ரவூப் ஹக்கீம் மீண்டும் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் தான் முன்னதாக அனுப்பியிருந்த ஆட்சேர்ப்புப் பட்டியலிலுள்ளவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதை விரைவுபடுத்துமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளதாக ஊழியர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமிழர்களின் தொழில் வாய்ப்பைத் திட்டமிட்டு பறிக்கும் நோக்கிலும், இனங்களுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் வகையிலும்,பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் வகையிலும் அரசியல் தலையீடுகளை மேற்கொள்ளும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களின் செயற்பாட்டினை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர் தனது அரசியல் தலையீடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றோம்.

மேலும் பல்கலைக்கழக நிர்வாகம் அத்தகைய செயற்பாடுகள் தொடர இடமளிக்கக் கூடாதெனவும் கோருகின்றோம் என அக்கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். (இ-7)

# சங்காபிஷேகமும் மணவாளக் கோலமும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் இன்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறும்.(இ-5)



(படங்கள் - ஐ.சிவசாந்தன்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 98 ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.பருத்தித்துறை வீதியில் வைமன் வீதி சந்திக்கு (நல்லூர் பின் வீதி) அருகில் உள்ள பாரதியார் சிலைக்கு நேற்று முன்தினம் இரவு இளைஞர்களால் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# கசிப்பு நிலையம் முற்றுகை பொலிஸாரால் ஒருவர் கைது



கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டதில் பெருமளவு கோடாவும் கசிப்பு உற்பத்தி பொருட்களும் மீட்கப்பட்டதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பிரான்பற்று பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் வடலி பற்றை பகுதியில் மறைந்திருந்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை ஒருவரை கைது செய்தனர்.

அத்துடன் பெருமளவு கோடாவும், கசிப்பு உற்பத்திப் பொருட்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(இ-5-60)

# கல்விக்கு கூடிய நிதியை ஒதுக்கியது நானே

## பிரதமர் ரணில் மன்னாரில் தெரிவிப்பு

(மகன்னார்)

கல்விக்கு அதி கூடிய நிதியை ஒதுக்கீடு செய்த பிரதமராகவே நான் இருக்கின்றேன். எதிர்காலத்திலும் இந்த கல்வித்துறைக்காக பல மில்லியன் ரூபாய் நிதிகளை நான் ஒதுக்கத் தயாராக இருக்கின்றேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் கட்டடத் திறப்பு விழாவும் நேற்று வியாழக்கிழமை பாடசாலையின் அதிபர் என்.எம்.சாபி தலைமையில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1978 இல் இருந்து பல்வேறு அபிவிருத்திகளை செய்து இந்த கல்வித்துறைக்கு வித்திட்டவனாக நான் இருக்கின்றேன். எதிர்காலத்திலும் இந்தக் கல்வித்துறைக்காக பல மில்லியன் ரூபாய் நிதிகளை நான் ஒதுக்கத் தயாராக இருக்கின்றேன்.

13 வருட பாடசாலை வாழ்க்கையை மாணவர்களுக்கு வழங்கி நல்லதொரு அறிவியல் சமூகத்தை உருவாக்குவதற்காக எதிர்காலத்திலே நல்லதொரு திட்டங்களை முன்வைத்துள்ளேன்.

தகவல் தொழில்நுட்பத்தை விருத்தி செய்வதற்காக நல்ல விடயங்களை இந்த அரசாங்கம் எடுத்துள்ளது.

பட்டதாரி, கல்வியியற்கல்வி பயிற்சி இல்லாத இந்த மாணவர்களுடைய வகுப்பறைகளையும் வழங்கக்கூடாது என்கின்ற திட்டத்தை கல்வி அமைச்சு கொண்டு வந்துள்ளது.

அதற்கு நாங்கள் அனுமதிகளை வழங்கி இருக்கின்றோம். பாடசாலையில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு பயிற்சி பெற்ற



ஆசிரியர்கள் மூலமாக கல்விமயமாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு கல்வி புகட்டப்பட வேண்டும்.

கடந்த வாரம் விசேட தேவையுடையவர்களுக்கான ஒரு கல்வி நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக விசேட தேவையுடையவர்களுக்கும் கல்வி போய்ச்சேர வேண்டும். மேலும் 21 பல்கலைக்கழகங்களில் 21 பல்கலைக்கழக பீடங்கள் அண்மையிலே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இப்படியான அபிவிருத்தித் திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம் என மேலும் தெரிவித்தார். (9-285)

# வவு.வைத்தியசாலையில் கட்டடம் திறப்பு





(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலையில் குழந்தை பராமரிப்பு நிலையம் (டேகேயார்) மறுசீரமைப்பு செய்யப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலையின் ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் 7.95 மில்லியன் நிதியில், இலங்கை கடற்படையினரால் குறித்த கட்டடம் மறுசீரமைப்புச்செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பியல் த சில்வா கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்திருந்தார்.

இந் நிகழ்வில் மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், உட்பட பலரும் கலந்து கொண்டனர். (9-299)

# ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் நிறுத்தப்பட மாட்டாது-தே.வீ.அ.அ.சபை

(நெளுக்குளம்)

வவுனியாவில் இதுவரை 143 மாதிரிக் கிராமங்களில் 4329 வீடுகள் அமைக்கபட்டுள்ளதுடன், எந்த ஒரு காரணத்திற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இடை நிறுத்தப்படமாட்டாது என வவுனியா மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் வி.எம்.வி.குருஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா வீடமைப்பு அதிகாரசப்ப அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

போரால் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் வவுனியா நோக்கி வருகைதந்த நிலையில் அவர்களுக்கான வீட்டுத் தேவைகள் முழுமையாகக்கிடைக்கப்பெறவில்லை. எனவே அவற்றையும் கருத்தில் கொண்டு 2015 ஆம் ஆண்டு முதல் பல்வேறு வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம். கடன் வசதிகள், கடனோடு இணைந்த மானியத் திட்டங்கள், அரச ஊழியர்களுக்கான திட்டங்கள், மற்றும் மேசன் தொழிலாளர்களுக்கான பயிற்சி நெறிகள், சிறுநீரக நோயாளர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 2017 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 143 மாதிரிக்கிராம வீட்டு திட்டங்களை வழங்கியுள்ளோம்.

இதன்மூலம் 4329 வீடுகள் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் உட்கட்டுமான வசதிகளையும் வழங்கியுள்ளோம். இந்த வேலைத் திட்டங்களுக்காக இதுவரை 2850 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

இதன்மூலம் வவுனியா மாவட்டத்திலே தகரக் கொட்டில்களிலே வாழ்ந்து வந்த பலர் இன்று பலனடைந்துள்ளனர். விசேடமாக காணி அற்றவர்களுக்கு காணி வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான வதிவிட உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் கட்ட நிதி விடுவிக்கப்படாமல் உள்ள மாதிரிக் கிராமங்களுக்கு மிக விரைவில் நிதி வழங்கப்படவுள்ளதுடன் எந்தக் காரணத்திற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இடை நிறுத்தப்படாது. அத்துடன் கிராமங்களில் தனியாக வீடுகள் தேவையானவர்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

எமது அமைச்சரிடம் இது தொடர்பாக கடந்த காலங்களில் பலர் வேண்டுகோளை முன்வைத்துள்ளனர். எனவே எமது தலைமை அலுவலகத்தில் இருந்து அவ்வாறான திட்டங்கள் உருவாக்கப்பட்டு எமக்கு அறிவிக்கப்பட்டால் நாம் அதனை வழங்குவதற்கு முயற்சி செய்வோம். எதிர்வரும் காலங்களில் கிராம மட்டங்களில் சமூக அமைப்புகளை உருவாக்கி வீடு இல்லாதவர்களின் விபரங்கள் பெறப்பட்டு அவர்களுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-299)

# தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான போராட்டமே எழுக தமிழ் பேரணி

## வவு.காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

(நெளுக்குளம்)

அனைத்து தமிழ் மக்களுக்குமான ஒரு உணர்வுபூர்வமான ஒரு போராட்டமே எழுக தமிழ் பேரணியாகும் என வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் சி.ஜெனிதா தெரிவித்துள்ளார். காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளை தேடித் தர வேண்டும். எமக்கான நீதிக்காக தமிழ் மக்கள் அனைவரும் அணிதிரண்டு பார்வையாளராக அன்றி பங்காளராக மாறி எழுக தமிழை வலுவுறச் செய்ய அனைவரும் அணிதிரண்டு வாருங்கள்.

நாங்கள் கட்சிகளுக்கெதிராக போராடவும் இல்லை. எங்களுடைய உறவுகளை பெற்றுத்தர வேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராடுகின்றோம் என தெரிவித்தார். (9-299)

# கிளிநொச்சியிலுள்ள ஏழு குளங்களை புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஏழு நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்பு செய்வதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நீரப்பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள இரணைமடுக்குளம் கடந்த காலங்களில் புனரமைக்கப்பட்டுள்ளபோதும் ஏனைய குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, கல்மடுக்குளம், அக்க்ராயன்குளம், பிரமந்தனாறுக்குளம், குடமுருட்டிக்குளம், கரியாலை நாகபடுவான் குளம், வன்னேரிக்குளம், கனகாம்பிகைக் குளம் உள்ளிட்ட குளங்கள் புனரமைப்பு செய்வதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்படி குளங்களை புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத்திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கல்மடுக்குளத்தின் நீர்கொள்ளளவை அதிகரித்து அதனை புனரமைப்பதற்கு 500 மில்லியன் ரூபாவும் அக்கரயான் குளத்தினை புனரமைப்பதற்கு 450 மில்லியன் ரூபாவும் பிரமந்தனாறு குளத்தினை புனரமைப்பதற்கு 80 மில்லியன் ரூபாவும் குடமுருட்டிக்குளத்தினை புனரமைப்பதற்கு 115 மில்லியன் ரூபாவும் கரியாலை நாகபடுவான் குளத்தினை புனரமைப்பதற்கு 320 மில்லியன் ரூபாவும் வன்னேரிக் குளத்தினை புனரமைப்பதற்கு 80 மில்லியன் ரூபாவும் கனகாம்பிகைக்குளத்தினை புனரமைப்பதற்கு 75 மில்லியன் ரூபாவும் தேவை என மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)




# கைதிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்



(நெளுக்குளம்)

சிறைக்கைதிகள் வாரத்தினை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் கண் பார்வைக்குறைபாடுகள் உள்ள கைதிகளுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

சிறிசபாரட்ணம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் 30 கைதிகளுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அக் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும், தண்டப்பணம் கொடுக்க முடியாதிருந்த சிறைக்கைதிகள் இருவருக்கு தண்டப்பணம் வழங்கப்பட்டுள்ளது..

சிறிசபாரட்ணம் அறக்கட்டளையின் சர்வதேச ஏற்பாட்டாளர் ஏ.நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சிறைச்சாலை உயர் அதிகாரிகளும், சிறைச்சாலை நலன்புரிச்சங்க உறுப்பினர்கள், சமூக அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (9-299)

# அரசியல்யாப்பில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே நாட்டில் சமாதானம் ஏற்படும்

## சாள்ஸ் எம்.பி தெரிவிப்பு

(மன்னார்)
இனங்கள் ரீதியாக அரசியல் மாற்றம் ஒன்று கொண்டு வர வேண்டும். சகல மதங்களுக்கும் சகல மொழிகளுக்கும் சம உரிமை கொண்டதாக யாப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளும்போதுதான் இலங்கையில் சகல மக்களும் நிம்மதியுடன் வாழலாம் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கருத்தமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சகல இன மக்களிடமும் சமாதானமும் சகவாழ்வும் நிலை கொள்ள வேண்டுமானால் யாப்பு சீர் திருத்தம் மிக அவசியமானது என சகல பாராளுமன்ற உறுப்பினர் களுக்கும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். நான் இங்கு பெயர் குறிப்பிட விரும்பவில்லை. ஒரு சில அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் யாப்பு சீர்திருத்தம் தேவையில்லையென தெரிவித்து நிற்கின்றனர்.

இன்று இலங்கையில் மக்கள் நிம்மதியின்றி இருப்பது இந்த யாப்பு சீர்திருத்தத்தை கொண்டு வராமையே காரணமாகும். அடுத்து சக வாழ்வு என பது கிராப்மபுற அனைத்து மக்கள் மத்தியிலும் புரிந்துணர்வு இருக்க வேண்டும். மத, இனங்களுக்கிடையே முரண்பாடு குறைய வில்லை. மாறாக நாளுக்கு நாள் அது அதிகரித்துக் கொண்டு தான் இருக்கின்றது.

தற்பொழுது வெளிச்சமாக தெரிகின்றது. இன மதப் பிரச்சினை உருவாகிக் கொண்டே செல்லுகின்றது. இதற்கு அரசியலும் காரணமாகவும் இருக்கலாம். நான் இப்படியான அரசியலைச் செய்ய விரும்பவில்லை. ஆனால் எதிர்காலத்தில் இது பாரிய விளைவை ஏற்படுத்தக் கூடிய நிலைமை இருக்கின்றது. மன்னாரில் மதங்களுக்கிடையே தோன்றியுள்ள பிரச்சினைகள் பாரிய பிரச்சினைகள் அல்ல. அவைகள் மிக சிறியதொன்றாகும். இந்த சின்னப் பிரச்சினைகளை எமக்குள் தீர்க்க எம்மால் முடியாது என்றால் எவ்வாறு பாரிய பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இப்பொழுது எமக்குள் நல்லதொரு பரிந்துணர்வு இல்லையென்றால் எமக்காக பல உயிர்களை, சொத்துக்களை, உறவுகளை இழந்து நின்றவர்கள் பரிதாபத்துக்குரியவர்களாக இருக்கின்றார்கள் என மேலும் தெரிவித்தார். (9-285)



நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலயத்தின் வேட்டைத்திருவிழா நானாட்டான் ஆண்டார் செட்டிவெளி முனியப்பர் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
(படங்கள்:-மன்னார் செய்தியாளர்)





# வவுனியாவில் நீர் வெட்டு

(குருமன்காடு)
வவுனியாவின் பல பகுதிகளில் நேற்று முதல் நீர் விநியோக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இதன்படி, காலை 5 மணி முதல் 9 மணிவரையும், பிற்பகல் 4 மணி முதல் இரவு 9 மணிவரை நீர் விநியோகம் மட்டுப்படுத்தப் படவுள்ளது. வரட்சியான காலநிலை காரணமாக நீர்த்தேக்கத்தில் நீர் வற்றியுள்ளதால் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, தேக்கவத்தை, கற்குழி, வவுனியா நகரம், யாழ் வீதி, குடியிருப்பு, இலுப்பைக் குளம், மூன்று முறிப்பு, மதவு வைத்தகுளம், சூசைப்பிள்ளையார் குளம், கோவில்குளம், தெற்கிலுப்பைக்குளம், தோணிக்கல், வெளிக்குளம், அம்பலாங்கொடல, மடுகந்த உள்ளிட்ட பகுதிகளில் இந் நீர் விநியோக மட்டுப்படுத்தல் காணப்படும்.

எனவே, சிக்கனமாக நீரைப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. (9-250)

# கள்ளுத்தவறணையை அகற்றக்கோரி வவு.கந்தன்குள மக்கள் போராட்டம்



(குருமன்காடு)
வவுனியா, பூவரசன்குளம், கந்தன்குளம் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணையை மூடுமாறு கோரி நேற்று முன்தினம் குறித்த கள்ளுத் தவறணைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, பூவரசன்குளம், கந்தன்குளம் சந்திப் பகுதியில் கள்ளுத் தவறணை ஒன்று அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த பகுதியில் பேருந்துக்கு காத்திருப்பவர்களும், அவ் வீதி வழியாக பயணிக்கும் பாடசாலை மாணவிகள் உட்பட பலரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், குறித்த பகுதியில் சமய வழிபாட்டுத்தலம் ஒன்றும் காணப்படுகின்றது.

இதன் காரணமாக குறித்த பகுதியின் கள்ளுத் தவறணை அமைக்கப்பட்டுள்ளமை கிராமத்தின் கலாசாரத்தை பாதித்துள்ளதுடன், விரும்பத்தகாத அசம்பாவிதங்கள் ஏற்பட வழிவகுக்கும் எனவும் தெரிவித்த கிராம மக்கள், வறுமையான தமது கிராமத்திற்கு கள்ளுத் தவறணையை திறந்து மக்களை அழிக்காதீர்கள் எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது "பனை தென்னை வள அபிவிருத்தி சங்கத்திற்கும் உற்பத்தி பிரதேசங்களுக்கும் நாம் எதிரானவர்கள் அல்ல: மாற்றிடத்தை தெரிவு செய், கள்ளுக் கடையை அகற்று காலஅவகாசம் வேண்டாம் வேண்டாம் கள்ளுக் கடை, வேண்டும் நூலகம், கந்தன்குளம் சந்தியை கள்ளுத் தவறணை சந்தி ஆக்காதே "உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் பா.உதயராஜா, அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ஆகியோர் சென்று கலந்துரையாடியதுடன், உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி கள்ளுத்தவறணையை அகற்றுவதாக வழங்கிய வாக்குறுதியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. குறித்த போராட்டத்தில் கந்தன் குளம் மக்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (9-250)

# விவசாயிகளுக்கு பயனற்றுக் காணப்படும் புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம்

(கண்டாவளை)
கிளிநொச்சி புழுதியாறுப்பகுதியில் சுமார் 32 மில்லியன் ரூபா செலவில் வடக்குமாகாண சபையால் நிர்மாணிக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனம் பயன்பாடற்ற நிலையில் செயலிழந்து காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர்பிரிவின் கீழ் உள்ள மாயவனூர் கிராமத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை நோக்கமாகக் கொண்டு இப்பிரதேசத்தில் வாழும் 115 பயனாளிகள் பயனடையும் வகையில் 100 ஏக்கர் நிலப்பரப்பிற்கு நீர் விநியோகிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் பயன் படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

கடந்த 2014 ஆம்ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் 32மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 23-01-2015 அன்று வடமாகாண முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட குறித்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டமே இவ்வாறு செயலிழந்து காணப்படுகின்றது.

இந்தப்பிரதேசத்தில் குறிப்பிட்ட சில விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றபோதும், இந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தின் மூலம் குறித்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்திற்கு பயன்படுத்தும் இயந்திரம் எரிபொருள் மூலம் இயங்குகின்ற இயந்திரமாகக் காணப்படுவதனால் அதனை இயக்குவதில் அதிக



செலவு ஏற்படும் என்றும் அனைத்து விவசாயிகளும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் போது ஏற்று நீர்ப்பாசனத்தை குறைந்த செலவில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தற்போது, இந்தப்பிரதேசத்தில் கடுமையான வரட்சி நிலவுவதனால் குடிநீர் நெருக்கடி காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (9-315)

# தாண்டிக்குளம் புகையிரதப்பாதையில் அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்



(நெளுக்குளம்)
வவுனியா தாண்டிக்குளத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இருந்து புதுக்குளம் மற்றும் திருநாவற்குளம் ஆகிய பகுதிகளுக்கு செல்லும் முச்சந்தியில் புகையிரதக் கடவை ஒன்று காணப்படுகின்றது. குறித்த கடவையில் புகையிரதப் பாதுகாப்பு வேலி பொருத்தப்படவில்லை. அப்பகுதியில் ஒலி, ஒளிச் சமிக்ஞை பொருத்தப்பட்டுள்ள போதும், குறித்த ஒலி, ஒளி சமிக்ஞைசீராக இயங்காமையாலும், அவை பழுதடைந்து காணப்படுவதாலும் செயலிழந்துள்ளன.

இதனால் அவ்வீதியால் பயணிப்போரும், வாகனங்களும் புகையிரதம் வரும் சத்தம் கேட்டே தமது பயணத்தை நிறுத்த வேண்டிய அபாயநிலை ஏற் பட்டுள்ளது. தற்போது வடக்கிற்கான புகையிரத சேவைகள் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறு பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை ஒரு சந்தியில் காணப்படுகின்றமை மக்களை அச்சம் கொள்ள வைத்துள்ளது.

எனவே, இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதே அவ்வீதி வழியாக தினமும் பயணிக்கும் ஆயிரக் கணக்கான மக்களின் கோரிக்கையாகும். இதேவேளை, குறித்த பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் கடந்த வருடம் ஒருவர் மரணமடைந்தமையும் கால் நடைகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி வருவதும் குறிப்பிடத்தக்கது. (9-250-299)

# முல்லைத்தீவு பெரியகுளம் பாடசாலையை மீள இயக்குமாறு கிராமமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)
முல்லைத்தீவு பெரியகுளம் பாடசாலையினை மீள இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பெரியகுளம் கிராம மக்கள் துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். 1984ஆம் ஆண்டு குறித்த கிராமத்தில் பாடசாலை இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டது. இப்பாடசாலை தற்போது முத்தையன்கட்டுப் பகுதியில் பாடசாலை ஒன்றுடன் இணைந்து இயங்குகின்றது. இப்பாடசாலையினை தமது சொந்த கிராமத்தில் இயங்க வைக்க வேண்டும் என கடந்த மாதம் 4 ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பெரியகுளம் கிராம மக்கள் பிரதிநிதிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் கூட்டத்தில் கலந்து கொண்ட துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரினால் பெரியகுளம் கிராம மக்கள் தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளும் இடத்தில் பெரியகுளம் பாடசாலை சொந்த இடத்தில் இயங்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்நிலையில் பெரியகுளம் கிராமத்தில் பாடசாலையினை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

## அடிக்கல் நாட்டல்



மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைச்சர் றிசாத் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்றது. (9-285)

# பாரதம்

## காஷ்மீரில் வெடிகுண்டுகளுடன் லொறியொன்று கைப்பற்றல்



(காஷ்மீர்)

ஜம்மு - காஷ்மீரின் கத்துவா பகுதியில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன் லொறியொன்று கைப்பற்றப்பட்டது.

கத்துவா பகுதியில் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே குறித்த வாகனம் கைப்பற்றப்பட்டது.

இது குறித்த விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.


காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்து இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த மாநிலத்தில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளதாக இந்தியா கூறிவருகிறது.

அத்துடன் ஆயுதப் பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள் அண்மைக்காலமாக அதிகளவில் ஊடுருவி வருவதாகவும், தற்கொலை தாக்குதலுக்கு அவர்கள் திட்டமிட்டிருக்கலாம் என்றும் உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் காஷ்மீருக்குள் ஊடுருவும் வகையில் சுமார் 200 பயங்கரவாதிகள் காத்திருப்பதாகவும், இதன்காரணமாக எல்லைப் பகுதியில் இராணுவம் உஷார்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன் வாகனமொன்று கைப்பற்றப்பட்டுள்ளமை அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-2)

## ஐரோப்பிய நாடுக

## தாக்குதலை தீவிர



### அல்கொய்தா

(வோஷிங்டன்)

**ஐரோப்பிய நாடுகள் உ தாக்குதல் மேற்கொள்ள அமைப்பின் தலைவர் அ விடுத்தார்.**


அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட 18-வது ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் காணொலி ஊடாக அவர் மேற்கண்டவாறு அறைகூவல் விடுத்தார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளைக் குறிவைத்து தாக்குதல் மேற்கொள்ளுமாறு அவர் இதன்போது அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் வெளியிட்டுள்ள காணொளியில், 'அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை நினைத்து நம்முடைய எண்

## அமெரிக்காவின்

# இரட்டைக் கோபுரத் தாக்குதல் நினைவு தினம் அனுஷ்டிப்பு





(நியூயோர்க்)

அமெரிக்காவில் இரட்டைக் கோபுர மற்றும் பென்டகன் தாக்கப்பட்டதன் 18 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அமெரிக்காவில் கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி, அல்கொய்தா பயங்கரவாதிகள் விமானங்களைக் கடத்தி நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டை கோபுர கட்டடம் மற்றும் இராணுவத் தலைமையகமான பென்டகன் மீது மோதி வெடிக்கச் செய்தனர்.

உலகையே உலுக்கிய இந்த் தாக்குதலில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொன்று குவிக்கப்பட்டனர். அத்துடன் இந்தத் தாக்குதல் பயங்கரவாதத்தின் கோர முகத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

இந்நிலையில் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் மற்றும் பென்டகன் தாக்கப்பட்டதன் 18 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதையொட்டி அமெரிக்காவில் உள்ள அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள், பாடசாலைகள் கல்லூரிகள் உள்ளிட்டவற்றிலும் அமெரிக்க தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடும்படி ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டிருந்த நிலையில் நாடு முழுவதும் அமெரிக்க தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. (ஜ-2)

## திடீரென நிறம் மாறிய க


(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் பகுதிக்கு அருகே உள்ள மன்னார் வளைகுடா பகுதியில் கடல்நீர் நிறம் மாறியுள்ளமை பொது மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்படி குறித்த கடலின் நிறமானது பச்சை நிறமாக மாறியுள்ளது. இந்த கடற்பரப்பில் சுனாமி தாக்கத்திற்கு பின்னரும், 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட கஜா புயலின் காரணமாகவும் கடலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த கடற்பரப்பில் இறந்த மீன்கள் அதிகளவாக கரையொதுங்குவதாகவும், இதன்காரணமாக சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான நிகழ்வு இந்தப் பகுதியில் நிழந்ததே இல்லை எனக் குறிப்பிடும் மக்கள், இது குறித்து இராம



## பயங்கரவாதத்தின் வேர்கள் அயல் நாட்டில் வளர்க்கப்படுகின்றன

### பிரதமர் மோடி சுட்டிக்காட்டு

பயங்கரவாதம் சர்வதேச பிரச்சினையாக காணப்படுவதுடன், பயங்கரவாதத்தின் வேர்கள் அயல் நாட்டில் வளர்க்கப்படுகின்றன என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலின் நினைவு தினம் நேற்று முன்தினம் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் "பயங்கரவாதம் இன்று ஒரு தத்துவமாக மாறி இருக்கிறது. இது, ஒரு சர்வதேச பிரச்சினையாகவும், உலகளாவிய அச்சுறுத்தலாவும் மாறிவிட்டது. இந்த பயங்கரவாதத்தின் வலிமையான வேர்கள் அனைத்தும் நமது அண்டை நாட்டில் வளர்க்கப்படுகின்றன.

இந்த தத்துவம் மற்றும் பயங்கரவாதத்துக்கும், பயங்கரவாதிகளுக்கும் அடைக்கலம் கொடுப்போருக்கும் எதிராக உலக நாடுகள் ஒரு உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த சவால்களை எதிர்கொள்ள இந்தியா முழுத்திறமையுடன் இருக்கிறது. ஏற்கனவே இதை நிரூபித்துள்ள நாங்கள் எதிர்காலத்திலும் அதை வெளிப்படுத்துவோம்" எனவும் தெரிவித்தார். (ஜ-2)

## நாட்டிற்கு து

## ஜனாதிபதியைச்

### உக்ரேய்ன் நாடாளுமன்ற

(கிவ்)

தேசத்துக்கு துரோகம் செய்தால் ஜனாதிபதி கூட பதவியில் இருந்து நீக்கம் செய்யும் விதமான சட்டம் உக்ரேய்ன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உக்ரேய்ன் நாட்டின் புதிய ஜனாதிபதியாக விளாடிமிர் ஜிலென்ஸ்கை கடந்த மே மாதம் பதவி ஏற்றார். இவர் தனது தேர்தல் பிரசாரத்தின் போது "தேசத்துரோகத்தில் ஈடுபட்டால் ஜனா

# வெளிநாடு

## ...கெளுக்கு எதிராக ...ிரப்படுத்துங்கள்!

### ...்தா தலைவர் அழைப்பு

**...்கள் உள்ளிட்ட சில நாடுகளை குறிவைத்து ...கொள்ளுமாறு அல்கொய்தா பயங்கரவாத ...வர் அய்மான் அல் ஜவாஹிரி அறைகூவல்**

ணத்தை மாற்றக்கூடாது.

ஜிகாதியாக மாறிவிட்டால், நம்முடைய நோக்கம் முழுமையும் இராணுவத்தை இலக்காக வைக்க வேண்டும். அமெரிக்க இராணுவம் உலகின் அனைத்து இடங்களிலும் தங்களின் இருப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

உலகின் கிழக்கில் இருந்து மேற்கு வரை அமெரிக்க இராணுவம் பரவி இருக்கிறது. உங்களின் நாடுகள் அமெரிக்கர்களினால் சிதறடிக்கப்படுகின்றன, ஊழல் பரப்பி விடப்படுகின்றன. இதைத் தடுக்க வேண்டும். அல்கொய்தா அமைப்பில் உள்ளவர்கள் அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகத் தாக்குதலை தீவிரப்படுத்த வேண்டும்' என மேலும் தெரிவித்தார். (ஐ-2)

## ...றிய கடல்; இராமேஸ்வரத்தில் பதற்றம்!



நாதபுரம் மீன்வளத் துறை இணை இயக்குநர் காத்தவராயனிடமும், மாவட்ட ஆட்சியரிடமும் தகவல் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

கடலில் நிறம் மாறுவது குறித்தும், அரியவகை மீன்கள் பல இறந்த நிலையில் கரையொதுங்குவது குறித்தும் CMFRI என்ற அமைப்பு ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ... துரோகமிழைத்தால் ...யக் கூட பதவி நீக்கலாம்

### ...மன்றில் நிறைவேற்றம்

திபதியைக் கூட உடனடியாக பதவி நீக்கம் செய்யக்கூடிய வகையிலான சட்டம் உருவாக்கப்படும்' என வாக்குறுதி அளித்தார். இந்நிலையில், தனது தேர்தல் வாக்குறுதியின் படி தேசத்துரோகத்தில் ஈடுபடும் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான புதிய சட்ட மசோதாவை கடந்த மாதம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இதையடுத்து, பல கட்ட விவாதங்கள் முடிவடைந்து பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின் மூலம் தேசத்துரோகம் மற்றும் கொடுங்குற்றங் களில் ஈடுபட்டால் ஜனாதிபதியை பாராளுமன்றம் பதவி நீக்கம் செய்யலாம்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தப் புதிய சட்டம் அரச நிர்வாகத்தில் நிலவி வரும் இடர்பாடுகள் மற்றும் குறைகளைத் தீர்க்க மிகப்பெரிய அளவில் உதவி செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

## இராணுவ முகாமைக் கைப்பற்ற முயற்சி 10 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



(மொகாடிஷு)

சோமாலியா நாட்டின் தென் பகுதியில் உள்ள இராணுவ முகாமைக் கைப்பற்ற வந்த அல் ஷபாப் பயங்கரவாதிகள் 10 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற உள்நாட்டு தீவிரவாதிகளான அல் ஷபாப் குழுக்கள் ஏராளமாக இயங்கி வருகின்றன. சோமாலியா அரசை கவிழ்த்து விட்டு மிகவும் கண்டிப்பு நிறைந்த இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாக உள்ளது.

உள்நாட்டு இராணுவ வீரர்கள் மீது அவ்வப்போது அதிரடியாகத் தாக்குதல் நடத்திவரும் இந்தத் தீவிரவாதிகள் மத்திய ஆபிரிக்காவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவரும் பன்னாட்டு அமைதிப் படையினரையும் கொன்று குவிக்கின்றனர்.

மேலும், வெளிநாட்டினர் வந்து செல்லும் உணவகங்களை குறிவைத்தும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் தென்பகுதியில் உள்ள ராணுவ முகாமைக் கைப்பற்ற வந்த அல் ஷபாப் பயங்கரவாதிகள் 10 பேர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டனர். (ஐ-2)

## அமெரிக்காவில் டொரியன் தாக்கத்தால் 2 ஆயிரத்து 500 பேர் மாயம்



(வோஷிங்டன்)

பஹாமாஸை தாக்கிய டொரியன் சூறாவளியினால் இரண்டாயிரத்து 500 பேர் காணாமல் போயுள்ளனர். பஹாமாஸின் அவசர சேவைப்பிரிவு இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டது.

அத்துடன், டொரியன் புயல் தாக்கம் காரணமாக 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்ததுடன் பலர் காணாமல் போயுள்ளமை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் பஹாமாஸை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தககது. (ஐ-2)

## ஈரான் மீதான அமெரிக்காவின் போர் தோல்வியில்தான் முடியும்

### ஜனாதிபதி ஹசன் ரவுகானி எச்சரிக்கை

(டெஹ்ரான்)

ஈரான் மீதான அமெரிக்காவின் போர் நாட்டம் தோல்வியில் முடியும் என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி எச்சரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் புதன்கிழமை கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவித்த ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி, "ஈரானுக்கு எதிராக அமெரிக்காவின் போர் நாட்டமும், விரோதப்போக்கும் தோல்வியில் தான் முடியும். இதனை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும். அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பாக ஈரான் மேற்கொண்ட உறுதிப்பாடுகளை குறைக்கத் தயாராகவுள்ளது" எனத் தெரிவித்தார்.

ஈரான் கடந்த வாரம் 2015 இல் மேற்கொள்ளப்பட்ட அணுவாயுத ஒப்பந்தத்தில் உள்ள சில நிபந்தனைகளை மீறி யுரேனியம் தயாரிப்பில் ஈரான் ஈடுபடுவதாகத் தெரிவித்தது. அதே நேரம் இதனை அமெரிக்கா கடுமையாக விமர்சித்தது.

அதேநேரம், அணு ஆயுதத் தயாரிப்பு தொடர்பிலான கட்டுப்பாடுகளை ஈரான் தளர்த்தியதுடன், தன்னிச்சையாகவும் செயற்பட்டு வருகின்றது.


2015ஆம் ஆண்டு அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய 6 வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதில் யுரேனியம் செறிவூட்டலுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக அணுசக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவோம் என்றும் அணு ஆயுதத் தயாரிப்புக்கு பயன்படுத்த மாட்டோம் என்றும் ஈரான் உறுதியளித்திருந்தது. இதை ஏற்று அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பல்வேறு பொருளாதாரத் தடைகளும் நீக்கப்பட்டன.

எனினும் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2018ஆம் ஆண்டு அறிவித்தார். இதனைத் தொடர்ந்து ஈரான் அணு ஆயுத சோதனை ஒப்பந்தங்களை அவ்வப்போது மீறி வருகிறது. இதன் காரணமாக ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, அமெரிக்காவின் நடவடிக்கையில் கடும் அதிருப்தியடைந்த ஈரான், அமெரிக்காவுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தப்போவதில்லை என்றும் கூறியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி!

# பிரிகேடியர் தேசப்பிரிய உள்ளிட்ட நால்வருக்கு எதிராக குற்றப்பத்திரிகை



(கம்பஹா)

**சுத்தமான குடிநீரைக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த ரத்துபஸ்வல பிரதேச மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, மூவரைக் கொலை செய்த விவகாரம் தொடர்பில் பிரிகேடியர் அநுர தேசப்பிரிய குணவர்த்தன உள்ளிட்ட நால்வருக்கு எதிராக சட்டமா அதிபர் நேற்று முன்தினம் கம்பஹா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தார்.**

வெலிவேரிய - ரத்துபஸ்வல பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி மூன்று பேரைக் கொலை செய்தமை, தாக்குதல் நடத்தி சிலரைக் காயப்படுத்தியமை உள்ளிட்ட 94 குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்தக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

ரத்துபஸ்வல பகுதியில் 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் மூன்று பேர் உயிரிழந்ததுடன், 12 பேர் காயமடைந்தனர். இதேவேளை பிரதேச மக்கள் மீது மீண்டும் நடத்தப்பட்ட தாக்குதலில் மேலும் 21 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "புலதிசி" கடுகதி புகையிரதப் பயணம் ஆரம்பம்







(கொழும்பு)

கொழும்பு கோட்டையிலிருந்து பொலநறுவை வரை பயணிக்கும் "புலதிசி" நகர் சேவை கடுகதி புகையிரதம் நேற்று முன்தினம் பிற்பகல் தனது பயணத்தை ஆரம்பித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்தப் பயணத்தில் இணைந்துகொண்டதோடு, அவர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மருதானை புகையிரத நிலையம் வரை பயணித்தார். தினமும் பிற்பகல் 3 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் இப்புகையிரதம் இரவு 7.45 மணியளவில்பொலநறுவையைசென்றடையும்.

மறுநாள் அதிகாலை 3.45 மணியளவில் பொலநறுவையிலிருந்து மீண்டும் புறப்படும் புகையிரதம் காலை 9 மணியளவில் கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடையும்.

இப்புதிய கடுகதி புகையிரதம் பொலநறுவை, குருநாகல், மஹவ, கெக்கிராவ, ஹபரண, ஹிங்குராங்கொட ஆகிய புகையிரத நிலையங்களில் நிறுத்தப்படும்.

இலங்கை புகையிரத சேவைக்கு புதிதாக இணைக்கப்பட்ட புலதிசி நகர் சேவை கடுகதி புகையிரதம் எஸ் 13 சார்ந்த அதிநவீன சொகுசு புகையிரதமாகும்.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் தரண் ஜித் சிங் சந்து உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ-7)

"கொள்கையை ஏற்றோர் சின்னத்தை நிராகரிப்பது ஏன்?

# சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சிக்கு தயாசிறி உள்ளிட்டவர்களே பொறுப்பு

## சுசில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் கொள்கையையும் ஜனாதிபதி வேட்பாளரையும் ஏற்றுக்கொள்ளும் சுதந்திரக் கட்சியினருக்கு ஏன் மொட்டுச் சின்னத்தை ஏற்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சிக்கு தற்போது கட்சியின் முக்கிய பதவிகளிலுள்ள பொதுச்செயலாளர் தயாசிறி உள்ளிட்ட குழுவினரே பொறுப்புக்கூற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கு எதிராகவே பொதுஜன பெரமுன உருவாக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சுதந்திரக் கட்சி பலமான நிலையில் இருந்தது. ஆனால் தற்போது அவ்வாறு இல்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவால் விடுக்கும் பிரதான கட்சியாக இன்று பொதுஜன பெரமுன எழுச்சி பெறும் அளவிற்கு சுதந்திரக் கட்சி பலவீனமடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சாமர்த்தியம்

யாரையும் ஏமாற்றவும் கூடாது. ஏமாந்து போகவும் கூடாது. அதுக்கு ரொம்ப சாமர்த்தியம் வேணும்.

ஒரு ஊரிலே ஒரு பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மையிலேயே வீணை வாசிக்கிறதிலே ரொம்ப கெட்டிக்காரர்.

அவருடைய வீணை வாசிப்பைக் கேட்டுவிட்டு ஒரு பெரிய மகாராஜா என்ன செய்தார் தெரியுமா?

ஆள் உயரத்துக்கு ஒரு வீணையைத் தயார் செய்து அதை அந்த வித்துவானுக்கு பரிசாகக் கொடுத்து விட்டார்.

அதன் பின்பு அந்த வித்துவான் எந்த ஊருக்குப் போனாலும் அந்தப் பெரிய வீணையை எடுத்துக்கொண்டு போய் தான் வாசிப்பார். அவர் காலத்திலே அவர்தான் வீணை வாசிக்கிறதிலேயே நம்பர் வன். அதேபோல இன்னொரு வித்துவான் இருந்தார். அவர் கடம் வாசிப்பவர். அவர் காலத்திலே அவர் தான் கடம் வாசிக்கிறதிலை நம்பர் வன்.

இப்படி இவர்கள் இரண்டு பேரும் அவரவர் வாசிப்பிலே ரொம்ப 'டொப்'பிலே இருந்தார்கள். இருந்தாலும் அவர்கள் இரண்டு பேருக்குள்ளே ஏதோ மனஸ்தாபம். இவர் போற கச்சேரிக்கு அவர் போறதில்லை. அவர் போற கச்சேரிக்கு இவர் போறதில்லை.

இவர்கள் இரண்டு பேரையும் எப்படியாவது ஒரே மேடையிலே வாசிக்க வைத்து கேட்க வேண்டும் என்பது மக்களுடைய விருப்பம். இருந்தாலும் அது நடக்காத காரியமாகவே இருந்தது.

இரண்டு துருவமாக இருக்கிறவர்களை எப்படி ஒன்று சேர்க்க முடியும். ஒரு கிராமத்துப் பண்ணையார் இருந்தார். பெரிய சவடால் பேர்வழி. இருந்தாலும் கௌரவத்துக்கு ஆசைப்பட்டவர். அவர் வீட்டிலே ஒரு கல்யாணம் வந்தது. அவர் பொண்ணுக்கு கல்யாணம்.

இந்த கல்யாண கச்சேரிக்கு எப்படியாவது அந்த இரண்டு பெரிய வித்துவான்களையும் கொண்டு வந்து விட வேண்டும் என்று நினைத்தார். ஆனால் இவர் வந்தால் அவர் வரமாட்டார். அவர் வந்தால் இவர் வரமாட்டாரே என்ன செய்கிறது? யோசித்தார்.

"சரி இவர் வருகிறார் என்ற விடயத்தை அவரிடம் சொல்ல வேண்டாம். அவர் வருகிறார் என்ற விடயத்தை இவரிடம் சொல்ல வேண்டாம். இரண்டு பேரிடமும் பொய் சொல்லி அழைத்துக் கொண்டு வந்திடுவோம்.

கச்சேரி சமயத்திலே திடீரென்று மேடையிலே ஏற்றி விட்டு விடுவோம். மேடையிலே ஏறியதற்குப் பிறகும் எல்லாருக்கும் முன்னால் சண்டை போட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள்" என்று ஒரு முடிவுக்கு வந்தார். அதேமாதிரி ஏற்பாடும் செய்து விட்டார்.

அந்த வீணை வித்துவானையும் கட வித்துவானையும் தனித்தனியாக ஒருத்தர் வந்திருக்கிறது இன்னொருத்தருக்கு தெரியாமல் அழைத்துக் கொண்டு வந்து இரண்டு தனித்தனி வீடுகளிலே தங்க வைத்துவிட்டார். அன்றைக்குப் பின்னேரம் கச்சேரி. இவர்கள் காலையிலேயே வந்து தங்கி விட்டார்கள்.

ஆனால் அவர்கள் வந்து சேர்ந்த கொஞ்ச நேரத்திலே உண்மையிலேயே நடந்திருக்கிறது என்ன என்பது அரசல் புரசலாக அவர்கள் இரண்டு பேருக்குமே தெரிய ஆரம்பித்தது.

ஊரில் இதற்கென்றே சிலபேர் இருப்பார்களே... ஒருத்தருக்கு ஒருத்தர் பத்த வைப்பதற்கு என்று! வீணை வித்துவான் யோசித்துப் பார்த்தார். கட வித்தவானை எப்படி கட் பண்ணுவது என்று பார்த்தார்.

உடனே அந்தப் பண்ணையாரைப் பார்த்தார். இதோ பாருங்கள் அந்த கட வித்துவானோடு நான் வாசிக்கிறதில் எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. இருந்தாலும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. அவர் எத்தனை கடம் கொண்டு வந்திருக்கிறார் கவனித்தீர்களா? என்றார்.

"கவனித்தேன். இரண்டு கொண்டு வந்திருக்கிறார்" என்றார் இவர். "அது எதற்கென்றால் ஒரு கடம் உடைந்துவிட்டால் இன்னொன்றை உபயோகப்படுத்திக் கொள்வதற்கு. ஒரு சுபகாரியத்திலே மேடையிலே பானை உடைந்துவிட்டால் அது நல்லா இருக்குமா? யோசித்துப் பாருங்கள்"என்றார்.

"நீங்க சொல்லுறது நியாயம்தான். நம்ம கச்சேரியிலே கடமே வேண்டாம். அந்த ஆளுக்கு பேசின பணத்தை கொடுத்து திருப்பி அனுப்பி விடுகிறேன்" என்று சொல்லி விட்டு நேரா அவரிடம் போனார். பணத்தை கொடுத்து கணக்கு தீர்த்திட்டு விடயத்தைச் சொன்னார்.

உடனே கட வித்துவான் இந்தப் பண்ணையாரை பார்த்து "நீங்க சொல்லுறது சரி...இருந்தாலும் நானும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை" என்றார்.

"என்னங்க அது?" என்றார் இவர்.

"அந்த வீணை வித்துவானு டைய வீணை, ஆள் உயரம் உள்ளது. அதை அவர் மட்டும் தூக்க முடியாது. அந்த வீணை மேலே பட்டுத் துணி போர்த்தி முன்பக்கம் 2 பேர், பின்பக்கம் 2 பேர் ஆக நாலு பேர் தூக்கிக்கொண்டு மேடைக்கு வருவார்கள். அது பார்க்கிறதுக்கு எப்படி இருக்கும் என்று நீங் களே யோசித் துப் பாருங்கள்" என்றார்.பண்ணையார் யோசித்துப் பார்த்தார். பாடையைத் தூக்கிற ஞாபகம் வந்தது.

"சுபமுகூர்த்தம் நடக்கிற வேளையிலே இது தேவையா என்று யோசித்துப் பாருங்கள்" என்றார் 'கட' வித்துவான்.

பண்ணையார் யோசித்தார். 'என் வீட்டுக் கல்யாணத்துக்கு கச்சேரியே வேண்டாம்' என்று சொல்லிப்போட்டு அவரையும் கணக்குத் தீர்த்து அனுப்பி வைத்துவிட்டார். இந்த மூன்று பேரில யார் கெட்டிக்காரர்கள் என்று நினைக்கிறீர்கள்? ஒருவருக்கொருவர் சளைத்தவர்களில்லை.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 18.09.2019- 17.10.2019

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம்



விகாரி வருடம் புரட்டாதி மாதம் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் உச்சம் பெற்றிருக்கிறார். அவரோடு சூரியன் இணைந்து புத- ஆதித்திய யோகத்தை உருவாக்குகிறார். அதே நேரத்தில் ஜென்மத்தில் ராகுவும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிப்பதால், நாகதோஷ அமைப்பில் உங்கள் இராசி இருக்கிறது. எனவே ஏற்றமும், இறக்கமும் இணைந்ததாகவே உங்கள் வாழ்க்கை அமையும். ஒருநாள் அதிக வரவால் மனம் மகிழும். மற்றொரு நாள் அதிக செலவால் மனம் குமுறும்.

இம்மாதம் இராசிநாதன் புதன் பலம் பெற்றிருப்பதால் உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆயினும் கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் மூட்டுவலி, முழங்கால்வலி ஏற்பட்டு, இனம்புரியாத கவலைகளை உருவாக்கும். எதிலும் ஒரு திருப்தி இல்லாத நிலை இருப்பதை உணர்வீர்கள். சில காரியங்கள் அரைகுறையாக நிற்கலாம். கண்டகச் சனியின் ஆதிக்கம் இன்னும் சில மாதங்கள் இருக்கிறது. இருப்பினும் விரைவில் குருப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது.

பெயர்ச்சியாகும் குரு, உங்கள் இராசியைப் பார்க்கவிருக்கிறார். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதியும் நேரத்தில் படிப்படியாக முன்னேற்றங்கள் வந்துசேரும். அதுவரை நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். இம்மாதத்தில் எந்தப் புது முயற்சிகளை நீங்கள் செய்தாலும் யோசித்தும், இறைவனைப் பூஜித்தும் செய்யுங்கள். ஆறில் குரு ஊரில் பகை என்பார்கள்.

எனவே மறைமுக எதிர்ப்புகள் வந்தாலும், அவற்றால் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. பிள்ளைகளால் மனக்கலக்கம் ஏற்படும். அவற்றைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்குண்டு. உறவினர்களின் ஒத்துழைப்பு ஓரளவே கிடைக்கும்.

இம்மாதம் வரும் மகாளய அமாவாசை அன்று முன்னோர்களை வழிபாடு செய்வதோடு, நவராத்திரி நாட்களில் பராசக்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். விஜயதசமியன்று நீங்கள் செய்யும் முறையான வழிபாடு வெற்றிக்கு வித்திடும்.

துலாம் புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் புதன் இதுவரை உங்கள் இராசிக்கு 4ஆம் இடமான சுக ஸ்தானத்தில் உச்சம் பெற்று சஞ்சரித்தார். அவர் செப்டெம்பர் 25ஆம் திகதி புத்திர ஸ்தானம் எனப்படும் 5ஆம் இடத்திற்கு வரப் போகிறார். இதன்விளைவாக பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாகும். அவர்களின் படிப்பு அல்லது திருமணத்திற்காக செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராக பார்த்த மருத்துவம் பலன்தரும். அசையாச் சொத்துக்கள் வாங்குவதற்கான அறிகுறிகள் தென்படும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். கல்வி சம்பந்தமாகவோ, கலைத்துறை சம்பந்தமாகவோ ஏதேனும் புதுமுயற்சிகள் செய்தால் அதில் அனுகூலம் கிடைக்கும்.

கன்னி செவ்வாயின் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், செப்டெம்பர் 26ஆம் திகதி 4ஆம் இடமான கன்னி இராசிக்கு செல்கிறார். 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அகலும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். புதிய வாகனம் வாங்கிப் பயணிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். அதை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். சொத்து வாங்கியதில் ஏற்பட்ட வில்லங்கங்கள் அகலும்.




ஒரு சிலருக்கு ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்து வாங்கும் யோகம் உண்டு. உடன் பிறப்புகளின் உதவி ஓரளவு தான் கிடைக்கும். இந்தக் காலத்தில் அங்காரக ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் அனைத்துக் காரியங்களிலும் இருக்கும் தடைகள் அகலும்.

சொந்த வீட்டில் சுக்கிரன்

ஒக்டோபர் 5ஆம் திகதி துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அவருக்கு அது சொந்த வீடாகும். உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்கிரன், 5ஆம் இடத்திலேயே சஞ்சரிப்பதால் பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். பெண் வழிப் பிரச்சினைகள் படிப்படியாக குறையும். அரசியல்வாதிகளால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். தொழில் போட்டிகள் விலகும். பிரிந்து சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் வராகி அம்மன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

யோசித்தும், பூஜித்தும் செயற்பட வேண்டிய மாதம் இது. குடும்பப் பிரச்சினைகளை வெளியிடங்களில் விமர்சிக்க வேண்டாம். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் விரும்பும் விதத்தில் அமையும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். அன்பும், பாசமும் அதிகம் செலுத்தினால்தான் அமைதி கிடைக்கும். தாய் - தந்தையர் உங்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து கொடுக்கலாம். இடம் வாங்குவது சம்பந்தமாக எடுத்த முடிவை மாற்றிக் கொள்வீர்கள்.

'புதியதாக வீடு கட்டலாமா? அல்லது பழைய வீட்டை வாங்கிப் புதுப்பிக்கலாமா?' என்று யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எவ்வளவு தான் வேலை பார்த்தாலும் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க இயலாது. பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நவராத்திரி நாட்களில் விரதமிருந்து 9 நாட்களும் அம்பிகையை வழிபட்டு வந்தால் துன்பங்கள் அகலும்.

## மங்கல ஓசை மனையில் கேட்கும்



விகாரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் தொழில் ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். யோகாதிபதியாகவும், தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய், தன ஸ்தானத்தில் இருக்கிறார். எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும். பாசமிக்க நண்பர்கள் உங்களுக்கு நேசக்கரம் நீட்டி முன்னேற வழிவகுத்துக் கொடுப்பர். தடைக் கற்கள் எல்லாம், குருவின் பார்வையால் படிக்கற்களாக மாறும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல் வந்து சேரும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டும் விதத்தில் நீங்கள் எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

விரய ஸ்தானத்தில் இராகு இருந்தாலும் விரயத்திற்கேற்ற இலாபம் வந்து கொண்டேயிருக்கும். குறிப்பாக ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழிபிறக்கும். சகாய ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், புதன் ஆகிய மூன்று கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. தனாதிபதி சூரியன் சகாய ஸ்தானாதிபதி புதனுடன் இணைந்து மூன்றாம் இடத்தில் சஞ்சரிப்பதால் எதிர்பார்ப்புகள்நிறைவேறும் இடம், பூமி வாங்கும் யோகமும், கடன் பிரச்சினை தீரவும் வழிபிறக்கும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும் நேரம் இது. அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிக பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு ஒருசில நல்ல காரியங்களும் நடைபெறும். சூரிய பலம் நன்றாக இருப்பதால் அரசு வழி ஆதரவும், அக்கம் பக்கத்தினர் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள் இராசியில் குரு பார்வை பதிவதால் குருவை வழிபட்டு வருவதன் மூலமும், குரு பீடங்களுக்கு சென்று வருவதன் மூலமும் கூடுதல் நன்மை கிடைக்கும். மேலும் இம்மாதம் வரும் மகாளய அமாவாசை நாளில் முன்னோர் வழிபாட்டையும், நவராத்திரி நாளில் அம்பிகை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

துலாம் புதனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 25ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், நான்காம் இடத்திற்கு வரும்போது பயணங்கள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சியை முன்னிட்டு, ஒரு சிலர் தொலைதூர நாடுகளுக்கு செல்வர். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளால், உங்கள் பணத்தேவைகள் பூர்த்தியாகலாம். பெண் சகோதரத்தின் வழியே இருந்த பிரச்சினை தீரும். சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாகும்.

கன்னி செவ்வாயின் சஞ்சாரம்

செப்டெம்பர் 26ஆம் திகதி கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் சகாய ஸ்தானத்திற்கு வரும் பொழுது பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். அரசு வேலைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து, பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.




துலாம் சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் கன்னி இராசியில் நீச்சம்பெற்று சஞ்சரித்த சுக்கிரன், ஒக்டோபர் 5ஆம் திகதி தன் சொந்த வீடான துலாம் இராசியில் அடியெடுத்து வைக்கிறார். இதனால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். வெளிநாட்டு முயற்சி கைகூடும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தாய்வழி ஆதரவு உண்டு. பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும். பயணங்கள் அதிகரிக்கும். அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் உண்டு. கணவன் - மனைவிக்குள் ஏற்பட்ட பிணக்குகள் அகலும். தாய்வழி ஆதரவு மற்றும் உடன்பிறப்புகளின் உதவி எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைக்கும். நிம்மதியை குலைத்த குடும்பப் பிரச்சினை படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும்.

இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. கட்டிய வீட்டை பழுது பார்ப்பீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றியாகும். பணிபுரியும் பெண்களுக்கு சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். விலையுயர்ந்த பொருட் கள் வாங்கும் முயற்சிக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மாற்று மருத்துவத்தின் மூலம் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியர்களை நவராத்திரி நாளில் வழிபட்டால் சிறப்பான பலன் கிடைக்கும்.

(தொடரும்)

# தேசத்தை வாழ்விக்கும் சந்நிதியான் தேரேறி வருகிறான்

ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவது போல வடபால் செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகிறது. அன்னதானக் கந்தனாக தொண்டைமானாறு ஆற்றங்கரையினிலே அருளாட்சி செய்து வருகிற சந்நிதிக் கந்தனுக்கு இன்று பக்திபூர்வமாக தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

இன்றைய தேர்த்திருவிழாவிலே ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் வேற்று நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் செல்வச்சந்நிதியில் கூடுகின்ற கண்கொள்ளாக் காட்சியைக் காணமுடிகிறது.

கதிர்காமத்தில் காவடிக்கந்தனாகவும் மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும் நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும் அருள்பாலித்துக் கொண்டிருக்கிற முருகப்பெருமான் செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாக ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறான்.

வட இலங்கையில் வடமராட்சிப் பகுதியில் தொண்டைமானாறு என்னும் புராதன நகரம் உண்டு. கருணாகரத் தொண்டைமான் எனும் சிற்றரசருடன் தொடர்பு பூண்ட நகரம் ஆகையால் இந்தப் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது. தொண்டைமான் ஆற்றங்கரையில் கழிமுகத்துக்கு அண்மையில் செல்வச்சந்நிதி முருகன் கோயில் அமைந்துள்ளது.

செல்வச்சந்நிதி ஆலயம் சின்னக் கதிர்காமம், செல்லக்கதிர்காமம், கல்லோடை எனும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வருகிறது. கோயில் சூழலின் இயற்கை அழகு எல்லோரையும் ஈர்ப்பது மருத மரக்காடும் பாக்கு நீரிணைக் கடலும் மருங்கே காணும் வயலும் இடையில் கிழக்கே இருக்கும் வல்லை வெளியும் திணை ஒழுக்கம் காட்டும்.

செல்வச் சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. பூசையில் மந்திரங்கள் இடம் பெறுவதில்லை வேறு எந்தக் கோயிலிலும் காணப்படாத சடங்கு முறையே சந்நிதியில் காணப்படுகிறது.

கதிர்காமத்து கொடியேற்ற நாளில் சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாகவும் பின்னர் கதிர்காமத்து தீர்த்தத் திருவிழாவன்று சந்நிதி திரும்பி வருவதாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன.

ஒரு நாள் இரவு முருகன் பூசாரியார் கதிர்காமரை நித்திரையில் இருந்து எழுப்பி அப்பா நான் பாத யாத்திரையாக வந்தமையால் பசி, தாகம் அதிகரித்துள்ளது ஏதும் உண்பதற்குக் கொடு என்று கேட்டாராம். கதிர்காமரும் நான் தங்களுக்கு அமுது படைக்க இவ்வேளை எங்கு போவேன் என்று மனம் நொந்தார்.

உன்னிடம் இருக்கும் சிறிதளவான பயற்றை துவைத்து இளநீரும் தா என்று கேட்டு வாங்கி முருகன் திருவமுது செய்தார். இன்றும் அவ்விதமாக பயற்றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத்திலிருந்த திரும்பி வருகின்ற முருகனின் பூசைக்கு படையல் செய்து வருவது நடைமுறையில் உள்ளது.

செல்வச்சந்நிதி சூழலிலே காணப்பட்ட மடங்கள் சில சிதைந்த நிலையில் இருக்கின்றன. அந்தக் காலங்களில் அம்மடங்களிலே அடியார்கள் தங்கவும் அன்ன தானம் நிறைவேற்றவும் வசதியாக அமைந்தன.



இன்றும் சந்நிதியான் ஆச்சிரமம், ஆனந்தா ஆச்சிரமம் போன்ற மடங்கள் அப்பணியை நிறைவேற்றி வருகின்றன.

சந்நிதி பூசை நேரங்களில் ஒலிக்கும் பறைமேளம் அன்பர்களை பரவசப்படுத்தும் நிறைந்த கற்பூர ஒளியிலும் செறிந்த புகைமண்டல நடுவிலே மின்னல் போல் ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப்படாதார் எவருமில்லையென்றே கூறலாம். சந்நிதி மூலஸ்தானத்தில் வேலே காட்சியளித்து எம்மை ஆட்சி செய்கிறது.

மருதர் கதிர்காமராலே வணங்கப்பட்டவேல் கருவறையிலே இறையருளை பொழிந்த வண்ணமாகவே உள்ளது. வீரவேலாக, விண்ணோர் சிறைமீட்ட தீரவேலாக, உமையவள் ஈய்ந்துவந்த ஞானவேலாக சந்நிதிக் கோயிலில் எழுந்தருளி அருளாட்சி புரியும் வேலுக்குத்தான் எத்தனை வல்லமை, எத்தனை மகிமை. எந்நிதியும் தருவான் சந்நிதியான் என அவன் திருப்பாதத்தைப்பற்றி ஈழத்தமிழ் மக்கள் இன்று வேலவன் ஆரோகணித்து வரும் திருத்தேரை வடம் பற்றி வரம் வந்து வாழ்வு கேட்டு நிற்கிறார்கள். நிரந்தரமான தீர்வினைத்தந்து தேசத்தில் வாழ்விக்க வாவென மன்றாடி நிற்கின்றனர்.

**மதுரகவி.காரை.**
**எம்.பி.அருளானந்தன்**

## தமிழர் தலைவா தேரேறி வருக

தனித்தமிழ் நாதம் தரணியில் ஓங்க
தமிழிசை பண்பாட தேரேறி வருக!
தாரணி புகழும் வடிவேல் குமரன்
சந்நிதி வேலவா தேரேறி வருக!
இசைத் தமிழரங்கம் கண்ட நற் சுவையென
திகழும் குமரா தேரேறி வருக!
கவியின் சுவையென கவின் தமிழ் நாதம்
காசினி மீதொளிர தேரேறி வருக!
தனித்தமிழ் ஓங்க நம்வினை தீர
நற் தமிழ் பண்பாட தேரேறி வருக!
தமிழருக்கோர் நல்ல தீர்வினை வழங்கிட
தமிழர் தலைவா தேரேறி வருக!

**கலைமாமணி.க.லோகேஸ்வரன்**

## சந்நிதி தேர் வருகுதையா

மூத்தவன் கணபதி தேர் முன்னே வர
ஓங்காரத்தில் வேல் தாங்கி ஆறுமுகத்துடன்
சந்நிதி வேலவன் தேர் பாவக்கயிறு நாம் இழுக்க
பின்னே எமை ஆசிர் வதித்து வருகுது பாரீர்
சக்திகளாம் தெய்வி வள்ளி துணையிருக்க
பக்தி மயமான தேவர்கள் புடைசூழ
ப(ப)ார) மரர் சக்திமய அரோகரா முழங்க
செல்வச் சந்நிதியான் தேர் வருகுது பாரீர்.

**கலாபூஷணம்.ம.கணேசலிங்கம்**

## குறைதீர்க்கும் சந்நிதியான்

முருகா என்று அழைக்கவே
ஓடோடி வருவாய் ஏதோ ஓர் வடிவில்
எம்துயர் துடைக்கவே நீயெடுப்பாய்
பல வேடம்
வேல் என்ற ஆயுதம் தாங்கியே வினைகளை
அறுப்பவன் நீயே
இதனால் உன்னை வேலாயுதம் என்று அழைப்பர்
தொண்டைமானாற்றில் நீராடி நோய்கள் தீர்க்கவே
உன்னை ஆற்றங்கரையான் என்றும் அழைப்பார்
நீ செய்யும் அற்புதங்களுக்கு
எல்லை இல்லை முருகா முருகா

**சிவசுரபி-கலாபூஷணம்.இ.சரவணபவன்,**
**அராலியூர்.**

## எந்நிதியும் தரும் சந்நிதியான்...

பொன்னிகர்த்த மேனியனே பூமாலை பாமாலை
சாத்தியுனை ஏத்தவரும் எண்ணிறைந்த அடியவர்க்கு
எந்நிதியும் நீ தருவாய் என்பதெல்லாம் உண்மையப்பா
ஏறுமயில் வாகனனே என்னினத்தின் நாயகனே
அன்னதானக் கந்தனென்றும் சின்னக்கதிர் காமனென்றும்
ஆண்டவன் நீ பூண்டிருக்கும் பேர்வரிசை நீண்டதப்பா
என்னுள்ளத்தில் நிறைந்தவனே சந்நிதியில் உறைந்தவனே
நின்னடியைச் சரண்புகுந்தேன் அருள்புரிவாய் சரவணனே!

**சின்னையா சிவபாலன்,கோண்டாவில்.**

## சஞ்சலம் தீர்க்கும் சந்திதிமுருகா தேரேறி வருக!

சஞ்சலம் தீர்க்கும் சந்நிதி முருகா தேரேறி வருக!
சண்முக சீலா சங்கரன் மாலா சந்நிதி முருகா தேரேறி வருக!
சந்ததம் கீதத் திருப்புகழ் பாடி சிந்தை மகிழ்ந்திட தேரேறீ வருக!
சரண மலரடி மறவா வரம் சந்நிதியானே தேரேறி வ்ருக!
சங்கரன் காதில் தத்துவம் கூறிய சிங்கார வேலா தேரேறி வருக!
சாந்தியோடு சமாதானம் சர்வமெங்கும் நிலவிடவே தேரேறி வருக!

**வட்டூர் செல்வா, ஓய்வு பெற்ற நூலகர்,**
**வட்டுக்கோட்டை.**

## தேரேறி வருகிறான் செல்வக்குமரன்

தேரேறி வருகிறான் எங்கள் சிவமைந்தன்
பார்புகழும் பாலனவன் பார்வதியின் குமரன்
ஊரெல்லாம் சூழ்ந்துவர உலகெல்லாம் பார்த்திருக்க
கார் குழல் நங்கையர் இருபுறமும் அமர்ந்திருக்க

வேதம் ஒலித்திட நாதம் முழங்கிட
பாதம் பணிந்துன்னை பக்தர் சூழ்ந்திட
ஓதும் பாமாலை ஓங்காரமாய் ஒலிக்க
ஆறுமுகன் வருகிறான் அழகான தேரிலே

அன்று தமிழ் வளர்த்த தலைவனே தங்க முருகா
இன்றும் செம்மொழி காக்க நீ வேண்டும் வேலா
குன்று தனில் குடியிருக்கும் கோலமயிலழகா
வெற்றி வேல் கொண்டு வினைகளை அழித்திடு குமரா

நின்திரு வீதியெங்கும் நறுமணம் கமழ
கல்லும் கரைந்துருகிக் கந்தன் பெயர் கூற
எல்லையற்ற இன்பமது எம்மனதில் பொங்க
செல்வக் குமரனவன் தேரேறி வருகிறான்

**சி.அனுஷபவானி, யாழ்ப்பாணம்.**



## "இரதமேறும் சந்நிதியானே எம்மக்களுக்காக இரங்கிடு"

ஆற்றங்கரைதனில் வீற்றிருக்கும் சந்நிதி வாழ் முருகா!
அருள் வேண்டி வருவோர்க்கு வரமருளும் - முருகா!
அடியவர்களுக்கு அமுதளிக்கும் அன்னதானக் கந்தா!
பச்சை மயில் ஏறிவரும் பால முருகா!
பரமனுக்கு உபதேசம் செய்த பால முருகா!
நாட்டில் நிம்மதியோ இன்னும் நிலைபெறவில்லை
நல்லாட்சிதனில், இனப்பிரச்சினை, கைதிகள் விடுதலை,
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கதை தொடர்கிறது
இனிதே தீர்வொன்று மலர்ந்திட - இன்று
இரதமேறும் சந்நிதியானே எம்மக்களுக்காக இரங்கிடு

**நயினை விசு - இராசநாயகம்**

## சந்நிதியில் தேரேறும் எங்கள் முருகா

சந்நிதியில் தேரேறும் எங்கள் முருகா
எந்நிதியும் தந்திடும் மால்மருகா
அன்னதானக் கந்தனாய்ச் சிறப்பவனே
அரும்பசி களைகின்ற ஏழைகளின் தெய்வமே
தொன்மைமிகு தேரேறி நீ வருகையிலே
தொலையட்டும் எம்மை சூழ்ந்த பாவவினையே
பக்கபலமாய் நின்று தமிழ்வெல்ல
மிக்க உறுதியுடன் உன் வடம் பிடித்தோம்
தக்க வரம் தந்திடுவாய் சந்நிதியானே

**புலோலியூர்,**
**வேல்நந்தன்.**

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களும்

16



**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

## ஏழாவது ஜனாதிபதித் தேர்தல் -2015

இலங்கையின் ஏழாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க 2015 ஜனவரி 8 ஆம் நாளன்று நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக்காலம் 2016 ஆம் ஆண்டில் நிறைவடைவதற்கு முன்னதாகவே புதிய தேர்தலுக்கான அறிவிப்பு 2014 நவம்பர் 21 ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் 2014 டிசெம்பர் 8 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளராக மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிடவிருப்பதாக அறிவித்தார். அதேவேளையில் ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட எதிர்க்கட்சியினர் ராஜபக்ஷவின் அமைச்சரவையில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்து, ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறிய மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக அறிவித்தனர். மைத்திரிபால சிறிசேன 51.28% வாக்குகள் பெற்றதை அடுத்து 2015 ஜனவரி 9 ஆம் நாளன்று புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார். ராஜபக்ஷ 47.58 % வாக்குகள் பெற்றார்.

மொத்தமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் மைத்திரிபால சிறிசேன கொழும்பு, கம்பஹா, கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், பதுளை, பொலநறுவை ஆகிய 12 மாவட்டங்களில் முதலாவதாக வந்து வெற்றி பெற்றார். ராஜபக்ஷ களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல், அநுராதபுரம், மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய 10 மாவட்டங்களில் முதலாவதாக வந்தார்.

2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி ராஜபக்ஷவின் அரசாங்கம் அரசமைப்புக்கு 18 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியது. இதன்மூலம் அரசுத்தலைவர் ஒருவரின் அதிகபட்ச இரண்டு பதவிக் காலங்கள் முறை நீக்கப்பட்டது. இதன்மூலம் ராஜபக்ஷ மூன்றாம் முறையும் போட்டியிட சட்டப்படி அனுமதி கிடைத்தது.

2014 டிசெம்பர் 8 இல் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும், 2015 ஜனவரி 8 இல் தேர்தல் இடம்பெறும் எனவும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய 2014 ஆம் ஆண்டு நவெம்பர் 21 ஆம் திகதி அறிவித்தார். 2014 டிசெம்பர் 8 இல் 19 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்தனர். அனைவரதும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவர்களில் 17 பேர் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்தும், இருவர் சுயேட்சைகள் ஆகவும் போட்டியிட்டனர். டிசெம்பர் 23 , 24 ஆம் திகதிகளில் அஞ்சல் மூல வாக்களிப்பு இரண்டு நாட்களுக்கு இடம்பெற்றன. 2015 ஜனவரி 8 ஆம் திகதி நாடெங்கும் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் இலங்கை நேரம் 07:00 க்கு வாக்களிப்பு ஆரம்பித்து 16:00 மணிக்கு முடிவடைந்தது. 15.044,490 வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தார்கள்.

### 7வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2015

வட மாகாணம்

| வேட்பாளர் | யாழ் மாவட்டம் | | வன்னி மாவட்டம் | |
|---|---|---|---|---|
| | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| மைத்திரிபால சிறிசேன | 253,574 | 74.42% | 141,417 | 78.47% |
| மகிந்த ராசபக்ஷ | 74,454 | 21.85% | 34,377 | 19.07% |
| இரத்நாயக்கா சிறிசேன | 978 | 0.29% | 358 | 0.20% |
| நாமல் அஜித் ராஜபக்ச | 1,150 | 0.34% | 400 | 0.22% |
| இப்ராகிம் மிஃப்லார் | 1,620 | 0.48% | 563 | 0.31% |
| ஏ. எஸ். பி. லியனகே | 1,398 | 0.41% | 574 | 0.32% |
| ருவான்திலக்க பேதுரு | 942 | 0.28% | 453 | 0.25% |
| ஐத்துருசு எம்இலியாசு . | 978 | 0.29% | 356 | 0.20% |
| துமிந்த நகமுவ | 610 | 0.18% | 191 | 0.11% |
| சிறிதுங்க ஜெயசூரியா | 975 | 0.29% | 300 | 0.17% |
| சரத் மனமேந்திரா | 677 | 0.20% | 235 | 0.13% |
| பாணி விஜயசிறிவர்தன | 615 | 0.18% | 216 | 0.12% |
| அனுருத்த பொல்கம்பொல | 508 | 0.15% | 114 | 0.06% |
| சுந்தரம் மகேந்திரன் | 623 | 0.18% | 218 | 0.12% |
| முத்து பண்டார தெமினிமுல்ல | 568 | 0.17% | 133 | 0.07% |
| பத்தரமுல்லே சீலாரத்தன | 329 | 0.10% | 72 | 0.04% |
| பிரசன்னா பிரியங்காரா | 360 | 0.11% | 113 | 0.06% |
| ஜெயந்தா குலதுங்க | 214 | 0.06% | 67 | 0.04% |
| விமால் கீகனகே | 178 | 0.05% | 68 | 0.04% |
| செல்லுப்படியான வாக்குகள் | 340,751 | 97.14% | 180,225 | 98.14% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 10,038 | 2.86% | 3,416 | 1.86% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 350,789 | 66.28% | 183,641 | 72.57% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 529,239 | | 253,058 | |

### 7வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2015

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | % |
|---|---|---|---|
| மைத்திரிபால சிறிசேன | புதிய ஜனநாயக முன்னணி | 6,217,162 | 51.28% |
| மகிந்த ராசபக்ஷ | ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி | 5,768,090 | 47.58% |
| இரத்நாயக்கா சிறிசேன | தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி | 18,174 | 0.15% |
| நாமல் அஜித் ராஜபக்ச | நமது தேசிய முன்னணி | 15,726 | 0.13% |
| இப்ராகிம் மிஃப்லார் | ஐக்கிய அமைதி முன்னணி | 14,379 | 0.12% |
| ஏ. எஸ். பி. லியனகே | இலங்கை தொழிற் கட்சி, | 14,351 | 0.12% |
| ருவான்திலக்க பேதுரு | ஐக்கிய இலங்கை மக்களின் கட்சி | 12,436 | 0.10% |
| ஐத்துருசு எம்இலியாசு . | சுயேட்சை | 10,618 | 0.09% |
| துமிந்த நகமுவ | முன்னிலை சோசலிசக் கட்சி | 9,941 | 0.08% |
| சிறிதுங்க ஜெயசூரியா | ஐக்கிய சோசலிசக் கட்சி | 8,840 | 0.07% |
| சரத் மனமேந்திரா | புதிய சிங்கள மரபு | 6,875 | 0.06% |
| பாணி விஜயசிறிவர்தன | சோசலிச சமத்துவக் கட்சி | 4,277 | 0.04% |
| அனுருத்த பொல்கம்பொல | சுயேட்சை | 4,260 | 0.04% |
| சுந்தரம் மகேந்திரன் | நவ சமசமாஜக் கட்சி | 4,047 | 0.03% |
| முத்து பண்டார தெமினிமுல்ல | அனைவரும் குடிகள் அமைப்பு | 3,846 | 0.03% |
| பத்தரமுல்லே சீலாரத்தன | ஜன செத்த பெரமுன | 3,750 | 0.03% |
| பிரசன்னா பிரியங்காரா | சனநாயக தேசிய இயக்கம் | 2,793 | 0.02% |
| ஜெயந்தா குலதுங்க | ஐக்கிய இலங்கை பாரிய பேரவை | 2,061 | 0.02% |
| விமால் கீகனகே | இலங்கை தேசிய முன்னணி | 1,826 | 0.02% |
| செல்லுபடியான வாக்குகள் | | 12,123,452 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 140,925 | |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | | 12,264,377 | 81.52% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | | 15,044,490 | |

### 7வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2015

கிழக்கு மாகாணம்

| வேட்பாளர் | மட்டக்களப்பு மாவட்டம் | | திகாமடுல்லை மாவட்டம் | | திருகோணமலை மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | வாக்குகள் | % | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| மைத்திரிபால சிறிசேன | 209,422 | 81.62% | 233,360 | 65.22% | 140,338 | 71.84% |
| மகிந்த ராசபக்ஷ | 41,631 | 16.22% | 121,027 | 33.82% | 52,111 | 26.67% |
| இரத்நாயக்கா சிறிசேன | 522 | 0.20% | 446 | 0.12% | 263 | 0.13% |
| நாமல் அஜித் ராஜபக்ச | 441 | 0.17% | 307 | 0.09% | 237 | 0.12% |
| இப்ராகிம் மிஃப்லார் | 698 | 0.27% | 356 | 0.10% | 327 | 0.17% |
| ஏ. எஸ். பி. லியனகே | 882 | 0.34% | 543 | 0.15% | 387 | 0.20% |
| ருவான்திலக்க பேதுரு | 641 | 0.25% | 438 | 0.12% | 341 | 0.17% |
| ஐத்துருசு எம்இலியாசு . | 323 | 0.13% | 187 | 0.05% | 169 | 0.09% |
| துமிந்த நகமுவ | 306 | 0.12% | 234 | 0.07% | 270 | 0.14% |
| சிறிதுங்க ஜெயசூரியா | 258 | 0.10% | 197 | 0.06% | 214 | 0.11% |
| சரத் மனமேந்திரா | 370 | 0.14% | 169 | 0.05% | 164 | 0.08% |
| பாணி விஜயசிறிவர்தன | 180 | 0.07% | 69 | 0.02% | 88 | 0.05% |
| அனுருத்த பொல்கம்பொல | 187 | 0.07% | 117 | 0.03% | 99 | 0.05% |
| சுந்தரம் மகேந்திரன் | 238 | 0.09% | 92 | 0.03% | 89 | 0.05% |
| முத்து பண்டார தெமினிமுல்ல | 157 | 0.06% | 88 | 0.02% | 89 | 0.05% |
| பத்தரமுல்லே சீலாரத்தன | 89 | 0.03% | 57 | 0.02% | 52 | 0.03% |
| பிரசன்னா பிரியங்காரா | 108 | 0.04% | 55 | 0.02% | 44 | 0.02% |
| ஜெயந்தா குலதுங்க | 59 | 0.02% | 39 | 0.01% | 38 | 0.02% |
| விமால் கீகனகே | 74 | 0.03% | 36 | 0.01% | 36 | 0.02% |
| செல்லுப்படியான வாக்குகள் | 256,586 | 99.00% | 357,817 | 99.27% | 195,356 | 99.08% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,580 | 1.00% | 2,625 | 0.73% | 1,805 | 0.92% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 259,166 | 70.97% | 360,442 | 77.39% | 197,161 | 76.76% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 365,167 | | 465,757 | | 256,852 | |

(தொடரும்)

# திருமண பந்தத்தில் இணைந்தார் நாமல்







**எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் மகனும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்றுத் திருமண பந்தத்தில் இணைந்தார்.**

**பிரபல வர்த்தகர் திலக் வீரசிங்க தம்பதியினரின் மகளான 22 வயதுடைய லிமினி வீரசிங்கவையே நாமல் திருமணம் செய்தார்.**

**இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்வு வீரகெட்டியவிலுள்ள மகிந்தவின் கால்டன் இல்லத்தில் இடம்பெறவுள்ளது. (இ-7)**

# நல்லூர் பிரதேச சபை காணியில் உப்பு பொதியிடும் தொழிற்சாலை

## பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் உப்பு பொதியிடும் தொழிற்சாலை ஒன்றை நிறுவி அங்கு பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரி நல்லூர் பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் சி.கௌசல்யா பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.

நல்லூர் பிரதேச சபையின் 18ஆவது அமர்வு சபா மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இதன் போதே குறித்த பிரேரணையை முன்மொழிந்தார்.

அதில் அவர்மேலும் குறிப்பிடுகையில், நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய வேண்டும். உப்பு பொதியிடும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவி அதில் அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும்.

சபைக்குச் சொந்தமான காணி அரியாலை பகுதியில் உள்ளது.

அங்கு குறித்த தொழிற்சாலையை நிறுவி, ஆனையிறவு உப்பளத்தில் இருந்து உப்புக்களைப் பெற்று அங்கு பொதி செய்வதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க முடியும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட உணவகங்கள், திருமண மண்டபங்கள் போன்ற உணவு கையாளும் இடங்களில் பொலித்தீன் பாவனைகளை முற்றாகத் தடை செய்து அவற்றுக்கு மாற்றீடாக வாழையிலை பயன்பாட்டைக் கொண்டு வர வேண்டும்.

தற்போதே அதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதன் ஊடாகவும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு சபையால் குறித்த இடங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் போது, பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தி அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டும்.

பொலித்தீன் பாவனைக்கு மாற்றீடாக வாழை இலை பயன்பாடு வருமாக இருப்பின் அதன் ஊடாக வாழைச் செய்கை விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் அதிகரிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இராணுவக் கட்டமைப்பில் மாற்றம்

(கொழும்பு)

இராணுவத் தளபதியாக, லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா பொறுப்பேற்றதையடுத்து, இராணுவக் கட்டமைப்பில் அதிரடியாக பல உள்ளக மாற்றங்களைச் செய்து வருகிறார்.

இதற்கமைய, 53 ஆவது டிவிசனில் இருந்த மேஜர் ஜெனரல் அதுல கொடிப்பிலி, இராணுவத் தலைமையக பொது அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

முல்லைத்தீவு இராணுவத் தலைமையகக் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் துஷான் ராஜகுரு, கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டார்.

இராணுவத் தலைமையக பொது அதிகாரியாக இருந்த, மேஜர் ஜெனரல் ஜயந்த செனிவிரத்ன, முல்லைத்தீவு இராணுவத் தலைமையக கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

மேஜர் ஜெனரல், பிஜே கமகே 53 ஆவது டிவிசனின் கட்டளைத் தளபதியாகவும் இராணுவ காலாட்படை பயிற்சி பாடசாலை தளபதியாக பிரிகேடியர் திலக் ஹங்கிலிபொலவும் நியமிக்கப்பட்டனர்.



அதேவேளை, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பிரிகேடியர் சூல கொடிதுவக்கு, 53 ஆவது டிவிசனின் பிரதிக் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

பிரிகேடியர் நிவுன்ஹெல்ல புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர இராணுவத் தலைமை அதிகாரி பணியகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் சூல கொடிதுவக்கு, 53 ஆவது டிவிசனின் இரண்டாவது நிலை கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டமை, அவர் பதவியிறக்க நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதைக் காட்டுவதாக தகவல்கள் வெளியாகின. (இ-7)

# கோத்தாவை விசர் நாயுடன் ஒப்பிட்ட ரஞ்சன்

(கொழும்பு)

விசர் நாய் ஒன்று வந்தால், அதன் தலையைத் தடவி கொடுப்பார்களா? அல்லது தொப்புளைச் சுற்றிப்போடும் 21 ஊசிகள் நினைவுக்கு வந்து ஓட்டம்பிடிப்பார்களா? என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கேள்வி எழுப்பினார்.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட பிரச்சினைகள் எதுவுமில்லை. கோத்தபாய மீது யாருக்கு அச்சமில்லை. அனைவருக்கும் அச்சம் இருக்கின்றது.

ஊடகவியலாளர்களுக்கும் அச்சம் உள்ளது. உங்களில் எத்தனை பேரைக் கொன்றார். 36 ஊடகவியலாளர்களைக்கொலை செய்தவரை ஊடகவியலாளர்கள் விரும்புவார்களா? விரும்புவதில்லை. அவரைப் பார்க்கும் போது ஓடி விடுவார்கள்.

ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தியது யார் என்பது அனைவருக்கும் தெரியும். கோத்தபாயவுக்கு மகிந்தவும் பயம். நாமல், ஷிராந்தி என அனைவரும் பயம்.

அவர் ஆட்சிக்கு வந்தால், தனக்குப் பிரச்சினையாகிவிடும் என்பது நாமலுக்குத் தெரியும். கோத்தபாய கட்டுப்பாடு இல்லாத மனிதன். மகிந்த இதனை அந்தக் காலத்தில் தனிப்பட்ட ரீதியில் கூறியுள்ளார்.

கோத்தபாயவைக் கட்டுப்படுத்த முடியாதாம், அவருக்கு கோபம் வருமாம். லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்யும் முன்னர் நடந்த தொலைபேசி உரையாடலின் பதிவுகள் இருக்கின்றன.

கோத்தபாயவைப் பார்த்தால் மக்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடுவார்கள்.

அது அவருடைய வரலாறு. அவர் கொலை செய்துள்ளார். கொள்ளையடித்துள்ளார். மக்கள் கோத்தபாயவுக்கு பயம், ஆனால் அவர் நீதிமன்றத்திற்கு பயம்.

நீதிமன்றம் என்றதும் அவர் தப்பியோடி விடுவார். நீதிமன்றம் என்றதும் இல்லாத நோய்கள் அவருக்கு ஏற்படும். நீதிமன்றத்திற்கு பயந்து சிங்கப்பூரில் ஒளிந்



துகொண்டார். இவை எல்லாம் அனைவருக்கும் தெரிந்த கதைகள்.

என்னிடம் நீங்கள் அச்சமின்றி பேசுகின்றீர்கள். கோத்தபாயவுடன் பேசும் போது உங்கள் கைகள் நடுங்கும். ஊடகவியலாளர்கள் கோத்தபாயவிடம் கேள்வி கேட்கப் பயப்படுகின்றனர்.

அவரிடம் அவர் சம்பந்தப்பட்ட குற்றங்கள் தொடர்பான கேள்விகளை ஊடகவியலாளர்கள் கேட்பதில்லை. விசர் நாய் ஒன்று இந்த இடத்திற்கு வந்தால் ஓடுவீர்களா? தலையை தடவிக் கொடுப்பீர்களா?

விசர் நாய் வந்தால், தொப்புளைச் சுற்றி 21 ஊசி போடுவது நினைவுக்கு வந்து ஓடி விடுவார்கள். இப்படித்தான் கோத்தபாய வந்தாலும் பயந்து ஓடி விடுவார்கள் என ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

### நிதி ஒதுக்கீடு தொடர்பில்

# நகரசபை உறுப்பினர்களிடையே கட்சி ரீதியான முரண்பாடு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு காரணமாக சாவகச்சேரி நகர சபையில் உறுப்பினர்களுக்கிடையே கட்சி ரீதியான முரண்பாடு ஏற்பட்டது. நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போதே இந்த முரண்பாடு ஏற்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்கு பொருத்த அண்மையில் ஐந்து இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்தார். குறித்த நிதி ஊடாக பொருத்தப்படும் வீதி விளக்குகளை சபை அமைக்கும் காலத்தில் கூட்டமைப்பினை எதிர்த்தவர்களுக்கு வழங்கக் கூடாது என்ற அறிவுறுத்தலையும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக சபையில் இருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் குறித்த செயற்பாட்டிற்கு கண்டனம் தெரிவித்தனர்.

அத்துடன் சபையில் கட்சி ரீதியாக சபையைப் பிளவுபடுத்தும் சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டினர். கடந்த காலங்களில் சபை நிதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் கட்சி பேதம் பார்க்காமல் சகல வட்டாரங்களிலும் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# மின்சாரம் தாக்கியதில் வெளிநாட்டுப் பிரஜை பலி

(கொழும்பு)

ஜா - எல பகுதியிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் மின்சாரம் தாக்கி வெளிநாட்டு பிரஜை ஒருவர் உயிரிழந்தார். அத்தோடு குறித்த நபர் துருக்கி நாட்டைச் சேர்ந்த 19 வயது இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டிலிருந்து குறித்த தொழிற்சாலைக்கு கொண்டுவரப்பட்ட புதிய இயந்திரத்தை பொருத்திக்கொண்டிருக்கையில் எதிர்பாராத விதத்தில் மின்சாரம் தாக்கியது. இதனையடுத்து குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஒன்றுபட்ட தமிழினமாக எழுக தமிழ் பேரணியில் பேதங்கள் மறந்து பேரெழுச்சியுடன் பங்கேற்போம்

## தென் கயிலை ஆதீனம் அறைகூவல்

(திருகோணமலை)

தமிழ் மக்கள் பேரவையால் எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ். மண்ணில் நடத்தப்படவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் தமிழினம் என்ற ரீதியில் அனைவரும் பேதங்கள் மறந்து பேரெழுச்சியுடன் பங்கேற்க வேண்டுமென, தென் கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் அழைப்பு விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பண்பாடிழந்து, பொருளாதாரமிழந்து தமிழ்த் சமூகத்தின் இருப்பை இழந்து சொல்லொணாத் துயரை அனுபவித்தபடி இருக்கின்றோம். எங்களுடைய நிலம், கல்வி, பொருளாதாரம் மற்றும் கலை-கலாசார பண்பாடு யாவும் சீரழிக்கப்பட்டு எமது இருப்பைத் தொலைத்துக் கொண்டிருகின்ற இத்தருணத்திலே யாழ். மண்ணில் எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

இதில் தமிழினம் என்ற ரீதியிலே நாங்கள் ஒற்றுமை உணர்வுடன் சகல பேதங்களையும் மறந்து பேரெழுச்சியுடன் பங்குபற்ற வேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும். தமிழன் என்ற சொல்லிற்கு அர்த்தம் கொடுக்க நினைக்கும் ஒவ்வொரு தமிழனும் இப்பேரணியில் பங்கேற்க வேண்டும். எங்களின் எதிர்காலச் சந்ததியின் இருப்பை உறுதிப்படுத்த இப்பேரணியில் யாவரும் பங்குபற்ற வேண்டும்.

கன்னியா வெந்நீரூற்று பிரச்சினை, செம்மலை நீராவியடிப் பிரச்சினை மற்றும் தென்னைமரவாடி பிரச்சினை போன்ற அனைத்துப் பிரச்சினைகளையும் நாம் அனைவரும் உணர்வு ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் எதிர்கொண்டு எங்களுடைய மண்ணினது இருப்பையும் எமது எதிர்காலத்தையும் காப்பாற்றுவதற்காக நாங்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எந்தவித பாகுபாடும் இன்றி, எந்தவித பகையும் இன்றி, ஒருமித்த உணர்வோடு நடைபெறவிருக்கும் எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணியில் பங்கேற்போம் என தென் கயிலை ஆதீனக் குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மேலும் தெரிவித்தார்.



தமிழ் மக்கள் பேரவையால் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை யாழில் முன்னெடுக்கப் படவிருக்கும் எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணிக்கு ஆதரவு கோரியும் அதனை தேசமாக தமிழர்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடும் வகையில் நேற்று முன்தினம் தென் கயிலை ஆதீனக் குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளாருடன் தமிழ் மக்கள் பேரவையினர் சந்திப்பை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 11 தமிழர்கள் கடத்தல்

# வெள்ளை வான் தொடர்பாக பல்வேறு தகவல்கள் அம்பலம்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரைக் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக் கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவத்தில், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வெள்ளை வான் தொடர்பில் பல்வேறு தகவல்களை விசாரணைகளில் வெளிப்படுத்தியுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.) நீதிமன்றுக்கு அறிவித்தது.

54-9238 எனும் இலக்கத்தை கொண்ட குறித்த வெள்ளை வான், கடற்படையின் நடவடிக்கைப் பிரிவுப் பணிப்பாளரின் கீழ் வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டதாகவும் இந் நிலையில் கடத்தல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் கடற்படை நடவடிக்கைப் பிரிவுப் பணிப்பாளராக இருந்த அதிகாரியை விசாரித்து வாக்குமூலம் பெற நடவடிக்கை எடுத்ததாகவும் சி.ஐ.டி. கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்கவுக்கு அறிவித்தது.

இந்தக் கடத்தல்கள் மற்றும் காணாமல் ஆக்கல் விவகாரம் தொடர்பில் விசாரணை செய்யும் சி.ஐ.டியின் சமூகக் கொள்ளை தொடர்பிலான விசாரணை அறைப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா மேலதிக விசாரணை அறிக்கையுடன் இந்த விடயங்களை நீதவானுக்கு அறிவித்தார்.

அத்துடன் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்களைக் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக் கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில், எழுத்து மூலம் சி.சி.டி. எனும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அப்போதைய பணிப்பாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்கவுக்கு 2009 மே 27 ஆம் திகதி கிடைத்த உண்மை நிலைமைகள் மறைக்கப்பட்ட முறைப்பாட்டின் பின்னணியில் ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ உள்ளமை தொடர்பில், அவரை விசாரணை செய்ய தேவையான நீதிமன்ற உத்தரவை அவரிடம் கையளித்ததாகவும் மேலும் அவரை விசாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா நீதவானுக்குச் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, தெஹிவளை, வத்தளை மற்றும் கட்டுநாயக்க உள்ளிட்ட பல பிரதேசங்களில் பல்வேறு உத்திகளைக் கையாண்டு இந்தக் கடத்தல்கள் அரங்கேற்றப்பட்டிருந்தன. குறிப்பாக தெஹிவளையில் 2008.09.17 அன்று பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள அலி ஹாஜியார் அன்வர் என்பவரது வீட்டில் வைத்து அவரும் ரஜீவ நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹம்மட் திலான், மொஹம்மட் சாஜித் ஆகிய ஐந்து மாணவர்களும் கடத்தப்பட்டிருந்தனர். இதனைவிட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், மன்னார் - அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன் மற்றும் ரொஷான் லியோன், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையைச் சேர்ந்த தியாகராஜா ஜெகன் உள்ளிட்டோரும் கடத்தப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், அது குறித்து சி.ஐ.டியின் சமூகக் கொள்ளை விசாரணைப் பிரிவு விசாரித்து வருகின்றது. அது குறித்த நீதிமன்ற விசாரணைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இதன்போது இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள 15 பேரில் ஒருவர் சிறை அதிகாரிகளால் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் ஒருவரைத் தவிர ஏனையோர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மன்றில் ஆஜராகியிருந்தனர். முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவின்பாதுகாப்பு உத்தியோகத்தரும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றியிருந்தவருமான லெப்டினன்ட் கொமாண்டர் சம்பத் முணசிங்க, கடற்படைச் சிப்பாய் லக்ஷ்மன் உதயகுமார, நலின் பிரசன்ன விக்கிரமசூரிய, தம்மிக தர்மதாஸ, கித்சிறி மற்றும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் கடற்படை ஊடகப் பேச்சாளராகவும் அப்போது பதவி வகித்த கொமாண்டர் டி.கே.பி. தஸநாயக்க, கடற்படை உத்தியோகத்தர்களான கஸ்தூரிகே காமினி, அருணதுஷார மெண்டிஸ், சஞ்ஜீவ பிரசாத் திலங்க சேனாரத்ன, அண்ணாச்சி எனப்படும் இம்புலாவல உப்புல் சமிந்த, கடற்படைப் புலனாய்வாளர் ஹெட்டி ஹெந்தி, நீர்கொழும்பு படகு உரிமையாளர் என்டன் பெர்னாண்டோ, கடற்படை உத்தியோகத்தர் சம்பத் ஜனக குமார ஆகியோரே ஆஜராகியிருந்ததுடன் இரண்டாம் சந்தேக நபரான கன்சைட் நிலத்தடி இரகசிய வதை முகாமின் பொறுப்பாளராக அப்போது இருந்த லெப்டினன்ட் கொமாண்டர் தரத்தையுடைய தற்போது கொமாண்டராக பதவி உயர்த்தப்பட்ட சுமித் ரணசிங்க ஆஜராகவில்லை. அவர் வெலிசறை கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாக மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டது.

விளக்கமறியலிலுள்ள நேவி சம்பத் எனப்படும் லெப்டினன்ட் கொமாண்டர் ஹெட்டி ஆராச்சி முதியன்சலாகே சந்தன் பிரசாத் ஹெட்டி ஆராச்சி சிறை அதிகாரிகளால் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போது, மேலதிக விசாரணை அறிக்கையை சி.ஐ.டி.யின் சமூகக் கொள்ளை விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி நிசாந்த சில்வா சமர்ப்பித்தார்.

அத்துடன், நீதிமன்றின் ஆலோசனைக்கு அமைய பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோவை விசாரிப்பதற்கான உத்தரவு அவரிடம் கையளிக்கப்பட்டது.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வெள்ளை வான் தொடர்பிலான விசாரணைகளில் அந்த வான் கடற்படை நடவடிக்கைப் பிரிவுப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டது. எனவே அவரிடம் விசாரணை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்" எனக் குறிப்பிட்டார்.

இதனைவிட நீதிமன்றுக்கு முன்வைக்கப்பட்டுள்ள மேலதிக அறிக்கைகளின் பிரகாரம்,

"54 -9238 எனும் குறித்த வெள்ளை வான், கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் ஒருவருக்கு சொந்தமானது எனவும், அது வலஸ்முல்லை பகுதியிலுள்ள வாகன வாடகை நிறுவனம் ஒன்றிடம் வழங்கப்பட்டிருந்துள்ளமையும் அந் நிறுவனத்திடம் இருந்து கடற்படையினர் அதனை வாடகைக்குப் பெற்றுள்ளமையும் தெரியவந்தது.

அவ்வாறு வாடகைக்கு பெறப்பட்ட வான் அப்போதைய கடற்படை நடவடிக்கைப் பணிப்பாளர் நாயகமாக இருந்த கொலம்பகேவின் கீழ் இருந்ததுடன், அதனைப் பிரதி நடவடிக்கை பணிப்பாளராக இருந்த டி.கே.பி. தஸநாயக்கவின் ஆலோசனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய நேவி சம்பத் பயன்படுத்தியமைக்கான ஆவணங்கள் கிடைத்ததாகவும் அறிக்கைகள் ஊடாக நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டன.

இந் நிலையில் குறித்த வழக்கு விசாரணைகளில், விளக்கமறியலிலுள்ள நேவி சம்பத் எனும் ஹெட்டி ஆராச்சியை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், ஏனையோரை எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி மன்றில் ஆஜராக உத்தரவிட்டார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 130 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 160 | 300 |
| தக்காளி | 100 | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 120 |
| கோவா | 60 | 80 | 60 | 100 |
| கரட் | 80 | 120 | 90 | 120 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 |
| புடோல் | 80 | 80 | 60 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 180 | 160 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 115 | 140 |
| பாகற்காய் | 150 | 160 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 100 | 60 | 40 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 180 | 140 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 80 | 100 |
| போஞ்சி | 140 | 240 | 210 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 80 | 120 |
| கீரை-1பிடி | 40 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 280 | 300 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 240 | 150 | — |
| வெங்காயப்பூ | 200 | 140 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 120 | — |




# படிப்பது இராமாயணம்



அன்னதானம் சிறப்பாக நடந்து முடிந்து விட்டது. ராமலிங்கத்துக்குப் பெருமை தாங்கவில்லை.

"இந்த ஊரில உங்களை விட்டா இது மாதிரி நல்ல காரியங்கள் செய்ய வேறு யார் இருக்காங்க?" என்றார் கோவில் பூசாரி.

"பணம் சம்பாதிக்கிறதே அதை நல்ல வழியில் செலவழிக்கணும் என்கிறதுக்காகத்தானே? ஆத்தா குடுக்கறா. அதில கொஞ்சம் எடுத்து நான் மத்தவங்களுக்குக் கொடுக்கிறேன் அவ்வளவுதான்!"

பெருமையுடன் பக்கத்தில் நின்ற மனைவியைப் பார்த்தார்.

"எல்லாரும் என்னை அன்னபூரணின்னு சொன்னதைக் கேக்க ரொம்பப் பெருமையா இருந்ததுங்க" என்றாள் மரகதம்.

"பார்த்தியா பூசாரி? காசு செலவழிச்சு எல்லா ஏற்பாடும் பண்ணி அன்னதானத்தை நடத்தினது நான். ஆனா பளபளன்னு ஒரு பட்டுப் புடைவையைக் கட்டிக்கிட்டு வந்து பத்து நிமிஷம் என் பக்கத்தில நின்னு வேடிக்கை [illegible]த்திட்டு எங்க வீட்டு அம்மா அன்னபூரணின்னு பேரை வாங்கிட்டுப் போயிடறாங்க!"

"அப்ப நான் ஒண்ணுமே பண்ணலையாக்கும்" என்று பொய்க் கோபத்துடன் அங்கிருந்து விலகி சற்றுத் தூரத்தில் போய் நின்று கொண்டாள் அன்னபூரணி. பூசாரியும் ஒரு கும்பிடு போட்டு விட்டு விடை பெற்றுக்கொண்டார்.

இதற்காகவே காத்திருந்த மாதிரி எங்கிருந்தோ விரைந்து அவர் அருகில் வந்து நின்றான் அவரது ஆள் வெள்ளையன்.

"என்னடா வெள்ளையா எங்கே போயிட்டே? அன்னதானத்தின் போது உன்னைக் காணுமே? பண்ணையிலே ஏதாவது பிரச்னையா?" என்று விசாரித்தார் ராமலிங்கம்.

"பண்ணையிலே இல்லை ஐயா" என்று ஆரம்பித்தவன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "ஏங்க பண்ணை வீட்டுக்கு. யாரையாவது வரச் சொல்லியிருந்தீர்களா?" என்றான்.

"இல்லையே?" என்ற ராமலிங்கம் டக்கென்று நினைவு வந்தவராகக் கையை சொடக்கிக் கொண்டார். "ஐயையோ! அன்னதானத் திகதி ஞாபகம் இல்லாமல் இன்றைக்கு அந்தப் பிரமீளாவை வரச் சொல்லியிருந்தேனே! வந்திருந்தாளா?"

"ஆமாங்க நீங்க வர மாட்டீங்கன்னு நான் சொல்லியும் அந்தப் பொம்பளை போகாம ரெண்டு மணி நேரம் உட்காந்துட்டுத்தான் போச்சு. 'அவரு வந்தாலும் வராட்டாலும் நான் ஒப்புக்கொண்ட நேரத்துக்கு இருந்துட்டுத்தான் போகணும்'னு சொல்லுது."

"இதைச்சொல்லி வேலை செய்யாமலேயே எங்கிட்ட பணம் வாங்கிடணும்னு பாக்கிறா போலிருக்கு. ஆனா நான் பணம் கொடுத்துத்தான் ஆகணும். இல்லாட்டா மார்க்கெட்டுல என் பேரைக் கெடுத்துடுவா!" என்று சிரித்தார் ராமலிங்கம். "ஆகக்கூடி உன்னை அன்னதானத்துக்கு வர முடியாம அவளுக்குக் காவலா அங்கேயே உட்காரும்படி பண்ணிட்டா! சரி. சாப்பாடு மீதி இருக்கும். நீ உள்ள போய்ச் சாப்பிடு" என்றார்.

வெள்ளையன் உள்ளே போகத் திரும்பிய உடனேயே அருகில் யாரோ தொண்டையைச் செருமுவது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தார் மரகதம்!

சற்றுத் தூரத்தில் தள்ளி நின்றிருந்த இவள் எப்போது இங்கே வந்தாள்? தான் வெள்ளையனுடன் பேசியதைக் கேட்டிருப்பாளோ?

அவள் முகத்தைப் பார்த்தார். முகக்குறிப்பிலிருந்து எதுவும் தெரியவில்லை. அவளாகக் கேட்டாலே ஒழிய இதைப்பற்றி அவளிடம் கேட்கக் கூடாது. இனிமேல் யாரிடமாவது பேசும்போது ஜாக்கிரதையாகப் பேச வேண்டும்.

மரகதம் இரண்டு மூன்று முறை தொண்டையைச் செருமி விட்டு, நெஞ்சிலிருந்த கோழையை வாய்க்குக் கொண்டு வந்து மணல் தரையில் காறித் துப்பினாள்.

**குறள் 34:**

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற

**பொருள்:**

மனதில் எந்தத் தவறான எண்ணங்களும் இல்லாமல் தூய்மையாக இருப்பதுதான் அறம்.

மற்ற எதையுமே அறம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

## பொது அறிவுத் துணுக்குகள்

- பயங்கரவாத எதிர்ப்பு தினமாக அனுஷ்டிக்கப்படும் நாள்- மே 21
- தமிழில் 'அ' என்பது எந்த எண்ணைக் குறிக்கிறது 8
- அட்லசை கண்டுபிடித்தவர் லப்ரேரி அட்லஸ்.
- 'சட்டைவஸ்' தாவரத்தின் பூவின் உலர்ந்த சூல் முடிகளே 'குங்குமப்பூ'.
- சிங்கப்பூரில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கடலுக்குள் கண்ணாடி மாளிகை அமைக்கப்பட்டு உள்ளது.
- கங்காருதான் அதிக தூரம் தாண்டும் மிருகமாகும். அது ஒரே தாவுதலில் 13 மீற்றர் நீளம் தாண்டிவிடும்.
- தேனீக்கு இரண்டு இரைப்பைகள் உள்ளன. ஒன்று சேமிப்பு அறையாகவும் மற்றொன்று ஜீரண உறுப்பாகவும் பயன்படுகிறது.
- உலகிலேயே மிக நீளமான தாழ்வாரம் உள்ள இடம் ராமேஸ்வரம். 4 ஆயிரம் அடி நீளமுள்ளது.
- 1941 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதல்முதலாக ஜெட் விமானம் பறக்கவிடப்பட்டது.
- சிங்கப்பூரின் முந்தைய பெயர், டெமாஸெக்.

## பழமொழிகள்

- காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்.
- சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளை.
- உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
- பூமியைப்போல்பொறுமை வேண்டும்.
- கெரடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை என்பான்.
- காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.
- மத்தளத்திற்கு இரு புறமும் இடி.
- அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.
- கள்ளம் பெரிதோ? காப்பு பெரிதோ!

## பொன்மொழிகள்

- அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயற்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.
- கற்ற அறிவையும் பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.
- நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
- நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.
- சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.
- மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.
- உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்தீ பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.
- சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.

முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன்.
– நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எம் இனத்தின் வாழ்வுக்காக அனைவரும் ஒன்றுபடுவோம்

எதற்கும் எதிர்வாதம், எதற்கும் ஒத்துழையாமை, எதிலும் சந்தேகம், எதிலும் உண்மையைக் கண்டறிய விரும்பாமை என்ற நோய் எங்கள் மக்கள் சமூகத்தில் பரவி வருகிறது.

நன்றி நினைக்கப்படுவதில்லை. தியாகங்கள் போற்றப்படுவதில்லை. உண்மை மதிக்கப்படுவதில்லை. நீதி, நேர்மை பின்பற்றப்படுவதில்லை. மாறாக வஞ்சகமும் ஆசாடத்தனங்களும் போலிவேடங்களும் நடிப்புகளும் கபடத்தனங்களும் மேலெழுந்து மக்கள் சமூகத்தை அவற்றின் மீது நம்பிக்கை வைக்கத் தூண்டி விடுகின்றன.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழினம் தன் உரிமையை வென்றெடுக்க முடியுமா? என்ற கேள்வி எழுவது முற்றிலும் நியாயமானது.

ஆம், யுத்தம் முடிவுற்றதன் பின்னர் தமிழினம் பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றப்பட்டுள்ளதுடன் தமிழினத்தை துண்டு துண்டாக உடைத்து அவர்களின் இலட்சியத்தை சிதைக்கின்ற பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக தமிழினத்தின் அடையாளங்களை வேரறுக்க – அவற்றைத் தமக்குரியதாக்க சிங்களப் பேரினவாதம் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இவ்வாறானதொரு மோசமான சூழ்நிலையில் எங்கள் தமிழினம் இப்படியாக்கப்படுகிறதே என்ற கவலையும் வேதனையும் பலரையும் வாட்டி வதைக்கிறது.

எம் மண்ணில் நடந்த தியாகத்தைக் கூட மறந்து போகின்ற அளவில் எங்கள் இளம் சந்ததியை நவீன தொடர்பு சாதனங்கள் ஆக்கிரமித்துள்ளன.

இவ்வாறான மிகமோசமான சூழ்நிலையில் தமிழினத்தைக் காப்பாற்ற வல்ல உயர்ந்த அறமாக – பலமாக இருப்பது தமிழ் மக்களின் ஒற்றுமையாகும்.

ஆம், ஒற்றுமை என்ற மிகப்பெரும் அறத்தை நிலைநிறுத்திவிட்டால் அதுவே எங்களுக்கான உரிமையை வென்றெடுக்கும் பலமாக மாறும்.

இந்த உண்மை உணரப்பட்டதன் காரணமாகவே தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களை ஒன்றுதிரட்டி ஒற்றுமையை வெளிப்படுத்தி எங்களின் இலட்சியத்தை – எங்கள் தமிழினம் படும் இன்னல்களை – எங்கள் இனம் அழிக்கப்படுகின்ற நாசகாரத்தை சர்வதேசத்துக்கு முறையிடுகின்ற ஒரு பெரும் ஏற்பாடாக எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

தமிழினத்தின் ஒற்றுமைப்பலத்தை உலகெங்கும் எடுத்துக் காட்டுவதென்பது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களதும் பேராதரவில், பங்கேற்பில் தங்கியுள்ளது.

எனவே வெறுமையான பிரசாரங்களை, சந்தர்ப்பவாத தர்க்கங்களை உதறித்தள்ளிவிட்டு எம் இனம் வாழ வேண்டும். இனியும் நாம் ஒற்றுமைப்படாமல் இருக்க முடியாது என்பதை உணர்ந்து; அனைத்து தமிழ் உள்ளங்களும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்க வேண்டும். இது ஒன்றுதான் எங்கள் இனத்தை வாழ வைக்கும்.

ஆக, எங்கள் இனம் வாழ்வதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு பேரணியில் பேரலையாய் வீறுகொண்டெழுவோம்.

## பிக்குமார்களின் பெற்றோர்களுக்கான காப்புறுதித்திட்டம் விரைவில்- காமினி

(கொழும்பு)

பௌத்த பிக்கு குடும்பங்களின் நலன் கருதி எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் பௌத்த பிக்குகளின் பெற்றோர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்த தீர்மானித்ததாக புத்த சாசன , வடமேல் அபிவிருத்தி அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பலவருட காலமாக பிக்கு, பிக்குனி, துறவி ஆகியோரால் பௌத்த தர்மம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

எனவே அவர்களுக்குத் தேவையான நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில மூத்த விநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, சென்பீற்றர்ஸ் தேவாலயம், வேலக்கை பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, குளப்பிட்டி, வராகி பாடசாலை, சாவற்காடு, காக்கை தீவு, வேம்பிராய், கனகம்புளியடி, சரசாலை, கல்வயல், மட்டுவில் வீரகேணி, முத்துமாரி அம்மன் கோவிலடி, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2ம், 3ம், 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின்தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி, வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, **AVNOR** பிறைவேற் லிமிற்றெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ் புகையிரத நிலையம், **Green Grass** விடுதி, சிறிநதியா நகை மாளிகை, **Raja Talkies, LOLC,** ஞானம்ஸ் விடுதி, றொப்பாஸ், சிறுப்பிட்டி, குட்டியப்புலம், சுதந்திரபுரம், ஈவினை, நிலாவரை, புத்தூர், கலைமகள், ஊரணி, வீரவாணி, வாதரவத்தை, ஆவரங்கால், அச்சுவேலி, பெரியபொக்கணை, சுன்னாகம் ஒரு பகுதி, **Dr.** சுப்பிரமணியம் வீதி, ஐயனார் கோவிலடி, மயிலணி, மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், தெல்லிப்பளை, நீதிமன்ற கட்டடத் தொகுதி மல்லாகம், சுன்னாகம் மக்கள் வங்கி, சுன்னாகம் கார்கில்ஸ் பூட்சிற்றி, கீரிமலை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரதேசம், மாவை கலட்டி, கடற்படை முகாம் கீரிமலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

ஓசை விரிவடைந்தால் இசை
அசைவு விரிவடைந்தால் நடனம்
புன்னகை விரிவடைந்தால் சிரிப்பு
மனம் விரிவடைந்தால் தியானம்
வாழ்க்கை விரிவடைந்தால் விழா
பக்தன் விரிவடைந்தால் இறைவன்
உணாசசிகள விரிவடைநதால மெய மறநத இனபம
வெறுமை விரிவடைந்தால் பேரின்பம்

கேள்வி: வெறுமை என்றால் என்ன?

ஸ்ரீஸ்ரீ: வெறுமை (சூன்யம்-**Emptiness**) என்பது ஆசாபாசங்கள் கொண்ட இவ்வுலகிற்கும் ஆன்மீக உலகிறகும இடையே உளள நுழைவாயில. இஙகே தான நீ ஆன்மாவின் இயல்பைப் புரிந்து கொள்கிறாய். நீ வெறுமையை அறியவில்லையென்றால் நீ இருத்தலின் மகிழ்ச்சியையும் நீ அறிய முடியாது. நீ நீயாக இருப்பதை அனுபவிக்கும் சாமர்த்தியம் தான் வெறுமையை விளைவிக்கிறது. வெறுமையிலிருந்து தான் முழுமை (பூரணம்) தொடங்குகிறது.

வெறுமையின் ஒரு பக்கம் துன்பம், மறுபக்கம் இன்பம்.

இந்த முழு உலகமும் துன்பம், நாம் அடைய வேண்டியது வெறுமை என்று புத்தரும் சொன்னார்.

## வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த் திருவிழாவை முன்னிட்டு நெல்லியடி வர்த்தக நிலையங்களுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டது.

இதற்குப் பதிலாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (மட்டும்) வர்த்தக நிலையங்கள் திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

எனவே வர்த்தகர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு நெல்லியடி வாணிபர் கழகம் கேட்டுக் கொண்டது. (இ-5-60)

## யாழில் விவசாயக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு நஞ்சற்ற உணவு உற்பத்தியில் தன்னிறைவு நோக்கி'' எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய வளாகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொள்வார். (இ-2)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

கோளறு பதிகம் 9 ஆவது பாட்டில் பசுவேறும் எங்கள் பரமன் என்று சிவபெருமானை அடியார் குறிப்பிட்டிருக்கின்றார். சிவபெருமானின் வாகனம் 'எருது' என்றாலும் பசு என்ற சொல்லுக்குக் 'கட்டுப்பட்டது' என்பது பொருள். பச் என்ற தாதுவிலிருந்து பசு என்ற சொல் வந்தது. ஆகவே கட்டுப்பட்டது தானே. ஆனால் உலகப் பெருவழக்கில் பசு என்பது பெண் இனத்தைக் குறிக்கின்றது. ஆராய்ச்சிப்படி பசு என்பது மாட்டின் பொதுப் பெயராகும். (தொடரும்)




## வீட்டில் செல்வச்சேர்க்கை அதிகரிக்க வேண்டுமா?

மனித்ரகளின வாழவில இடமபெறும தவிரகக முடியாத ஒரு தெயவ்கப பொருளாக சஙகு இருககிறது.

பிறந்த குழந்தைக்கு பாலூட்டும் சடங்கு செய்யும் போது வலம்புரி சங்கில் பால் ஊற்றி குழந்தைகளுக்கு ஊட்டுவதால் தெய்வங்களின் அருளாசிகள் அக் குழநதைகககு கிடைககிறது என நமபபபடுகினறது.

பல அற்புதமான தன்மைகளை பெற்றிருக்கும் சங்கில் ஒரு வகையான வலம்புரி சங்கு கொண்டு செயயதால வட்டில செலவ சேரககை அதிகரிககும என்று சொல்லப்படுகின்றது. அந்தவகையில் இந்த பரிகாரத்தை எப்படி செய்வது என்பதை பாரப்போம்.

பரிகாரம்

உங்களிடம் இருக்கின்ற சிறிய அளவிலான வலமபுரிசஙகை எடுததுககொணடு, அதில சுததமான நீரை நிரப்பி வடக்கு அல்லது கிழக்கு திசை பார்த்தவாறு நின்று கொள்ளுங்கள்.

அந்த சங்கை இடக்கரத்தில் வைத்துக்கொண்டு, உங்கள் வலது கரத்தை அந்த சங்கின் மீது வைத்து மூடி கண்களை மூடி கொள்ளுங்கள்.

பின்னர் "ஓம் சுதர்சனாய நமஹ" "ஓம் மஹா விஷ்ணவே நமஹ" என்கிற மந்திரத்தை குறைந்தது 108 முறை 1008 ஒருவரை துதிதது முடிதத பின அநத சங்கு தீர்த்தத்தை சிறிது உங்கள் வலது கையில் விட்டு, அநத நரை உஙகள தலையில தெளிதது, மணடும சிறிது நரை வலது கையில வடடு தரததமாக அருநத வேண்டும்.

நன்மைகள்

இந்த சங்கு பரிகாரத்தை செய்த பிறகு நீங்கள் வெளியில் செல்கின்ற எந்த ஒரு காரியமும் உங்களுக்கு சாதகமாக முடியும.

முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். உடல் மற்றும் மனதில் ஆன்மிக பலம் பெருகும். தெய்வீக அருள் அதிகரிக்கும். செல்வங்களின் சேர்க்கை பன்மடங்கு பெருகும்.

மேலும் தோஷங்கள், திடீரென ஏற்படும் ஆபத்துகள் விலகும். இந்த சங்கு பரிகார முறையில் மிகவும் சிறந்த பலனகளை பெற சஙகு தரததததில இரணடு துளசி இலைகளை விட்டு அந்த நீரை அருந்துவது பலன்கள் பன்மடங்கு பெருகச் செய்யும்.

# இரண்டு வருடங்களுக்கு பிறகு இந்தியா- இலங்கை இணையும் ரி-20




இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் முடிந்த கையோடு, அனைத்து அணிகளும் அடுத்த ஆண்டு அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ண தொடருக்கு தயாராகிவிட்டன.

இதனால், ரி-20 உலகக் கிண்ண தொடருக்கு தயாராகும் வகையில், ஒவ்வொரு அணிகளும் போட்டி போட்டுக் கொண்டு, ரி-20 போட்டிக்கான அட்டவணையை தயார் செய்து வருகின்றன.

இந்த நிலையில், இந்திய அணி இலங்கையுடன் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாட தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, இத்தொடரை பெரும்பாலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் இதற்கான பேச்சுவார்த்தை ஆரம்ப கட்டத்திலேயே உள்ளதாகவும் இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெகுவிரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான் தொடர் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே சிம்பாவே மற்றும் அவுஸ்ரேலியா அணிகள் இந்தியா வந்து விளையாடுகின்றன. தற்போது இலங்கை அணியும் இந்தியா வந்தால் போட்டி அட்டவணையை தயாரிக்க இந்தியாவுக்கு கடினமான நிலை ஏற்படும்.

ஆனால், ஒரு வாரத்திற்குள் மூன்று போட்டிகளையும் நடத்த இந்தியா திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ஐ)

# மகளுக்கு டுவிட்டரில் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்த இலங்.வீரர்



இலங்கை அணியின் முன் னாள் வீரர் திலன் சமரவீரா தனது மகளுடன் இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டு பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்காக 81 டெஸ்ட் போட்டி களில் விளையாடிய சமரவீரா 5462 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

மேலும் 53 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 862 ஓட்ட ங்கள் எடுத்துள்ளார்.

சமரவீராவுக்கு இரந்தத்தி என்ற மனைவியும் ஒசுனி மற்றும் சித்யா என்ற இரண்டு மகள்களும் உள்ளனர். இதில் மூத்த மகள் ஒசுனுக்கு நேற்று 18 ஆவது பிறந்தநாள் ஆகும். இதையடுத்து டுவிட்டரில் தனது மகளுடன் இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டுள்ள சமரவீரா அவருக்கு 18 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (ஐ)


## வடமாகானே சுற்றுலாத்துறை விபரக்கொத்து (Northern Province Tourism Directory) வெளியிடுதல்

வட மாகாணத்தில் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் வட மாகாண சுற்றுலாப் பணியகம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அந்தவகையில், வட மாகாணத்தில் இயங்கி வருகின்ற, சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய சேவை வழங்குநர்களின் தொடர்பு விபரங்கள் அடங்கிய விபரக்கொத்து ஒன்றினை கட்டணங்கள் எதுவுமின்றி, வெளியிட தீர்மானித்துள்ளது. இதன் மூலம் வட மாகாணத்திற்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகள் தங்களுக்குத் தேவையான சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் இதனால் சேவை வழங்குநர்களும் நன்மையடைய முடியும் என எண்ணப்படுகின்றது. இவ்விபரக்கொத்தில் பின்வரும் வகுதிகள் (Categories) இணைத்துக்கொள்ளப்படவுள்ளன:

- சொகுசு விடுதிகள், ஓய்வு விடுதிகள், விருந்தினர் விடுதிகள்
- சுற்றுலா பங்களாக்கள், பாரம்பரிய பங்களாக்கள், குறுகிய கால வாடகை வீடுகள்
- உணவகங்கள், பாரம்பரிய உணவகங்கள்
- சிற்றுண்டி உணவகங்கள், ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள், உடன் பழச்சாறு விற்பனை நிலையங்கள்
- கைப்பணிப் பொருட்கள் விற்பனையகம், பரிசுப் பொருட்கள் விற்பனையகம்
- சுற்றுலாப் பயண முகவர் நிலையங்கள், வாடகை வாகன சேவை நிலையங்கள்

எனவே, தங்களது வியாபார நிலையத்தின் பெயர், வியாபார வகுதி, அமைந்துள்ள முகவரி, தொலைபேசி இலக்கங்கள், தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி, இணையத்தள முகவரி என்பவற்றினை உள்ளடக்கிய கடிதத்தினை **"தலைவர், சுற்றுலாப் பணியகம், வட மாகாணசபை வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 25-09-2019ந் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளக் கூடியவகையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்வதோடு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வட மாகாண சுற்றுலாத்துறை விபரக்கொத்து"** என குறிப்பிடவும்.

மேலதிக தகவல்களுக்கு **0775188773 / 0212217311** என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**சுற்றுலாப் பணியகம்,**
**வடமாகாணம்.**

(C-7584)



## புகைப்படப் போட்டி

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினால்பின்வரும் கருப்பொருளில் நடாத்தப்படும் புகைப்படப்போட்டி - 2019

கருப்பொருள்:"சுற்றுலாத்துறை வேலை வாய்ப்புக்கள் மூலம் - அனைவருக்குமான சிறந்த எதிர்காலம்"
**(Tourism and Jobs: A better future for all".)**

| | | |
|---|---|---|
| **முதலாம் பரிசு: ரூபா 10,000/-** | **இரண்டாம் பரிசு: ரூபா 7,500/-** | **மூன்றாம் பரிசு: ரூபா 5,000/-** |

**போட்டிவிதிமுறைகள்**

போட்டியில் பங்குகொள்பவா

❖ வடமாகாணத்தை வசிப்பிடமாக கொண்டவர்கள் அனைவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியும்.

❖ ஒருவர் ஒரு புகைப்படத்தை மட்டுமே சமர்ப்பிக்கமுடியும்.

சமர்ப்பிக்கப்படும் புகைப்படம்

❖ மேற்படிகருப்பொருளினையும், வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையினை பிரதிபலிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

❖ இதுவரை எடுக்கப்பட்ட ஏனைய புகைப்படங்களிலிருந்தோ, ஏனைய மூலங்களிலிருந்தோ பிரதிசெய்ததாக இருத்தல் கூடாது.

❖ ஆக்கவுரிமை புகைப்படத்தை சமர்ப்பிப்பவருக்கே இருத்தல் வேண்டும்.

❖ புகைப்படத்தின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவை பாதிப்படையக்கூடாது என்பதற்காக புகைப்படத்தில் எந்தவொருவா்ண மேம்பாடு மற்றும் ஏனைய மாற்றங்களை(**Editing**) ஏற்படுத்தக்கூடாது.

❖ புகைப்படத்தின் அளவு - **15 inchx 10 inch**

❖ புகைப்படம் அச்சிடும் தாள் - **MATT**

❖ மூவா்ண சேர்க்கையில்(**RGB**) தெளிவுத்தன்மையுடையதாக இருத்தல் வேண்டும்.

❖ கடந்த ஒருவருடகாலத்திற்குள் எடுக்கப்பட்ட புகைப்படமாக இருத்தல் வேண்டும்.

புகைப்படம் சமர்ப்பிக்கும் முறை

❖ புகைப்படத்தை**MATT**வகைதாளில் **(15 inch x 10 inch)** அச்சிட்டுதாளின் மறுபக்கத்தில் புகைப்படத்திற்கு உரித்துடையவரின்-பெயர்,விலாசம், அடையாளஅட்டை இலக்கம்,தொலைபேசி இலக்கம என்பவற்றை குறிப்பிட்டு, பின்வரும் முகவரிக்கு நேரடியாக அல்லது தபால மூலம் கிடைக்கக்கூடியவாறு, 27.09.2019 ஆம் திகதிக்குமுன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அதேசமயம் புகைப்படத்தின் மென் பிரதியை உரிய விபரங்களுடன்(.jpeg format, Max 20Mb size)tourismnorth.srilanka@gmail.comஎனும் மின்னஞ்சல் முகவரிக்கு மேற்குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

*"தலைவர், சுற்றுலாப் பணியகம், வடமாகாண சபை வளாகம்,A9வீதி, கைதடி."*

❖ கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் **"உலக சுற்றுலாதினம் - 2019 : புகைப்படப்போட்டி"**என தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

❖ மேற்குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் புகைப்படங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

❖ இப்போட்டியில் சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் வடமாகாணசுற்றுலாப் பணியகத்தின் உரிமையாண்மைக்குரியதாக்கப்படுவதுடன்,சுற்றுலாப் பணியகத்தினால் வெளியிடப்படும் சுற்றுலாத்துறைசார்ந்த வெளியீடுகளில் பயன்படுத்தப்படவுள்ளன.

❖ இப்போட்டியின் முடிவுகளைசுற்றுலாப் பணியகத்தினால் நியமிக்கப்படும் நடுவர் குழுவே தீர்மானிப்பர்.

❖ போட்டி தொடர்பான மேலதிக தகவல்களுக்கு **021-221 7311/ 077-305 3249**எனும் தொலைபேசி இலக்கங்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

(C-7585)

**தலைவர்,**
**சுற்றுலாப் பணியகம்,**
**வடமாகாணம்.**

## மனித உரிமை...

யளித்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதத்திற்கும், ஐரோப்பிய ஒன்றிய கவுன்ஸிலின் தலைவர் டொனால்ட் டஸ்க்கிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இவை தொடர்பில் கலந்துரையாடப் பட்டது.

இச் சந்திப்பின் போது இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் அண்மைக் காலமாக வலுவடைந்திருக்கும் இருதரப்பு உறவு குறித்தும், இலங்கைக்கு மீண்டும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டமை தொடர்பிலும் இருதரப்பினராலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

மேலும் தற்போது இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் காணப்படுவதுடன், அதனுடனான வாணிபத்தின் மூலமான வருடாந்த வருமானம் 5 பில்லியன் யூரோவிற்கும் அதிகமாக உள்ளமை குறித்தும் ஆராயப்பட்டது. (ம-3)

## படையினர் வச...

படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

காணி விடுவிப்பு தொடர்பாக நேற்று வியாழக்கிழமை காலை கிளிநொச்சியில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே வடக்கு ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுமக்களின் காணிகள் தொடர்பாக நேற்று ஆராயப்பட்டதாகவும் இதுவே காணி விடுவிப்புக்கான ஆரம்ப வெற்றியென்றும் தெரிவித்தார். மேலும் இதற்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த கலந்துரையாடல் அமைதியான முறையில் எவ்வித வாக்குவாதங்களும் இல்லாது சுமுகமாக இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுவிக்கப்படக்கூடிய காணிகள் இனங்காணப்பட்டதாகவும் அந்த பட்டியல் நீண்டு காணப்படுவதாகவும் வடக்கு ஆளுநர் தெரிவித்தார். (ம-3)

## நல்லிணக்கத்தை...

பதாக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையின் தாமதங்களை கண்டித்து தற்போது மனித உரிமைகள் பேரவையில் இணை அனுசரணை நாடுகளின் சார்பில் பிரித்தானியா கொண்டு வந்துள்ள அறிக்கையை நாம் முழுமையாக ஆதரிப்பதாகவும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 42 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையின் தாமதங்கள் குறித்து இணை அனுசரணை நாடுகள் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## நினைவுச் சின்...

முன்னெடுக்க வேண்டும். அதற்கான நிதியுதவியை வழங்க வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான ஐ.நா குழு கோரியுள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பில் தேசிய உள்ளூர் நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும். அதற்கான நிதிஉதவிகளை வழங்க வேண்டும் என ஐ.நா. குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளும் போது அவர்களை நினைவு கூருவதற்கான நினைவுசின்னங்களும் வாய்ப்புகளும் குறைந்தளவே உள்ளதாக ஐ.நா. குழு கவலை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. (ம-3)

## குடுவுடன் ஒரு...

றில் குடுவினை விற்பனை செய்வதாக இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த நபர் நேற்று 2 கிராம் குடுவுடன் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார். (ம-3,10)

## பாணின் விலை...

சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த் தன இதனை தெரிவித்துள்ளார். முன்னர் அறிவிக்கப்பட்டபடி கோதுமை மாவின் விலை 5.50 சதத்தால் உயர்த்தப்படாது என தெரிவிக்கப்பட்டதையடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிறிமா நிறுவனம் கோதுமை மாவின் விலையை 5.50 ரூபாயால் உயர்த்தியதை அடுத்து பாணின் விலை கடந்த வாரம் 2 ரூபாயால் உயர்த்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தமிழர்கள் அனைவரும் அணி திரண்டு...

ஒழுங்கு செய்யப்பட்டுள்ள எழுக தமிழ் நிகழ்வில் தமிழர் அனைவரும் அணிதிரள தமிழர் மரபுரிமைப் பேரவை வேண்டி நிற்கின்றது.

தமிழர் தம் மரபுசார் வாழ்நிலங்கள் விளைபுலங்கள் வன்கவர்வு செய்யப்பட்டு தமிழர் மரபில் அந்நிலங்களிற்கு வழங்கப்பட்டு வந்த காரண இடுகுறி பெயர்கள் மாற்றப்பட்டு சிங்கள புனை பெயர்கள் இடப்பட்டு திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் கேட்பாரற்று மேற்கொள்ளப்பட்டு இதன் மூலம் இலங்கைத்தீவின் தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழரின் இனப்பரம்பல் கோலம் இன விகிதாசாரம் என்பவை திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றன.

தமிழர்களின் தொன்மை வரலாற்றின் சாட்சிகளான வணக்கஸ்தலங்கள் தகர்க்கப்பட்டு பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்படுவதை தடுக்க முடியாத அரசியல்க் கையறு நிலையில் தமிழினம் தவிக்கின்றது.

தமிழர் தாயகப் பிரதேசத்துடன் இணைந்த கடற்பரப்பில் அத்துமீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் சிங்கள மீனவர்களின் தான்தோன்றித்தனத்தை கட்டுப்படுத்தாது அதற்கு தூபமிடுவதாகவே அரசியந்திரம் செயற்பட்டு வருகின்றது. இதனால் தமிழ் மீனவர்களின் அன்றாட வாழ்வு வினாக்குறியாகி உள்ளது.

அரசியல் கைதிகள் கேட்பாரற்று தசாப்தங்கள் கடந்தும் சிறைக்கூடங்களில் சித்திரவதைகளை அனுபவித்து வர இறுதி யுத்தத்தின் இனப்படுகொலைகாரர்கள் தண்டனைகள் எதுவுமின்றி ஆட்சி பீடத்தின் அதிகாரக் கதிரைகளை அழகுபடுத்துகின்றனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான போராட்டங்கள் 931 நாட்களைக் கடந்துவிட்ட போதும் காத்திரமான முடிவுகள் எதுவும் கிடைத்து விடாத கையறு நிலையில் இலங்கைத் தீவின் இரண்டாம் தரப் பிரஜைகளாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்பொன்றிற்கு உட்படுத்தப்பட்டு தான் வாழும் தன் மரபுசார் நிலத்தில் மெல்ல மெல்ல இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்ற அபாய நிலையின் விளிம்பில் தமிழினம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

நிரந்தரமான, காத்திரமான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட்டாலன்றி இலங்கைத்தீவில் தமிழர்களின் இருப்பு வரிதாக்கப்பட்டு விடும் என்பது அரசியல் பொது வெளியில் அனைவராலும் உணரப்பட்ட போதிலும் ஒரு தீர்வுத்திட்டம் தொடர்பில் போர் ஓய்ந்து போன கடந்த ஒரு தசாப்தம் ஆறப்போடல்கள், இழுத்தடிப்புக்கள் உடன் கடந்து போயிற்று.

எனவே தமிழர்களாகிய நாம் அனைவரும் தமிழினம் வீழ்ந்து விடாது விழ விழ எழும் என்பதை சிங்கள பேரினவாத சக்திகளிற்கு உணர்த்தவும். தமிழ் இனத்தின் நிலையையும் கோரிக்கைகளையும் சர்வதேசத்திற்கு இடித்துரைக்கவும், அனைத்து வேறுபாடுகளையும் கடந்து தமிழினம் இவ் எழுக தமிழில் ஒன்றுபட வேண்டும் என்று தமிழர் மரபுரிமைப் பேரவை வேண்டி நிற்கின்றதென அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,281)

## எழுக தமிழ் எழுச்சி...

நோக்கிச் செல்லும்.

இதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் தமிழ் மக்கள் பேரவையும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு ஆதரவு வழங்குகின்ற அமைப்புகளும் செய்துள்ளன.

எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவிருக்கும் எழுக தமிழ் எழுச்சிப்பேரணிக்கு முன் எப்போதும் இல்லாத அளவில் மதத்தலைவர்கள், பொது அமைப்புகள், பல்கலைக்கழக சமூகம், அரசியல் கட்சிகள், பெண்கள் அமைப்புகள், உயர் கல்வி மாணவர்கள், தொழிற் சங்கங்கள், வர்த்தக அமைப்புக்கள் எனப் பலரும் ஆதரவு வழங்கியுள்ளதால் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் குறைந்தது ஒரு இலட்சம் மக்கள் பங்கேற்பர் என மதிப்பிடக்கூடியதாக உள்ளதென்று சமூக நோக்கர்களும் அரசியல் அவதானிகளும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம)

## எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அனைவரும் ஒன்றி...

வடிவங்களில் பல்வேறு அமைப்புக்களாக பல தியாகங்கள் அர்ப்பணிப்புக்களோடும் இதயசுத்தியோடும் போராடி வந்திருக்கின்றோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும், இத்தனை முயற்சிகள் மத்தியிலும் நாம் முழுமையான வெற்றியோ திருப்தியோ காணமுடியவில்லை என்ற உண்மைக்கான அடிப்படையான காரணம் நாம் எப்பொழுதுமே ஒரே தமிழ் இனமாக இவற்றை மேற்கொள்ளவில்லை என்பதே யாகும்.

நாமாக எமக்குள்ளே ஏற்படுத்திக்கொண்ட பேதங்களை பிரிவினைகளை பலர் பயன்படுத்தியதே எமது பின்னடைவுகளுக்கான முக்கிய காரணமாகும்.

எவரையும் அச்சப்பட வைக்கின்ற ஒரு ஒன்றுபட்ட தமிழினமாக நாம் இதுவரை எம்மை அடையாளப்படுத்திக்கொள்ளவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

இப்படியான நிலை மாறி தமிழ் மக்கள் அனைவரும் கட்சி மத மற்றும் எவ்வித பேதமும் இன்றி ஒன்றுபட்ட ஒரே இனமாக ஒரே குடையின்கீழ் ஐக்கியமாக வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படும் மிக அவசியமான நிகழ்வே "எழுக தமிழ்" ஆகும்.

சிங்கள பௌத்த மயமாக்கல் தவிர்க்கப்படவும் சர்வதேச போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கக் கோரியும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விசாரணையை நடாத்தக்கோரியும் வடக்குக் கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்த வலியுறுத்தியும் மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தவும் உடனடி நடவடிக்கைகள் வேண்டி தமிழ் மக்களின் குரல் ஒரே குரலாக ஒலிக்கின்ற ஒரு நிகழ்வாக இவ் "எழுக தமிழ்" அமைகிறது.

அத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் மென்மேலும் கட்சி ரீதியாக மத ரீதியாக பிரிவினை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஒரு பிளவுபட்ட இனமாகவே அடையாளப்படுத்தி அதனால் பலர் தனிப்பட்ட இலாபம் அடைய எடுக்கப்படும் முயற்சிகளுக்கு சவால் விடுகின்ற தளமாகவும் இந் நிகழ்வு இடம்பெறுகின்றது.

எனவே தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படும் இந் நிகழ்வுக்கு அனைவரும் தங்கள் ஆதரவை நல்க வேண்டும் என்றும் நாம் ஒன்றுபட்ட தமிழினம் என்பதை உலகெங்கும் பறைசாற்றும் நிகழ்வாக இந் நிகழ்வு மிளிர ஒத்துழைக்க வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எவ்வித தனிப்பட்ட ஆதாயத்தையும் தேடாமல் தமிழ் மக்களின் மாண்புடன் கூடிய விடுதலை வாழ்வையே ஒரே நோக்கமாக கொண்டு முன்னெடுக்கப்படும் இந் நிகழ்வு தமிழ் எழுச்சியுற வழிசமைப்பதாக என யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

அத கோடிபதி — சீட்டிழுப்பு இல: 729 வர்ணம் : நீலம் சீட்டிழுப்பு திகதி: 2019.09.12 விசேட இலக்கம் 6307 வெற்றி இலக்கங்கள் 19 41 51 61 ஆங்கில எழுத்து M

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1039 சீட்டிழுப்பு திகதி 12.09.2019 பச்சை N 31 61 68 70

ராசி — திகதி 12.09.2019 வெற்றி வாரம் 2615 வர்ணம் கபிலம் வெற்றி இலக்கங்கள் இடபம் 01 25 48 49 வெள்ளிக்கிழமை வெற்றி பொதி ரூ. 3,143,404

ஜயோதா — உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 1603 சீட்டிழுப்பு திகதி 12/09/2019 வெற்றி இலக்கங்கள் 15 39 41 60 ஆங்கில எழுத்து E ரூ. 37,479,552

வாசனா சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1560 திகதி 2019/09/12 ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 13 14 49 70

மஹஜன சம்பத — திகதி 2019/09/12 சீட்டிழுப்பு இலக்கம் 4004 K 3 4 0 7 5 7

கொவிசெத — திகதி 2019.09.12 சீட்டிழுப்பு இலக்கம் 2238 B 25 54 58 63

நீரோகா — திகதி 2019/09/12 சீட்டிழுப்பு இலக்கம் 597 மீனம் 51 52 65 71

### விமர்சனங்களை தாங்கிக் கொண்டு

# நாட்டுக்கு சேவையாற்றுமாறு

## சஜித்துக்கு அஸ்கிரியபீடம் ஆலோசனை

(கொழும்பு)

விமர்சனங்களை பொறுமையுடன் தாங்கிக்கொண்டு நாட்டிற்கு சேவையாற்றுமாறு அஸ்கிரிய பீடம் நேற்று சஜித் பிரேமதாஸவிற்கு ஆலோசனை வழங்கியது.

அஸ்கிரிய மகா விகாரையின் மேற்கு நுழைவாசல் திறப்பு விழா நிகழ்வு நேற்று முற்பகல் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர், அமைச்சர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ புத்த சாசனத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றும் பணிகளை கௌரவிக்கும் வகையில் இதன்போது நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.

சஜித் பிரேமதாஸ மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரரையும் நேற்று சந்தித்து ஆசி பெற்றார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி மல்வத்து பீடம் சஜித் பிரேமதாசவின் சமய மற்றும் சமூக சேவையைப் பாராட்டி 'சாசன தீபன அபிமானி ஸ்ரீலங்கா ஜன ரஞ்சன' என்ற கௌரவ நாமத்தை வழங்கியிருந்தது. (ஞா)

### ஐக்கிய தேசியக் கட்சியின்

# வேட்பாளரைத் தீர்மானிக்க

## 4 பேர் கொண்ட குழு நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

தலைவர் மற்றும் பிரதித் தலைவருக்கிடையிலான சந்திப்பின்போது குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டதாகவும் தலைவரின் பக்கத்தில் இருந்து தினேஷ் வீரக்கொடியும் ராஜித சேனாரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், பிரதித் தலைவரின் பக்கத்தில் இருந்து மத்தும பண்டாரவும் கபீர் ஹாஷிமும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நவீன் திசாநாயக்க கூறினார்.

பல கணிப்பீடுகளை ஆராய்ந்து, சிங்கள பௌத்த வாக்கு வங்கி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகள் போன்ற விடயங்களை ஆராய்ந்து, அதிக வாக்குகளைப் பெற முடியுமான வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் என நவீன் திசாநாயக்க மேலும் குறிப்பிட்டார். (ஞா)

## வவுனியாவில் விபத்து; ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - வான் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதியான 22 வயதுடைய இளைஞன் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஞா-250)


சிங்கள, ஆங்கில வகுப்புக்கள்

இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் கற்பிக்கப்படும். விரும்புபவர்களுக்கு வீடுகளுக்கு வந்தும் தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

0759232451

கனரக வாகன (AD License) சாரதிகளுக்கு

சவுதி அரேபிய அரசாங்க அரம்கோ வேலைத்திட்டத்தில்

வேலைவாய்ப்புக்கள் 300 பேர்

பக்கோ லோடர் - கிறேன் - ஃபோக்லிஃப்ட் ஒப்பறேட்டர், A/C டெக்னீஷியன், மெக்கானிக், வெல்டர், ரயர் ஃபிற்றர், பெயின்ரர், வேலைவாய்ப்புக்களும் உண்டு...

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (C-7575)

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
077 00 38 215
077 55 46 956
021 221 9 221

221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம். The Lover/Teen Girls க்கு அருகே
email: jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg

0768226240
V2 TRAVELS

D.C.M - யாழ்.நகர்
(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)

Spoken English with Grammer

14.09.2019 சனி/ஞாயிறு மாலை
2.00 - 3.30 மணி
அடிப்படை அலகிலிருந்து.....
Lect by: Skb மனோகரன்
(அனுமதிகளை அலுவலத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கைநெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level I
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes.

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat [Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English

Certificate Course in English
19 Batches have successfully Completed the course. Register your names.

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS
விசேட வகுப்புக்கள்
வெள்ளி (இன்று)
சனி, ஞாயிறு
9.00 - 3.30
கணக்காளர் சேவை
சனி, ஞாயிறு
9.00 - 4.00
✦ கூடிய நேரம்
✦ குறைந்த கட்டணம்
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
(துன்னாலை வடக்கு, புலோலி)
வருடாந்த மஹோற்சவம் - 2019

தற்காலிக கடைகள் வழங்குதல்

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 28.09.2019 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எனவே மஹோற்சவ காலத்தில் தற்காலிகமாகக் கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. கடைகள் தொகுதி வாரியாகப் பின்வரும் வகையில் அமையும்.

1. ஐஸ்கிறீம் 2. இனிப்பு வகை 5. கச்சான் கடலை
3. தேநீர்க்கடை 4. மணிக்கடை

முக்கிய குறிப்பு :-
✦ முதல் மூன்று கடைத்தொகுதிகளுக்கான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய ஏலத் தொகைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக் கணக்கில் அறவிடப்படும்.
✦ அக்கறையுடைய வர்த்தகர்கள் முன் கூட்டியே இட ஒதுக்கத்தைப் பெற்று அதற்கான வாடகைப் பணத்தை முழுமையாகச் செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
✦ இட ஒதுக்கீடு தொடர்பான விபரங்கள், விண்ணப்பப் படிவங்களை கோவில் கருமபீடத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 17.09.2019 வரை கருமபீடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.
✦ பகிரங்க ஏலம் 17.09.2019 செவ்வாய்க்கிழமை மு.ப.

தொடர்புகளுக்கு - 021-226 3074, 021-205 6644

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் அறங்காவலர் சபை
துன்னாலை வடக்கு, புலோலி
2019.09.10 (C-7572)

கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்


வீட்டு கையியக்க மெசின்


வர்த்தக கையியக்க மெசின்


வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

(8716)

தொடர்புகளுக்கு : 076 796 6000. 077 968 1118 (இலங்கை)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
இவ் 4164336006 இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ரொரன்ரோ, கனடா)

வாருங்கள்... விடுதலைப் பெருவிழா இலவசம்...

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி,
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!

நாற்சதுர சுவிசேஷ சபை,
முத்திரைச் சந்தி, நல்லூர்.

சுவிசேஷகர்
Rev.சைமன்



(169)

14 செப்ரெம்பர் 2019
சனிக்கிழமை
4.30P.M

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
673, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(157)

021 222 8093 No.17, Kandy Road, Jaffna.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.